ஐ.தே.க.வைப் பலவீனப்படுத்தும் ரணிலின் திருகுதாளங்கள் 05

மோடியின் குடியுரிமைச் சட்டம்: இந்துத்துவத்தின் இறுதிப் புகலிடம் 07









# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 429 • 27 டிசம்பர் 2019 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் அவ்வல் 1441 • விலை 40.00







# ஒவ்வொரு கிராமத்துக்கும் 20 இலட்சம்

## 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

ஒவ்வொரு கிராமத்தினதும் அபிவிருத்திக்கென 28 பில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது. அந்த வகையில் 14,021 கிராம சேவையாளர் பிரிவுகளிலுமுள்ள ஒவ்வொரு கிராமத்தினதும் உட்கட்டமைப்பு வசதிக்கென 2 மில்லியன் ரூபா புதிய வருடத்தில் ஒதுக்கப்படவுள்ளது. பிரதமரின் சுபிரி கமக் என்ற இந்த வேலைத் திட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் இந்தத் திட்டம் இளைஞர்களினதும் பெண்களினதும் சுய தொழில் மற்றும் தொழிற்துறைகளை இலக்காகக் கொண்டமையும். 9 வகையாக வகுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்திலிருந்து கிராமத்துக்குப் பொருத்தமானதை தெரிவுசெய்து கொள்ள முடியும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது. வீதிகள், பாலங்கள், வடிகான்கள் அமைத்தல், நெற்களஞ்சியங்களை திருத்தியமைத்தல், வாராந்த சந்தைகள், சிறுகடைகள் என்பன (பக். 15)



## ஓவல்வீவ் பணிகளை துரிதப்படுத்த உத்தரவு

அரச ஊழியர்களுக்கென பொரல்லை, வனாத்தமுல்லையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஓவல்வீவ் ரெஸிடன்ஸி நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு நகர அபிவிருத்தி, நீர் வழங்கல், வீடமைப்பு வசதிகள் அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உத்தரவிட்டுள்ளார்.

(பக். 15)



## பொதுத் தேர்தலில் இடது சாரிகள் தனிக் கூட்டு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் சில இணைந்து கூட்டணி அமைத்து தேர்தலில் நிற்கப்போவதாக லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் வடமத்திய மாகாண ஆளுநர் கலாநிதி திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (பக். 14)

## பொதுப் போக்குவரத்துகளின் இசை அரச கட்டுப்பாட்டில்

ජාතික ප්‍රවාහන කොමිෂන් සභාව
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
National Transport Commission

பொதுமக்கள் போக்குவரத்துக்கான தூர சேவை வாகனங்கள் மற்றும் ஏனைய பொதுப் போக்குவரத்து வாகனங்களில் முடுக்கி விடப்படும் அதிகரித்த ஒலியைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இவற்றில் ஒலிக்க விடப்படும் காதைக்கிழிக்கும் இசையால் பயணிகள் அனுபவிக்கும் அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


(பக். 15)

## கொழும்பின் குப்பைகள் புத்தளத்தில் கொட்டப்படுவது நிறுத்தம்



கடந்த அரசாங்கத்தில் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவினால் புத்தளத்தில் திணிக்கப்பட்ட கொழும்புக் குப்பைகளை கொழும்பிலேயே கொட்டுவதற்கு கொழும்பு மாநகர சபை தீர்மானித்துள்ளது. இதற்கென கெரவலப்பிட்டியவுக்குப் பக்கத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியை கொழும்பு மாநகர சபை குத்தகை எடுத்துள்ளது. (பக். 14)

## ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா கட்டணம் அதிகரிப்பு




செங்கென் (Schengen) வலயத்திலுள்ள 26 ஐரோப்பிய நாடுகளுக்குமான தற்போது அறவிடப்படும் 60 யூரோ வீசா கட்டணம் பெப்ரவரி முதல் 80 யூரோக்களாக (16,000 ரூபா) அதிகரிக்கப்படவுள்ளது. குழந்தைகளுக்கான கட்டணமான 35 யூரோக்களும் 40 யூரோக்களாக அதிகரிக்கப்படவுள்ளன.

(பக். 14)

## சூழல் மாசடைவதைத் தவிர்ப்பதற்கான குழுவில் கார்டினல்



வட கிழக்குப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் மின்னுற்பத்தித் திட்டத்தினால் சூழலுக்கு ஏற்படும் மாசு தொடர்பில் கிறிஸ் தவ தேவாலயம் எதிர்ப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து அது தொடர்பில் முறைப்பாடு செய்த கருதினால் மல்கம் ரஞ்சித், வலுசக்தி திட்டக் குழுவுக்கு தனது பிரதிநிதி ஒருவரை அனுப்புமாறு வேண்டப்பட்டுள்ளார். (பக். 15)

## கண்டி மாவட்ட மொட்டு வேட்பாளராக பாரிஸ்

ශ්‍රී ලංකා පොදුජන පෙරමුණ
ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன
Sri Lanka Podujana Peramuna

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முஸ்லிம் வேட்பாளராக தொழிலதிபர் ஏ.எல்.எம்.பாரிஸ் களமிறக்கப்படவுள்ளார்.

கண்டி மாவட்ட அரசியல் நிலவரம் குறித்து பிரதமரின் அலுவலகத்தில் கண்டி மாவட்ட பிரநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பாரிஸை வேட்பாளராக நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய முன்னரே தீர்மானித்திருந்ததாக கெஹெலிய ரம்புக்வெல்ல, மஹிந்தானந்த அலுத்கமகே போன்றோர் தெரிவித்திருந்தனர்.

## இலங்கைத் தமிழர்கள் குடியுரிமை கேட்கக் கூடாது

பாஜக வெற்றி பெற்றால் குடியுரிமைச் சட்டத்தை மாற்றி அமைப்போம் என்று சொல்லித் தான் பாராளுமன்றத் தேர்தலில் வாக்குக் கேட்டோம். இப்போது மாற்றி அமைத்திருக்கிறோம். இப்போது அதனை எதிர்ப்பது சரியல்ல என பாஜகவின் மூத்த தலைவர் இல.கணேஷன் தெரிவித்துள்ளார்.

திருத்தப்பட்டுள்ள குடியுரிமைச் சட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்குவது தொடர்பாக எதுவும் சொல்லப்படவில்லை என்கின்றனர். (பக். 14)



## யாழில் 06 வாள் வெட்டுக் குழுக்கள் புத்தாண்டுக்குள் ஒழிக்கப்படும்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்ற ஆவா குழு உட்பட ஆறு வாள் வெட்டுக்குழுக்களையும் புத்தாண்டுக்குள் தம்மால் ஒழித்து விட முடியும் என யாழ்ப்பாண மாவட்டச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் [illegible] தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில், இளம் வயதுடையவர்களால் நடத்தப்படும் இந்த வாள் வெட்டுக் குழுக்கள் தம்மால் அடையாளம் காணப்பட்டுள்ளனவெனவும் அந்தக் குழுக்களில் உள்ளவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றனவெனவும், அவர் தெரிவித்தார். இந்தக் குழுக்களை தாம் புத்தாண்டுக்கு முன்னர் ஒழித்துவிடுவோமெனவும் அதற்கான விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவெனவும், மகேஷ் சேனாரட்ன கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘இது நம் இஸ்லாமிய சகோதரர்களுக்காக நாம் செய்ய வேண்டிய சண்டை.’

கேள்வி: ‘இப்போராட்டத்தைக் குறித்து பாலிவுட்டின் ஷாரூக், சல்மான், அமீர் ஆகிய மூன்று பெரிய ‘கான்’களும் அமைதியாக இருப்பது குறித்து முற்போக்காளர்கள் கடுமையாக விமர்சித்து வருகிறார்களே?’

‘குடியுரிமைச் சட்டத் திருத்தம் என்ற அநீதியை எதிர்த்து இத்தனை லட்சம் மாணவர்களும், மக்களும் வீதியில் நின்று போராடும்போது அதற்கு தார்மீக ஆதரவையாவது அவர்கள் அளித்திருக்கலாம் என்ற எதிர்ப்பார்ப்பு ஓரளவு சரிதான்.

ஆனால் இந்தப் போராட்டத்தைப் பொறுத்தவரை எந்த இஸ்லாமியரையும் ‘நீங்கள் ஏன் போராடவில்லை?’ என்று கேட்பதில் எனக்கு சுத்தமாக உடன்பாடில்லை. அதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.




1. காவிக் கயவன் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்ததற்கு இஸ்லாமியர்கள் காரணமல்ல. இது ஹிந்துக்கள் தங்கள் தலையில் தாங்களே வாரிப் போட்டுக் கொண்ட மண்தானேயன்றி வேறல்ல. அதனால் நியாயப்படி இப்போது இந்த ஆட்சியால் விளையும் இது போன்ற கொடூரங்களுக்கு எதிராகப் போராடும் பொறுப்பை பெரும்பான்மை ஹிந்துக்கள்தான் ஏற்க வேண்டும். எண்ணிக்கை பலத்தின் அடிப்படையில் அமைந்த ஜனநாயகத்திற்குள் நடைமுறையில் இதுதான் சாத்தியமும்கூட.

2. இஸ்லாமியனை அடித்தால் இஸ்லாமியன்தான் வருவான் என்பதே ஆர்.எஸ்.எஸின் ultimate கணக்கு. அந்தக் கணக்கை பொய்யாக்கும் கடமை நமக்கு இல்லையா? இஸ்லாமியர்களுக்கு எதிரான ஒரு சட்டத்தை இயற்றுவதன் மூலம் இஸ்லாமியர்களைப் போராட்டக் களத்தில் நிற்க வைத்து, ‘இஸ்லாமியர்கள் vs மற்றவர்கள்’ என்று அவர்களைத் தனிமைப்படுத்த வேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸின் எதிர்ப்பார்ப்பு. அந்த எதிர்பார்ப்பை தரைமட்டமாக்குவதற்கு சிறந்த வழி என்னவென்றால், இந்நாட்டின் பெரும்பான்மை இந்துக்கள் ‘இதை இஸ்லாமியர்களுக்கு எதிரான தாக்குதலாகப் பார்க்கவில்லை, மாறாக இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரான தாக்குதலாகவே பார்க்கிறோம்’ என்பதை அவர்களுக்குத் தெளிவாக உணர்த்தும் விதத்தில் களத்தில் இறங்குவதுதான்.

ஆகவே, பாலிவுட்டின் ‘கான்’களோ, பக்கத்து வீட்டு பாய்களோ.. ‘நீங்கள் ஏன் போராடவில்லை?’ என்று எந்த இஸ்லாமியரையும் பார்த்துக் கேட்காதீர்கள்.

“இது நம் இஸ்லாமிய சகோதரர்களுக்காக நாம் செய்ய வேண்டிய சண்டை. செய்வோம்!”

**கனேஷ பாபு**
சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணி.




சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை




# இந்தியாவின் இந்துக்களே குடியுரிமை சட்டத்திற்கு எதிரான போராட்டத்தை வழிநடாத்த வேண்டும்

**எம்.என்.முஹம்மத்**

இந்தியாவில் குடியுரிமை சட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் இந்து சகோதர்கள் கலந்து கொள்வது உலகிற்கு ஒரு பெரிய செய்தியைச் சொல்கிறது. ‘நாம் எந்த வர்ணத்தில் இருந்தாலும் இந்தியர்களாக ஒன்றுபடுகின்றோம்.’

இனவாதத்தை விதைக்கும் அரசியல் நாடுகளில் அழிவைத் தவிர வேறு ஒன்றையும் கொண்டுவராது. இந்திய இந்து மக்கள் இந்தியாவை ஐக்கிய தேசமாகக் காக்க வேண்டும் எனின், இந்தப் போராட்டத்தை அவர்கள் கையில் எடுக்க வேண்டும். இன்று இனத்தை ஒதுக்கும் அரசியல் நாளை சாதியை, மொழியை வைத்து நிச்சயம் மக்களை ஒதுக்கும். இந்தியாவின் பெரும்பான்மையினர் இந்துக்கள், இந்தச் சட்டத்தை நிறைவேற்றியவர்களை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்கள் இந்துக்களே. எனவே இந்தப் போராட்டத்தை வழி நடாத்தும் தார்மீகப் பொறுப்பு இந்தியாவின் இந்துக்களையே சாரும்.

முஸ்லிம்கள் இதனைத் தனியே முன்னெடுக்க முயற்சி செய்தால், இந்தப் பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை வளர்க்க திட்டமிடும் மறை கரங்களைப் பலப்படுத்துவதாக அது அமையும். ஒவ்வொரு முஸ்லிமும் தனது இந்து நண்பர்களுக்கு இதனைப் புரிய வைக்க வேண்டும். இந்துக்களுக்கும் சரி, முஸ்லிம்களுக்கும் சரி இந்தியாவை பாரத தேசமாகக் கட்டியெழுப்ப கிடைத்துள்ள அழகிய இறுதி சந்தர்ப்பம் இது. இதனைத் தவறவிட்டால் பாரதம் இரத்த பாரதமாக மாறும். பிராந்தியமே அமைதியின்மையை நோக்கி நகரும். இந்தியாவின் நடிகர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் இதனை பாரத மாதாவைக் காப்பதற்கான இரண்டாவது சுதந்திரப் போராட்டமாகக் கருதி களத்தில் இறங்கிப் போராட வேண்டும்.

இஸ்லாமிய அமைப்புகள் இதில் தலையிடாமல் இருப்பதே நல்லது.

# இந்தியாவில் அடுத்தது என்ன?

**டில்ஷான் அஹ்மத் ஏ.ஆர்.**

அயல் நாடாகிய இந்தியாவின் குடியுரிமை பற்றிய சட்டத் திருத்தத்திற்கெதிராக நாடு பூராக கிளம்பி இருக்கிற மக்கள், மாணவர்கள், கட்சிகள் வாரியான எதிர்ப்பலை பரவலாகிக் கொண்டே வருகிறது.

இதை எதிர்கொள்வதற்கு மோடி அரசுக்கு இருக்கிற ஆயுதம் தன் கட்சிசார், தன் பங்காளிக் கட்சி சார் ஆதரவாளர்களையும் வீதிக்கு இறக்குவதுதான். அவ்வாறு நிகழ்ந்தால் அங்கு போராட்டம் வெடிக்கும்.

நம்ம நாடு மற்றும் நம்ம சுத்தி இருக்கிற நாடுகளுக்கு எப்பவுமே ஒரு கொதி நிலைக்குள் இருந்து ஆட்சி செய்வது அரசியலாக மாறி கணகாலமாச்சு.

# இந்தியாவில் குடியுரிமை சட்டத்திருத்தம் என்ன நடக்கின்றது?

**அக்பர் ரபீக்**

குடியுரிமை சட்டத் திருத்தம் அமல்படுத்தப்பட்டு ஒரு வாரம் ஆகும் நிலையில், அஸ்ஸாமில் தொடங்கிய போராட்டத் தீ, திரிபுரா, மணிப்பூர், மேற்கு வங்காளம், மேகாலயா, டெல்லி எனப் பல்வேறு மாநிலங்களுக்கும் பரவியது. வட இந்தியாவும் வட கிழக்கு இந்தியாவும் பற்றி எரிகின்றன. நாடாளுமன்றம் அவர்களுடையதாக இருக்கலாம். ஆனால், இந்த வீதிகள் உங்களுடையது’ என்ற முழக்கங்கள் மாணவர்களால் எழுப்பப்படுகின்றன.

‘பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்குள் நுழையும் இந்து மதத்தைச் சேர்ந்த அகதிகளுக்கு குடியுரிமை வழங்கப்படும்’ என 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குறுதி அளித்தது பி.ஜே.பி. அதன் தொடர்ச்சியாக 2016 ஆம் ஆண்டு, இந்த சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது, வடகிழக்கு மாநிலங்களில் கடும் எதிர்ப்பைச் சந்தித்தது. அதனால் பின்வாங்கியது.

கடந்த ஆண்டு, அஸ்ஸாமில் தேசிய குடியுரிமைப் பதிவேடு மூலமாக, யார் இந்தியாவின் குடிமக்கள் எனக் கணக்கிடப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பில், 19 லட்சம் பேர் குடியுரிமை இழந்தனர். தற்போது, மக்களவையிலும் மாநிலங்களவையிலும் குடியுரிமை சட்டத் திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டபோதே, அஸ்ஸாமில் போராட்டம் தொடங்கப்பட்டு விட்டது.

இந்தியாவின் அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய இஸ்லாமிய நாடுகளிலிருந்து அகதிகளாக இந்தியாவுக்குள் நுழைந்த இந்து, சீக்கிய, பௌத்த, சமண, பார்சி அல்லது கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க ஏதுவாக, ‘1955 குடியுரிமை சட்டத்தைத் திருத்துவதற்காக இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது. 31.12.2014-க்கு முன் இந்தியாவில் குடியேறியவர்களுக்கு, இந்த சட்டத் திருத்தம் பொருந்தும்.



இந்த சட்டத் திருத்தம் பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய இந்த மூன்று நாடுகளிலிருந்து வரும் முஸ்லிம் அகதிகளுக்குப் பொருந்தாது. அதேபோல மற்ற நாடுகளிலிருந்து வரும் அகதிகள், உதாரணமாக இலங்கைத் தமிழர்கள், மியான்மர் முஸ்லிம்கள் முதலானோருக்கு இது பொருந்தாது.

வடகிழக்கு மாநிலங்களில், வங்காள தேசத்தைச் சேர்ந்த அகதிகள் பெரும்பான்மையாகக் குடியேறிவிட்டதாகவும், அதனால் வடகிழக்கு மாநில மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதாகவும் பல ஆண்டுகளாகப் பிரச்சினை நிலவுகிறது. இந்த சட்டத் திருத்தம் மூலம் சட்ட விரோதமாகக் குடியேறியவர்கள் தங்கள் உரிமைகளை இழக்க நேரிடும் என வடகிழக்கு மாநில மக்கள் அச்சப்படுவதால் போராட்டம் வெடித்தது.

வடகிழக்கு மாநிலங்களில் நடைபெறும் போராட்டங்களுக்கும், டெல்லி முதலான மற்ற பகுதிகளில் நடைபெறும் போராட்டங்களுக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் உள்ளன. வடகிழக்கு மாநிலங்களில், வங்காள தேசத்திலிருந்து வரும் இந்துக்கள் குடியேறினால், தங்கள் உரிமைகள் பாதிக்கப்படும் என மக்கள் அஞ்சுகின்றனர். டெல்லியில் ஜாமியா மிலியா பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், ‘இந்திய அரசு ஒரு மனிதனைத் தனது மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்ட இந்தச் சட்டத் திருத்தம் உதவுவதாகவும், இந்திய அரசியலமைப்பின் மதச்சார்பற்ற கொள்கை மீதான தாக்குதல் இந்தச் சட்டத் திருத்தம் எனவும் கூறுகின்றனர்.

பிபிசி ஊடகத்தைச் சேர்ந்த பெண் ஊடகவியலாளர் புஷ்ரா ஷேக், டெல்லி காவல்துறை தனது செல்போனை அபகரித்ததாகவும், ஆண் காவலர் ஒருவர் தன் தலைமுடியை இழுத்ததாகவும், லத்தியால் தாக்கியதாகவும் கூறியுள்ளார். மேலும், காவலர்கள் பெண்கள் விடுதிக்குள் நுழைய முயன்றதாகவும், கழிவறைகளில் நுழைந்து பெண்கள் மீது பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாகவும் மாணவர்கள் கூறுகின்றனர்.

ஜார்க்கண்ட் சட்டமன்றத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் பிரதமர் மோடி, ‘போராட்டம் நடத்துபவர்கள் யாரென்று அவர்களின் உடையைப் பார்த்தாலே தெரிகிறது’ எனக் குடியுரிமை சட்டத் திருத்தத்துக்கு எதிராக டெல்லியில் போராடுபவர்களுக்கு மதச்சாயம் பூசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜாமியா பல்கலைக்கழக மாணவர்கள், குடியுரிமை திருத்தச் சட்டம் திரும்பப் பெறும் வரை, தங்கள் போராட்டம் தொடரும் என அறிவித்து, தற்போது மனிதச் சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்திய வரலாற்றில் மாபெரும் போராட்டமாக குடியுரிமை சட்டத் திருத்த எதிர்ப்புப் போராட்டம் மாறிவருகிறது.

மூலம்: விகடன்

# முஸ்லிம்கள் இல்லை என்றால் அமெரிக்க ஏழை நாடாக மாறி விடும்

**Guardian Report பத்திரிகை அறிவிப்பு**




கார்டியன் ரிப்போர்ட் என்ற பத்திரிகை ஒரு ஆக்கத்தை வெளியிட்டது. அதில் அமெரிக்க குடியரசு கட்சியின் வேட்பாளர் டிரம்ப் அவர்களுக்கு பதிலடி தரும் விதத்தில் பல செய்திகளைப் பதிவு செய்துள்ளது.

அமெரிக்காவை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் முஸ்லிம்கள் என்றும் முஸ்லிம்கள் இல்லாத அமெரிக்கா ஏழைநாடாக மாறிவிடும் என்றும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

இதற்கு சான்றாக அமெரிக்காவின் உயர்வுக்குக் காரணமாக அமைந்த முஸ்லிம் விஞ்ஞானிகள், புகழ்பெற்ற அமெரிக்க முஸ்லிம் மருத்துவர்கள், பொறியாளர்கள், ஆய்வாளர்கள் போன்றவர்களின் பட்டியலை அந்தப் பத்திரிகை வெளியிட்டு அமெரிக்க முஸ்லிம்கள் மூலமே முன்னேறியது என்ற உண்மையை உலகிற்கு அம்பலப்படுத்தியுள்ளது.

# அநுராதபுர ராஜ்யத்தின் மன்னர் 2 ஆம் அக்போதி, நபிகள் நாயகத்திற்கு எழுதிய கடிதம்

இலங்கை முஸ்லிம்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு செய்த பங்களிப்புக்கள் பற்றி சமூகக் கலந்துரையாடல்கள் (Social Dialogues) இடம்பெறுவதில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். அரேபியாவில் இஸ்லாம் அறிமுகமான போது இலங்கையில் வர்த்தகம் செய்த பெரும்பாலான அரபு வர்த்தகர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தீர்மானித்தார்கள்.

அரபு வணிகர்கள் இலங்கையில் இருந்து வெளியேறுவதன் மூலம் நாட்டின் பொருளாதரத்திற்கு பாரிய சிக்கல்கள் ஏற்படும் என்பதை அன்றைய அநுராதபுர ராஜ்யத்தின் மன்னர் 2 ஆம் அக்போதி (King Agrabodhi II) அவர்கள் அறிந்துகொண்டார். அரபு வர்த்தகர்கள் நாட்டில் இருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கான முழு சமய உரிமைகளும் வழங்கப்படும் என்றும் மன்னர் உறுதியளித்தார்.

பின்னர் மன்னர் 2 ஆம் அக்போதி அவர்கள் தனது விஷேட தூதுவர் ஒருவரை நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களைச் சந்திப்பதற்காக மதீனா நகருக்கு அனுப்பி வைத்தார். இஸ்லாம் சமயத்தின் வழிகாட்டல்கள் அடங்கிய ஆவணத்தை தனது தூதுவரிடம் அனுப்புமாறும் அதன் மூலம் இலகுவாக அந்த சமயத்தை இலங்கையில் உள்ள அரபு வர்த்தகர்களுக்குப் பின்பற்றலாம் என்றும் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களுக்கு மன்னர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை மன்னரின் தூதுவர் ஜித்தா துறைமுகத்தைச் சென்றடைந்தார். பின்னர் தரைமார்க்கமாக ‘மதீனா’ நகரைச் சென்றடைந்தார். இலங்கைத் தூதுவர் அங்கு சென்ற போது நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) இந்த உலகை விட்டும் பிரிந்திருந்தார்கள். அபூபக்ர் (றழியல்லாஹு அன்ஹு) என்பவரே அன்று மதீனாவை ஆட்சிசெய்து கொண்டிருந்தார். தூதுவர் அவரைச் சந்தித்து அநுராதபுர ராஜ்யத்தின் மன்னர் 2ம் அக்போதி அவர்களின் கடிதத்தை ஒப்படைத்தார்.

**பேராசிரியர் தயா அமரசேகர**
சமூகவியல் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்



ஏய்,
தங்கப் பெண்ணே!
வங்கப் பெண்ணே! நீ தானே
சிங்கப் பெண்ணே....
மோடியின்
கேடித்தனங்களை
தோலுரித்துக் காட்ட
நாடி ஓடி வந்த
வங்கத்துச் சிங்கமே,..
உன் முனைப்பினால்
மோடியினது மட்டுமல்ல
அவனது ஜாடிக்கேற்ற
அசல்பாக மூடிகளதும்
தொடைகள் உதறட்டும்!
திரைகள் கிழியட்டும்!!
ஈரக் குலைகள் நடுங்கட்டும்!!!
மொத்த அராஜகத்தையும்
அடியோடு ஒழித்துக்கட்டி
பாரத மாதாவை மீட்டெடுக்க
மம்தாவே நீ ஒரு சபதம் எடு தாயே...

**பூஸரி ஸாலிஹ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கத்திலிருந்து சொல்லித் தரும் பாடம்

• பியாஸ் முஹம்மத்

உலகப் பொருளாதாரம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்வதாக ரணில் விக்கிரமசிங்க இறுதியாகப் பிரதமராக இருந்த வேளையில் பல தடவைகள் சுட்டிக் காட்டியிருந்தார். உலக நகர்வு இப்பொழுது கிழக்கை நோக்கிப் படையெடுப்பதனை சீனாவின் அசுர வளர்ச்சியையும் இந்தியாவின் போட்டியையும் வைத்து அவதானிக்க முடிகிறது.

ஆசிய பசுபிக் பிராந்தியங்களை உள்ளடக்கிய உலகின் கிழக்குப் பகுதியிலேயே உலக சனத்தொகையில் அதிகமான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். மொத்த முஸ்லிம் சனத்தொகையில் 62 வீதமானவர்கள் இங்கு வாழ்கிறார்கள். உலகில் அதிக முஸ்லிம் சனத்தொகையைக் கொண்ட இந்தோனேஷியா இந்தப் பிராந்தியத்தில் தான் அமைந்திருக்கின்றது. உலகின் இரண்டாவது அதிக முஸ்லிம் சனத்தொகையைக் கொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது. இங்கு 20 கோடி முஸ்லிம்கள் சிறுபான்மையினமாக வாழ்கின்றனர். 2060 ஆகும் போது உலக சனத்தொகையில் 11.1 வீத முஸ்லிம்கள் இந்தியாவில் வாழ்வார்கள் என பியூ ஆராய்ச்சி நிலையம் தெரிவித்திருக்கிறது. இந்த வகையில் உலகில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இந்தோனேஷியாவைத் தாண்டி இந்தியாவே முதலிடம் வகிக்கப் போகிறது என பியூ ஆராய்ச்சி மையம் தெரிவிக்கிறது.

இந்தியாவில் முஸ்லிம்கள் அதிகமாக காஷ்மீரிலேயே வாழ்கிறார்கள். காஷ்மீர் மாநிலத்தில் முஸ்லிம்களே பெரும்பான்மையினர். இந்தச் சனத்தொகைக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் வகையிலேயே மோடி அரசு 370 சட்டத்தை ரத்து செய்தது. 370 சட்டத்தின் மூலம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இந்த மாநிலத்துக்கு கணிசமான தன்னாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்தச் சட்டத்தை மோடி அரசு ரத்து செய்ததன் பின்னர், இந்தியர்கள் எவரும் இங்கு வந்து காணி வாங்கிக் குடியேறுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் முஸ்லிம் பெரும்பான்மை காஷ்மீரின் சனத்தொகைக் கட்டமைப்பு மாற்றப்படுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அடுத்த மாநிலமாக அஸாம் விளங்குகிறது. 32 மில்லியன் அஸாம் சனத்தொகையில் மூன்றில் ஒரு வீதம் வாழும் முஸ்லிம்கள் அங்கு இரண்டாவது பெரும்பான்மையாக வாழ்கின்றனர். பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து சென்றதற்கு முந்திய நாளான 1971 மார்ச் 24 க்கு முன்னர் இந்தியாவில்



வாழ்ந்ததாக ஆதாரத்தை முன்வைப்பவர்களுக்கு மட்டுமே, ஆட்களைப் பதிவு செய்யும் தேசிய குடியுரிமைப் பட்டியலில் (NRC) பெயர் பதிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வாழும் 1.9 மில்லியன் மக்கள் இந்தப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள். இந்த நடைமுறையை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப் போவதாக பிஜேபி அப்பொழுது முதல் அடிக்கடி கூறி வந்தது.

இந்த வரிசையிலேயே இப்போது குடியுரிமைத் திருத்தச் சட்டம் (CAA) வெளிவந்திருக்கிறது. அண்டையிலுள்ள முஸ்லிம் நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் நாடுகளிலிருந்து மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்பட்டதால் சட்டவிரோதமாக இந்தியாவுக்கு வந்து குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜெயினர்கள், பார்சியர்கள், கிறிஸ்தவர்கள் அனைவரையும் இந்தியக் குடிகளாக இந்தச் சட்டம் அங்கீகரிக்கிறது. ஆனால் முஸ்லிம்களை இந்தச் சட்டம் தடைசெய்கிறது. இதன் மூலம் மேலும் இரண்டு மில்லியன் முஸ்லிம்கள் இந்திய குடியுரிமையை இழந்து நாடற்றவர்களாக மாறுகிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் பங்களாதேஷிலிருந்து வந்துள்ள பெருவாரியான இந்துக்கள் இந்தியக் குடியுரிமையைப் பெறவிருக்கிறார்கள். இந்தியாவின் வடக்கு கிழக்கு மாநிலங்களில் இந்துக்கள் பெருமளவில் வந்து குடியேறுவதற்கு இந்தச் சட்டம் வாய்ப்பளித்துள்ளது. இதனால் இந்தியாவின் சனத்தொகைக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது.

உலகின் கிழக்குப் பிராந்தியம் அதிகமாக சமய நம்பிக்கைகளைக் கொண்டது. அதனால் இங்கு மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்துவது அரசியல்வாதிகளுக்கு தமது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இலகுவானதாக இருக்கிறது. தனது அதிகார ஆசையைத் தீர்த்துக் கொள்ள இனவாதத்தைப் பயன்படுத்துவது கீழைத்தேச அரசியலின் இயல்பாகியிருக்கிறது. இதற்கென உலக மரபுகளையும் நியதிகளையும் கூட அப்பட்டமாக மீறுவது வழக்கமாகப் போயிருக்கிறது. இதனால் கீழைத்தேச நாடுகளின் அரசியல் நகர்வுகளைப் பற்றி ஏனைய நாடுகள் அவதானமாய் இருக்க வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் பக்கத்து நாட்டின் அதிர்வுகள் சுனாமி அலைபோல ஏனைய இடங்களிலும் தாக்கம் செலுத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது.

மோடி அரசு ஆட்சிக்கு வரும் போது தனது ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எந்த விதப் பாகுபாடும் காட்டப்பட மாட்டாது என்று பல தடவைகள் கூறப்பட்டது. ஆனாலும் அரசியல் யாப்பில் இந்தியா மதச் சார்பற்ற நாடு என்று குறித்துரைத்திருப்பதையும் மீறி தற்போது இந்திய முஸ்லிம்கள் மீது மிக மோசமாக பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது. இந்திய அரசியல் அமைப்பு, இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சிவில் உரிமைகள், இனம், மதம் சார்ந்த உரிமைகள் எல்லாம் வரையறுக்கப்பட்டு மனித உரிமைகள் பிரகடனம் தயாரிக்கப்பட்ட வேளையிலேயே சர்வதேச பிரகடனங்களின் நலச் செழுமைகளையெல்லாம் உள்ளடக்கி உருவாக்கப்பட்டது.

வாஜ்பேயி தலைமையிலான பாஜக முதலில் ஆட்சிக்கு வந்த 1997 ஆம் ஆண்டிலேயே இந்த அரசியல் யாப்பில் கை வைக்கத் துவங்கியது. அப்போது வாஜ்பேயிக்கு வழங்கப்பட்ட வரவேற்பு வைபமொன்றில் அவர் உரையாற்றும்போது, இன்று நமக்கு பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை கிடையாது. ஆனால் ஒரு காலத்தில் நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவோம். அப்போது நாம் நமது கனவு இந்தியாவை உருவாக்குவோம் என்று முழங்கினார். இனவாத அரசாங்கமொன்றுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரத்தை வழங்குவதன் விளைவை இந்தியா இப்பொழுது சொல்லித் தருகிறது.

2014 தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்தியாவில் இந்துக்களுக்கு மட்டும் குடியுரிமை வழங்குவது பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தத் தேர்தலில் பாஜகவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போனாலும் பெரும்பாலான தொகுதிகளில் பாஜக வென்றிருந்தது. தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக, உலகின் எந்த நாடுகளில் இருந்தும் வருகின்ற யூதர்களுக்கு இஸ்ரேலில் குடியுரிமை வழங்கப்படும் என்கின்ற இஸ்ரேலின் "அலியாஹ்" கொள்கையை தத்தெடுத்து இந்தியா இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆனாலும் அரசியல் சட்ட அடிப்படைகளை பெரும்பான்மையின் அடிப்படையில் மாற்றிட முடியாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதனால் வேறு வகைகளில் தமது அரசியல் கொள்கைகளை பாஜக நிறைவேற்றி வருகிறது. இஸ்ரேல் பாணியிலான இதுபோன்ற நடவடிக்கைகள் கிழக்குலகில் அதிகரித்து வருகின்றன. மோடி அரசின் இந்த நிலைப்பாடு, இனவாத அரசுகள் தமது இனவாதத்தைப் பிரயோகிப்பதில் அரசியல் யாப்பு போன்ற ஒழுக்கக் கோவைகளுக்கெல்லாம் கட்டுப்படுதில்லை என்பதைப் புலப்படுத்துகின்றன.

இந்த நடவடிக்கைகள் மூலமாக இந்தியக் குடிமக்களில் இருந்து முஸ்லிம்கள் வேறாகப் பிரிக்கப்பட்டு வருகின்றனர் என அ.மார்க்ஸ் எழுதியுள்ள கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார். இது பிராந்தியத்தில் மியன்மார் செய்தது போன்ற மற்றுமொரு இனச்சுத்திகரிப்புக்கான அடையாளத்தை வெளிப்படுத்துகிறது. அஸாமிலும் காஷ்மீரிலும் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் இனச் சுத்திகரிப்புக்கு முந்திய கட்டமாகும் என ஜெனோசைட் (இனச்சுத்திகரிப்பு) வொட்ச் அமைப்பின் ஸ்தாபகர் கலாநிதி க்ரகெரி ஸ்டன்டன், காஷ்மீர் மற்றும் என்ஆர்சி சட்டங்கள் தொடர்பில் அமெரிக்க காங்கிரஸில் அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் போது தெரிவித்தார். இனச் சுத்திகரிப்புக்கான தயாரிப்புக்களே இந்தியாவில் நடைபெற்று வருகின்றன. அதன் அடுத்த கட்டம் இனச்சுத்திகரிப்புத்தான் என அங்கு தெரிவித்த அவர், இனச்சுத்திகரிப்பின் 10 கட்டங்களை தெளிவுபடுத்தினார்.

1. நாங்கள், அவர்கள் (us and them) என வேறு பிரித்தல்
2. வெளிநாட்டவர் அல்லது வந்தேறு குடிகள் என அடையாளப்படுத்தல்
3. பாகுபாடு காட்டுதல் - குடியுரிமை பெறுவதற்கான தகுதியற்றவர்களாக்குதல். பிரஜைகளுக்கான மனித உரிமை, சிவில் உரிமைகளை சட்ட ரீதியாகவே இல்லாமல் செய்தல்
4. மனித நேயத்தை மறுத்தல் - இலக்கு வைக்கப்பட்டவர்களை இழிவானவர்களாகக் கருதுதல். அவர்களுக்கு பயங்கரவாதி போன்ற பெயர்களை இடுதல்
5. இனச் சுத்திகரிப்பைச் செய்வதற்கான நிறுவனமொன்றைத் தயார்படுத்தல். அஸாமிலும் காஷ்மீரிலும் குடிசன மதிப்பீட்டாளர்கள் இந்தப் பாத்திரத்தை ஏற்றனர்.
6. பிரச்சாரங்களின் மூலம் துருவமயப்படுத்தல்
7. தயாராதல்
8. துன்புறுத்தல். அஸாமிலும் காஷ்மீரிலும் நடப்பதைப் போன்று.
9. அடியோடு அழித்தல் (Extermination)- இது தான் இனச்சுத்திகரிப்பு எனப்படுகிறது
10. மறுத்தல்

இவ்வகையானதொரு இனச்சுத்திகரிப்பையே மியன்மார் 736,000 முஸ்லிம்கள் மீது நடத்தியது. இப்பொழுது இந்தியா இனச் சுத்திகரிப்பின் இறுதிக் கட்டத்துக்கு வந்திருக்கிறது. இதனால் கீழைத்தேசத்தில் இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கும் மனிதாபிமானமற்ற பக்கத்திலுள்ள நாடுகளில் வாழும் சிறுபான்மையினர் தாம் எந்தக் கட்டத்தில் இருக்கிறோம் என்கின்ற பாடத்தைபடித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

# சம்பிக்கவின் கைதால் கதி கலங்கியுள்ள முன்னாள் அமைச்சர்கள்

• எம்.எஸ். அமீர் ஹுசைன்

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக ரணவகவை 2019 டிசம்பர் 18 ஆம் திகதி கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விலக்க மறியலில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஐ.தே.க.வின் முன்னாள் அமைச்சர்கள் பலர் கதிகலங்கி உள்ளனர். அடுத்து கைதுசெய்யப்பட இருப்பவர் யாராக இருக்கும் என்பதே இவ்வாறான ஒரு நிலை ஏற்படக் காரணமாகும்.

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற வாகன விபத்தில் அமைச்சராக இருந்த பாட்டலி சம்பிக ரணவகவின் கெப் ரக வானகத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சந்தீப் சம்பத் குணவர்தன என்ற இளைஞன் மோதியுள்ளார். அந்த வழக்கில் தாமதமடைந்திருந்த நீதி விசாரணையை விரைவாக ஆரம்பிக்க சட்டமா அதிபர் வழங்கிய உத்தரவின் பேரிலேயே முன்னாள் அமைச்சர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார்.

அந்த விபத்து நடைபெற்ற போது வாகனத்தை செலுத்தியவர் அமைச்சராக இருந்தாலும் உடனடியாக ஆள் மாறாட்டம் செய்யப்பட்டமை தொடர்பாக அப்போது ஊடகங்கள் பலமாக குரலெழுப்பின. அமைச்சரின் சாரதியே வாகனத்தைச் செலுத்தியதாக கூறி அவரையே நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டது. ஆனாலும் அன்றைய தினம் அவரது சாரதி மாத்தறையில் இருந்துள்ளமை பின்னர் தெரிய வந்தது. எவ்வாறோ அப்போதைய சந்தர்ப்பத்தில் சம்பவத்துடன் தொடர்புடைய அமைச்சரின் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஆனாலும் அந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குத் தொடர சாத்தியங்கள் இருக்கின்றதா என்பதை ஆராய்ந்து சட்டமா அதிபருக்கு தகவல்களை சமர்ப்பிக்க கோரப்பட்டிருந்த போதும் அது பற்றிய நடவடிக்கைகள் கிடப்பில் இருந்ததோடு அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தாமதப்படுத்தப்பட்டிருந்ததாகும். ஆனாலும் இந்த



அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் வழங்கப்பட்ட அழுத்தத்தைப் பயன்படுத்தி சம்பிக்க இந்த வழக்கிற்கான காரணத்தை அடிப்படையாக வைத்து கைதுசெய்யப்பட்டார்.

அதிலும் சம்பிக்க மீது பிரதானமாக 07 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. கவனயீனமாக வாகனத்தை செலுத்தியமை, விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிப் போக முயற்சி செய்தமை, சாரதி வேறொருவர் என்று கூறி உண்மைக்கு புறம்பான தகவல்களை வழங்கி ஆள் மாறாட்டம் செய்து நீதிமன்றத்தை ஏமாற்றியமை, விபத்தை நேரில் பார்த்த சாட்சி[illegible]களை அச்சுறுத்தியமை, விபத்தை நிரூபிப்பதற்கான ஆதாரமாக விபத்து நடைபெற்ற இடத்தில் பக்கத்து கட்டிடங்களில் இருந்த சீசீரீவி கமெரா பதிவுகளை அழித்தமை, நடவடிக்கை எடுக்க முற்பட்ட பொலீசாரை அச்சுறுத்தியமை, விபத்திற்குள்ளான இளைஞனை வைத்தியசாலை சென்று அச்சுறுத்தியமை என்ற அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது.

எவ்வாறோ இந்த விபத்தை ஏற்படுத்தியமைதான் அவரைக் கைதுசெய்ய காரணம் என்று கூறுவதை விட தேர்தல் [illegible] மையாக தர்க்க ரீதியாக விமர்சித்த ஒருவரும் ஐ.தே.க.வின் பிரதானமான, தைரியம் வாய்ந்த மேடைப் பேச்சாளருமாக இருந்த ஒருவரே சம்பிக ஆவார். இவர் எப்போதும் மேடைகளில் அல்லது வைபவங்களில் பேசுவதாக இருந்தால் மிகவும் தெளிவாக உரிய விடயங்களை சரியான முறையில் மக்கள் புரியும் வகையில் பேசக்கூடிய சிறந்த ஒரு பேச்சாளரும் எழுத்தாளருமாவார். தேர்தலுக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ உட்பட அவரது குடும்பத்தார் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டனர் என்றால் அது இவரது உரைகளால் ஆகும். இவ்வாறான ஒரு பின்னணியிலேயே அவசர அவசரமாக இந்த வழக்கு சட்டமா அதிபரால் முன்னிலைப்படுத்தப்பட்டு நடத்த உத்தரவு வழங்கப்பட்டது.

மறுபுறமாக குறித்த இளைஞரும் தவறிழைத்தவராவார். விபத்து நடந்த சந்தர்ப்பத்தில் அந்த வழக்கு நடத்தப்பட்டிருந்தால் சம்பிக்க மீது பாரதூரமான குற்றங்கள் இருந்திருக்காது. காரணம் விபத்துடன் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிள் இலங்கையில் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்டதல்ல. அதன் என்ஜின் தொடர்பாக போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து பதிவுசெய்யப்பட்டிருந்த மோட்டார் அந்த சைக்கிள், அத்துடன் அந்த இளைஞருக்கு சாரதி அனுமதிப் பத்திரமும் இருந்திருக்கவில்லை என்று கூறப்படுகின்றது. ஆனாலும் சம்பிக்க அரசியல் செல்வாக்கு காரணமாக அப்போது குறித்த வழக்கு நடைபெறாமல் டிமிக்கி காட்டியதன் விளைவே தற்போதைய கைதாகும்.

அதேநேரம் இந்த கைது காரணமாக ஐ.தே.க. தலைவர் பிரதமராக இருந்த ரணில் விக்கிரம சிங்க, முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, ரவி கருணாநாயக்கா, மங்கள சமரவீர, அகில விராஜ் காரியவசம், ரிசாத் பதியுத்தீன், ரவூப் ஹக்கீம், எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் உட்பட பல முக்கிய புள்ளிகள் கதி கலங்கி உள்ளனர். எந்நேரத்திலும் இவர்களில் எவரையும் ஏதாவது காரணங்களின் அடிப்படையில் கைதுசெய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் ராஜித சேனாரத்ன வெள்ளை வேன் விடயம் தொடர்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றி தற்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவிற்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நபர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அதனால் அந்த காரணத்தின் அடிப்படையில் ராஜித சேனாரத்ன கைதுசெய்யப்படலாம் என்ற காரணத்தால் கைது செய்யப்படாமல் இருப்பதற்காக அவர் முன் ஜாமீனுக்கு விண்ணப்பித்த போதும் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் தற்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ அவன்கார்ட் பாதுகாப்பு நிறுவன ஆயுத விவகார வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போது பல முறை இந்த முன் ஜாமீனை பெற்று கைதாகாமல் தம்மை பாதுகாத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே முன்னாள் ஐ.தே.க. ஆட்சியின்போது மஹிந்த சார்பான பலர் வெவ்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## மனிதாபிமானப் போராட்டம்

இந்தியாவில் குடியுரிமைச்சட்டத்துக்கு எதிரான போராட்டங்கள் வலுத்து வருகின்றன. நினைத்த நேரத்திலெல்லாம் மக்களின் குடியுரிமையைப் பறித்தெடுக்கும் இந்தியப் பாணி ஜனநாயகத்துக்கு துணைக்கண்டம் முழுவதும் எதிர்ப்புக்கள் வெடித்திருக்கின்றன.

ஜனநாயகம் என்பதற்கான வரைவிலக்கணத்தில் மக்களால் மக்களுக்கு என்பது முக்கியமானது. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் அதே மக்களை குடியுரிமை அற்றவர்களாக்கி அநாதரவாக்கி விடும் மனிதாபிமானமற்ற செயற்பாடுகளை மக்கள் பொறுத்துக் கொள்ளப் போவதில்லை என்பதையே இந்தியப் போராட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆட்சியாளர்கள் தமது வெறித்தனத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக மக்களால் இயற்றப்பட்ட அரசியல் யாப்பையே மீறத் துணிவது, ஆட்சியில் இருப்பவர்கள் மனிதர்கள் தானா என்ற கேள்வியை எழுப்பத் தூண்டுகிறது. ஆட்சியில் இருப்பவர்கள் மனிதப் பண்பு உள்ளவர்கள் அல்ல என்பதை மக்கள் விளங்கிக் கொள்ளும் போது, ஜாதி, மத பேதமின்றி மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு மனிதாபிமானத்தைப் பாதுகாக்க கிளர்ந்தெழுவர் என்பது இந்திய மக்கள் சான்று பகர்ந்திருக்கிறார்கள்.

முஸ்லிம்களை இலக்கு வைத்து குடியுரிமைச் சட்டம் இயற்றப்பட்ட போதும், இந்திய மக்கள் அனைவருமாக இணைந்து இதற்கெதிரான போராட்டத்தில் இறங்கியிருப்பது மனிதாபிமானம் தொடர்பான நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்கிறது. ஆட்சியாளர்களிடம் மனிதாபிமான உணர்வை எதிர்பார்த்து அவர்கள் இரவு பகலாக நாட்கணக்கில் போராடி வருகிறார்கள். குண்டாந்தடியடிகளுக்கும் துப்பாக்கிச் சூடுகளுக்கும் அவர்கள் துணிச்சலுடன் முகம் கொடுக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் இதுவரை கொல்லப்பட்டவர்கள் எல்லாம் உலகில் மனிதாபிமானத்தை நிலைநாட்டுவதற்காகப் போராடி உயிர் நீத்த தியாகிகளாகவே வரலாறு எழுதி வைக்கும்.

பேரினவாதம் ஒன்று திரண்டு சிறுபான்மையை அழித்தொழிக்க நினைத்தாலும் மக்களிடம் நிறைந்துள்ள மனிதாபிமான உணர்வை ஒருபோதும் அழித்தொழிக்க முடியாது. இதனால் தான் பாசிஸம் இன்றுவரை உலகில் முன்னணிச் சக்தியாக வரமுடியாமல் இருக்கின்றது. உலகில் உள்ள மனிதாபிமான சக்திகள் எல்லாம் ஒன்று சேர்ந்து மனிதாபிமானத்துக்காகக் குரல் கொடுக்கும் போது, மனிதத் தன்மையற்ற அராஜகங்கள் எல்லாம் சரிந்து வீழ்ந்து சிதைந்து போவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.

நாட்டு மக்களை மனிதர்களாகக் கருத முடியாத தலைவர்கள் எல்லாம் ஆட்சியில் அமர்வதற்குப் பொருத்தமற்றவர்கள். தம்மிடம் மனிதாபிமானம் அற்றுப் போகும் போய் வெறி பிடித்த நிலைக்கு அவர்கள் மாறுவதற்கு முன்னர் மக்கள் விழித்தெழுவது அவசியம். ஆட்சிக் கதிரையைப் பற்றிக் கொள்வதற்காக நல்லவர்கள் போல நடித்தவர்கள் எல்லாம் தமது சுயரூபத்தை நாட்கணக்கில் வெளிப்படுத்தியே இருக்கிறார்கள்.

சிறுபான்மை மக்கள் மனிதர்கள் என்ற உணர்வு இல்லாத ஆட்சியாளர்கள் இந்திய மனிதாபிமானப் போராட்டத்தின் மூலம் தங்களைப் புடம் போட்டுக் கொள்ள வேண்டும். மக்களும் தமக்கிடையே உள்ள பிரிவினைகளை மறந்து மனிதாபிமானத்தைப் பாதுகாப்பதற்கு ஒன்று திரள வேண்டும். உலகில் இனிவரும் போராட்டங்கள் மனிதாபிமானத்தைப் பாதுகாப்பதற்காகவே இருக்க வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய

# பசுமை முறையிலான சுவர் அலங்காரம்



• கலாநிதி பரீனா ருசைக்

சிரேஷ்ட விரிவுரையாளர்,
கொழும்பு பல்கலைக்கழகம்

தற்போது இலங்கையில் இடம்பெற்று வருகின்ற வெற்றுச் சுவர் அலங்கரிப்பு நடவடிக்கையானது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் முன்மொழியப்பட்ட திட்டமாகக் காணப்படுகின்றது. இது மிகவும் வரவேற்கத் தக்கதொரு நடவடிக்கையாகும். அனைத்து இலங்கையர்களும் இந்நடவடிக்கையில் வினைத்திறனான முறையில் பங்கெடுக்க வேண்டும். வெற்றுச் சுவர் அலங்கார நடவடிக்கையில் கடந்த இரண்டு மூன்று வாரங்களாக இலங்கை முழுவதும் அனைத்து மதத்தவர்களும் ஒன்றிணைந்துள்ளனர். சில பகுதிகளில் மக்கள் எவ்வித வேற்றுமைகளுமின்றி உற்சாகமாகவும், ஆர்வத்துடனும் இச்செயற்பாட்டில் பங்கெடுத்திருப்பதானது இலங்கையில் இன ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் பெற்றுக்கொள்ளக் கூடிய நடவடிக்கையாக இதனைச் சுட்டிக்காட்ட முடியும்.

இந்த அடிப்படையில் வெற்றுச் சுவர்களைத் தூய்மைப்படுத்தி அலங்கரிக்கின்ற நடவடிக்கைகள் பல்வேறு விதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தும் நிலைபேண் தன்மையினைக் கொண்டிருக்க வேண்டுமென்பதே ஜனாதிபதி அவர்களின் ஒரு முடிவாகவும், அவருடைய செயற்திட்டத்தின் ஒரு நோக்கமாகவும் காணப்படுகின்றது. எந்தவொரு நடவடிக்கையும் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை முன்னோக்கியதாக (Sustainable Development Goals) காணப்பட வேண்டும்.

நிலைபேண் அபிவிருத்தி இலக்குகள் 17 காணப்படுகின்றன. இந்நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை ஒவ்வொரு நாடும் 2030 ஆம் ஆண்டாகும் போது அடைந்திருக்க வேண்டும். இப்பதினேழு இலக்குகளில் ஐந்து அல்லது ஆறு இலக்குகள் சூழல் தூய்மையோடு தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றன. எனவே சூழல் நேயமான விதத்தில் இந்த அலங்கரிப்பு வேலைகளை மேற்கொள்கின்ற போது அங்கு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் ஐந்து அல்லது ஆறு இலக்குகளை இலகுவாக அடைந்துகொள்ள முடிகின்றது.

அதாவது 2030 ஆம் ஆண்டாகும் போது நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை அடையக்கூடிய விதத்தில் அபிவிருத்திகள் காணப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வெற்றுச் சுவர் அலங்கரிப்பு நடவடிக்கைகளையும் நாம் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கு உட்பட்ட விதத்தில் எவ்வாறு இதனை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தலாம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். எந்த நடவடிக்கையும் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படும் போது தான் அவ்விலக்குகளை அடையக் கூடியதாக இருக்கும்.

அதிகமான பகுதிகளில் மக்கள் சுவர் அலங்காரப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுகின்றார்கள், அலங்கார வேலைகளைச் செய்கின்றார்கள். சித்திரங்களை வரைகின்றார்கள். என்றாலும் அங்கு திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியாகக் காணப்படுகின்றது. எனவே அதிகமான இடங்களில் சுவர் அலங்கார நடவடிக்கைகள் நிறச் சாயங்கள் மூலமாக அலங்கரிக்கப்படுகின்ற விடயமாகத் தான் காணப்படுகின்றது. எனவே இந்நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை அடைய வேண்டுமெனில், இது தொடர்பான விடயங்கள் இன்னும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சுவர்களை அலங்கரிக்கின்ற போது அதிகமாக உயிரியல் ரீதியிலான தாவரங்களைப் பயன்படுத்துவது சிறந்தது. குறிப்பாக ஒட்டுத் தாவரங்களை பட்டும் தாவரங்கள், கொடிகள், பூக்கும் செடிகள் என பல்வேறுபட்ட உயிரியல் ரீதியில் வளரக்கூடிய தாவரங்கள் இம்மதில்களில் காணப்படுகிறது. அவற்றை நாம் குத்தான பூந்தோட்டங்கள் (Vertical Gardens) என்று சொல்கின்றோம். எனவே இந்த குத்தான பூந்தோட்டங்களை வெறுமனே நிறங்களைப் பயன்படுத்தி அலங்கரிப்பதை விட மிகவும் நீண்டகால பசுமை கொண்டதாகவும், சிறந்த சூழல் நேய மிகு நடவடிக்கையாகவும் அமைத்துக்கொள்ள முடியும்.

எனவே இந்த அலங்கரிப்பு நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுமாக இருந்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். சில சுவர்த் தொகுதிகளில் தாவரங்களை வளர்ப்பது கடினமாக இருந்தால் அப்படியான சுவர்களில் நிறச்சாயங்களை பயன்படுத்துவதில் தவறில்லை.

இரசாயன கலவை கொண்ட நிறச் சாயங்களை விடவும் சூழல் நேயமிகு நிறங்களைப் பயன்படுத்தி சிறந்த முறையில் சுவரோவியங்களை வரைவது சிறப்பாக இருக்கும். நிறங்களைப் பயன்படுத்துகின்ற போது முடியுமான வகையில் அந்த நிறங்கள் சூழலோடு ஒத்துப் போகின்ற வகையில் காணப்படுவது சிறந்தது. சில பகுதிகளில் கடுமையான நிறத்திலான சுவர் ஓவியங்களை பார்க்க முடிகிறது. அவை சிவப்பு, மஞ்சள், கறுப்பு நிறங்களில் காணப்படுகின்றன. இவ்வாறான நிறங்களுக்கு வெப்பத்தை உறிஞ்சுகின்ற தன்மை காணப்படுகின்றது. நகர வெப்ப மடைதலுக்கு இந்நிறங்கள் காரணமாக அமையலாம். பச்சை, நீலம், வெள்ளை போன்ற சூழலோடு இணைந்து போகக் கூடிய நிறச் சாயங்களைப் பயன்படுத்தியும் குளிர்ச்சியான நிறங்களைப் பயன்படுத்தியும் சித்திரங்களை வரைகின்ற போது அவை மிகவும் சிறப்பானதாகக் காணப்படும்.

குறிப்பாக இலங்கையில் வெற்றுச் சுவர்களைப் பார்க்கின்ற போது கல்வி வலயங்களோடு தொடர்பான வெற்றுச் சுவர்களாகவும், வைத்தியசாலைகளுடன் தொடர்பான வெற்றுச் சுவர்களாகவும், விளையாட்டு மைதானங்களுடன் தொடர்பான சுவர்களாகவும், மத வழிபாட்டுத் தளங்களுடன் தொடர்பான சுவர்களாகவும் உல்லாசப் பயணத்துறையோடு தொடர்பான வெற்றுச் சுவர்களாகவும், ஓய்வைக் கழிக்கின்ற சிறுவர் மற்றும் முதியோர் பூங்காக்களின் சுவர்களாகவும் காணப்படுகின்றன. இவை தவிர பஸ் தரிப்பு நிலையங்கள், புகையிரதத் தரிப்பு நிலையங்கள் உள்ளிட்ட பாதைகளை அண்டிய வெற்றுச் சுவர்களும் காணப்படுகின்றன.

எனவே இவ் வெற்றுச் சுவர்கள் எங்கு எப்படியான இடத்தில் காணப்படுகின்றன? அவ்வலயத்திற்கு எந்தச் சித்திரம் பொருத்தமானது என்பதை அவதானிக்க வேண்டும். முடியுமான வரையில் செடி, கொடி மற்றும் ஒட்டுத் தாவரங்கள் மூலமான குத்தான பூந்தோட்டங்களாக அவ்வெற்றுச் சுவர்கள் அலங்கரிக்கப்பட வேண்டும். அவ்வாறு முடியாமல் போகின்ற போது தான் நிறச்சாயங்களை பயன்படுத்தி அலங்கார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நிறச்சாயங்களை பூச முன்னர் அப்பிரதேசத்திற்குரிய சூழல் பின்னணி என்னதென்பதை அவதானித்து அதற்கேற்றாற் போல் அந்தச் சுவர்கள் அலங்கரிக்கப்பட வேண்டும்.

உதாரணமாக ராஜகிரியவில் அமைந்துள்ள ஆயுர்வேத மருத்துவமனைக்குப் பக்கத்தில் மிகப் பெரும் சுவர்கள் காணப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் அங்கு பின்னணிச் சூழலுக்கேற்ற சுவர்ச் சித்திரங்கள் ஓரளவுக்கு காணப்பட்டன. அவ்விடத்தால் செல்கின்ற மக்கள் இது சுதேச மருத்துவத்துடன் தொடர்பான இடமொன்று என்பதை அறிந்துகொள்கின்றனர். அதிகமான நேரங்களில் சிற்சில பகுதிகளில் திட்டமிடப்படாமல் மேற்கொள்ளப்படுகின்ற வெற்றுச் சுவர் அலங்கார நடவடிக்கைகளால் மக்கள் அங்கு என்னதான் உள்ளது என்பதை தெரிந்து கொள்வதில் கஷ்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது. பின்னணிச் சூழல் கருத்திற்கொள்ளப்படாமல் அவசர அவசரமாக திட்டமிடப்படாது அலங்கரிப்பு நடவடிக்கைகள் இடம் பெறுகின்ற போது இப்படியான நிலை ஏற்படும்.

நாம் எடுக்கின்ற நடவடிக்கைகள் மக்களுக்கு அறிவூட்டக்கூடிய விதத்திலும் பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் இன ஐக்கியத்தை எடுத்துக் காட்டும் விதமாகவும் காணப்பட வேண்டும். அலங்காரங்கள் வரைகின்ற போது சில சிந்தனைக் கருத்துக்களை குறிப்பிட வேண்டும். உதாரணமாக நீரோடு தொடர்பான சுவரோவியம் வரைகின்ற போது ''நீர் வளத்தைப் பேணி காப்போம்'', ''ஒவ்வொரு நீர்த்துளியும் பிரயோசனமானது'', மேலும் ''சூழலை நாம் காப்போம் சூழல் நம்மைக் காக்கும்'', ''சிறைக் கைதிகளும் மனிதர்களே'' என்கின்ற வகையில் மக்களுக்கு சிந்திக்க கூடிய விதத்தில் கருத்துக்களை மற்றும் சிந்தனைத் துளிகளைக் கொடுக்க வேண்டும். அப்போது தான் அவர்களுடைய நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமாக இருக்கும்.

அதேநேரம் இஸ்லாத்திலும் சூழலைப் பாதுகாத்தல் உள்ளிட்ட சூழலோடு தொடர்பான பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அல்குர்ஆன், ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்களையும் சுவரோவியங்களாக கொண்டு வர முடியும். இஸ்லாம் குறிப்பிடும் மரங்களை நடுவதன் முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி சுவரோவியங்களை வரைய முடியும். இவ்வாறான நிலைமையில் அது மக்களுக்கு பிரயோசனமானதாகவும் மாணவர்களுக்கு படிப்பினையூட்டக்கூடியதாகவும், சூழலுக்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் இருக்கும்.

வெறுமனே இரசாயனக் கலவைகள் கொண்ட வர்ணப் பூச்சுக்கள் மூலம் சித்திரம் வரைகின்ற போது அதிகமாக Volatile Organic Compounds (VOCs) என்று சொல்லக்கூடிய விஷ வாயு வளியை மாசுபடுத்தக் காரணமாக இருக்கலாம். எனவே நாம் சூழல் நேய நிறச்சாயங்களை பயன்படுத்துவதன் மூலமும் முடியுமான வகையில் உயிரியல் ரீதியான மரம் செடி கொடிகள் மூலம் சுவர் அலங்காரங்களை மேற்கொள்கின்ற போதும் இவ்வாறான நிலைமைகளை இல்லாமல் செய்யலாம்.

தாவர ரீதியாக குறுகிய காலப்பகுதியில் வெற்றுச் சுவர்களை அலங்கரிக்க முடியாது என சிலர் கூறுகின்றனர். ஆனால் அவை ஒரு வருடத்திற்குள் அதன் வளர்ச்சியை காட்டிக் கொண்டு போகும். அதேநேரத்தில் இது நிலையானதாகவும் நீண்டகாலமாக அவற்றின் மூலம் பயன்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். அவசரமாக வரைகின்ற சித்திரங்கள் காலப்போக்கில் நிறம் மங்கிப் போகலாம். இடையிடையே புனர்நிர்மாணம் செய்ய வேண்டியும் ஏற்படலாம். அங்கு நிலைபேண் தன்மை இருக்காது.

நிலைபேண் இலக்கை அடையக் கூடிய விதத்தில் சுவரலங்காரங்கள் காணப்பட வேண்டுமாக இருந்தால் உயிரியல் ரீதியிலான விடயங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உயிரியல் ரீதியான முக்கியத்துவம் என்று சொல்கின்ற போது சூழலியல் ரீதியாக ஒரு அழகான, கவர்ச்சிகரமான, தூய்மையான தன்மையை இது கொடுக்கும். காற்றினை தூய்மைப்படுத்தும். அதாவது பச்சைத் தாவரங்கள் ஒக்சிஜனை வெளியிடும். காபன்டயொக்சைட்டினை உறிஞ்சிக் கொள்ளும். இதன் காரணமாக காபனின் அளவு சுற்றுச் சூழலில் குறையும் நிலை ஏற்படும். இந்தத் தாவரங்கள் ஒலி, தூசு போன்ற அழுத்தங்களை மாசுக்களை குறைக்கும் வலிமையையும் கொண்டிருக்கும். அத்தோடு குளிர்ச்சியான காலநிலைக்கு உதவி செய்யக் கூடியதாக பசுமைத் தாவரங்களாகவும் இருக்கும்.

அதேநேரம் சில மதில்கள் அலங்கோலமாக முறையற்ற விதத்தில் காணப்படுவதையும் கண்டுகொள்ள முடிகிறது. இந்நிலை சிலவேளை வீதி விபத்துக்களையும், மனஅழுத்தத்தையும் மற்றும் சுற்றுப்புறச் சூழலின் பின்னணியையும் மாற்றிவிடுகின்றது. எனவே இவை திருத்தப்பட்டு சிறந்த சுற்றுப்புறச் சூழலாக அலங்கரிக்கப்படுகின்ற போது அந்தச் சூழலுக்கான பெறுமதி கூடுகின்றது. எனவே இந்த அலங்காரம் சூழலினுடைய பெறுமதியை அதிகரிக்கச் செய்கின்றது. அதேபோல மனிதனுடைய சுகாதாரத்திற்கும், சூழலினது சுகாதாரத்திற்கும் இது வழிவகுக்கின்றது.

மேலும் மன நிம்மதியுடன் ஓய்வை மகிழ்ச்சியாக கழிப்பதற்கு இது முக்கியமான ஒரு விடயமாக காணப்படுகின்றது. எமது நாடு உல்லாசப் பயணத்தை ஈர்க்கின்ற நாடாகக் காணப்படுகின்றது. எனவே உல்லாசப் பயணிகளை ஈர்க்கின்ற ஒரு கவர்ச்சிகரமான இலங்கையை கட்டியெழுப்புவதற்கு சுவர் அலங்காரம் என்கின்ற விடயத்தை சிறந்த முறையில் முன்னெடுக்கும் போதே நிலைபேண் அபிவிருத்தி இலக்கை அடையக்கூடிய விதத்திலான, ஒரு பசுமையான சூழல் நேயமான நடவடிக்கையாக இது காணப்படும். இவ்வாறு மேற்கொள்ளும் பட்சத்திலேயே அதன் பெறுமதியும் பலன்களும் இன்னும் அதிகரிக்கும்.

எனவே, அனைத்து இலங்கையர்களும் ஒன்றுபட்டு சுற்றுப்புறச் சூழலை எழில் மிக்கதாகவும் தூய்மையாகவும் வைப்பதினூடாக, சுகமான ஆரோக்கியமான எதிர்கால இலங்கையைக் கட்டியெழுப்ப சிந்தித்துச் செயற்படுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.வைப் பலவீனப்படுத்தும் ரணிலின் திருகுதாளங்கள்

**ஆலிப் அனாம்**



ரணசிங்க பிரேமதாஸ புலிகளின் தற்கொலை குண்டுத் தாக்குதலில் இறந்ததன் பின்னர் சில மாதங்கள் டி.பி. விஜேதுங்க ஜனாதிபதிப் பதவி வகித்தார். கடந்த 2 தசாப்தங்களில் ஐ.தே.க. சார்பில் ஜனாதிபதிப் பதவி வகித்த இறுதியானவர் விஜேதுங்கவே. பின்னர் நடைபெற்ற தேர்தலில் சந்திரிக்கா வெற்றி பெற்றார். சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் அதிலிருந்து உருமாறிய சுதந்திர மக்கள் ஐக்கிய கூட்டணியும் அவை இரண்டிலிருமிருந்து தற்போது உருப்பெற்றுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் தொடர்ந்தும் ஜனாதிபதிப் பதவிகளை வகித்து வருகின்றன.

கடந்த மூன்று தசாப்த இடைவெளியில் ரணில் இரு முறை குறைந்த காலம் பிரதமர் பதவியை வகித்துள்ளார். ஐ.தே.க.வின் ஆட்சி கூட்டுக் கட்சிகளோடு சேர்ந்து இரண்டு முறை நிலவியுள்ளது. தற்போது இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ தோற்கடிக்கப்பட்டதை அடுத்து ஐ.தே.க.விற்குள் பெரும் பூகம்பம் வெடித்துள்ளது. கட்சித் தலைமைப் பதவியிலிருந்து ரணில் விலக வேண்டும் என்ற கோஷம் வலுப்பெற்று வருகின்றது. சஜிதின் ஆதரவாளர்கள் மட்டுமன்றி, ஐ.தேக.வைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள் அமைப்பும் ஆதரவாளர்களும் கூட இந்தக் கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர்.

நான்கரை ஆண்டு கால ஐ.தே. முன்னணியின் ஆட்சி சிங்கள மக்களின் அமோக வரவேற்பைப் பெறவில்லை. ஐ.தே.க. அரசியல்வாதிகள் பெரும் ஊழல் பேர்வழிகள். மத்திய வங்கியிலிருந்து பல பில்லியன்களைத் திருடியவர்கள், நாட்டின் பொருளாதார வளங்களை அமெரிக்காவுக்கு விலை பேசியவர்கள், ராஜபக்ஷாக்கள் குறித்து அவர்கள் 2015 தேர்தலுக்கு முன்பாக வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் போலியானவை போன்ற கருத்துக்கள் சிங்கள பெரும்பான்மை மக்களிடையே பரவுகின்ற வகையிலும், திட்டமிட்டு பரப்பப்படுவதற்கு ஏதுவான வகையிலுமே நல்லாட்சி என்ற பெயரிலான ரணில் தலைமையிலான ஆட்சி நடந்தேறியது.

20 ஆண்டுகளுக்குப் பின்னர் தம் வசம் கிட்டிய அதிகாரத்தைத் தக்க வைக்க முடியாத நிலையில் நவம்பர் 16 தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி மண்ணைக் கவ்வியது. கூட்டுச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகளும் பெரும் ஏமாற்றமடைந்தன. தேர்தலுக்குப் பின்னர் இக்கட்சிகள் பெரும் திரிசங்கு நிலைக்கு ஆளாகியுள்ளன.

ஐ.தே.மு. வேட்பாளர் சஜித்தின் தோல்விக்கு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவே பிரதான காரணம் எனவும், கட்சியின் தலைமைப் பதவியில் ரணில் நீடிக்கும்வரை ஐ.தே.க. இதற்கு மேல் வெற்றி பெறாது எனவும் கட்சி ஆதரவாளர்கள் விவாதிக்கத் தொடங்கியுள்ளனர். ஐ.தே.க.வின் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரிய, கட்சித் தலைமையிலிருந்து விலகி ரணில் ஓய்வுபெற வேண்டும் என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளார். இது ரணில் எதிர்கொள்ளும் மிகப் பெரும் அரசியல் பின்னடைவாகும்.

இரு முறை பிரதமர் பதவியை வகித்த ரணில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் ஒருமுறையேனும் மாற வேண்டும் என்ற ஆசை கொண்டிருந்தார். கட்சி ஆதரவாளர்கள் அதற்கு இடம்கொடுக்கவில்லை. வேட்பாளரை அறிவிப்பதில் ஏற்பட்ட இழுபறிக்கு இதுவே காரணமாகும்.

ஐ.தே.க.வின் முன்னாள் தலைவர் ஜே.ஆர். ஜயவர்தன 82 வயது வரை கட்சியின் தலைவராக இருந்தார். தலைமைப் பொறுப்பைக் கைவிடுமாறு அவரை யாரும் கோரவில்லை. அவ்வாறு கோருகின்ற தைரியமும் துணிச்சலும் அப்போது யாருக்கும் இருக்கவுமில்லை. மிகப் பெரும் அரசியல் சர்வதிகாரியான அவர் 70 வயதிலேதான் நிறைவேற்று அதிகார முறைமையைக் கைப்பற்றினார். அதனை மிக மோசமான முறையில் துஷ்பிரயோகம் செய்தார். இன்று 70 வயதிலேயே அரசியலிலிருந்து ஒதுங்குமாறு கோரப்படும் ரணில் 2023 ஆம் ஆண்டு வரை அத்தலைமைப் பதவியில் நீடிப்பார் என்று ரவி, அகில விராஜ், ருவன் விஜேவர்தன, இரான் விக்ரமசிங்க போன்ற ரணில் பக்தர்கள் கூறி வருகின்றனர்.

கட்சியின் இளம் தலைமுறையினர் ரணிலின் தலைமைத்துவம் குறித்து சவால் விடுத்துள்ள நிலையில் சஜித் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக நியமனம் பெற்றுள்ளார். எவ்வாறாயினும், கட்சிக்குள் ரணில் தலைமைக்கு எதிரான போராட்டம் ஒவ்வொரு நாளும் வலுத்து வருகின்றது.

சமீபத்தில் நடந்த கூட்டமொன்றில், சஜித் இந்தத் தேர்தலில் தோல்வியடைவார் என்பது தேர்தலுக்கு முன்னதாகவே தமக்குத் தெரிந்திருந்தது என ரணில் கூறிய கருத்து அதிர்ச்சியை ஏற்படுத்தவில்லை. ஏனெனில், ரணிலும் அவரது பக்தர்களும் சஜித்தைத் தோற்கடிக்கின்ற தந்திரங்களை நுணுக்கமாக மேற்கொண்டு வந்தனர்.

2015 இல் தோல்வியடைந்த கையோடு மஹிந்த அணியினர் பௌத்த விகாரைகளை மையப்படுத்தி பிரச்சாரங்களை முடுக்கி விட்டனர். சிங்கள மக்கள் மத்தியில் அவர்களது வாதங்களும் கருத்துக்களும் பிரபலம் பெறத் தொடங்கின. இந்நிலையில், இறுதிவரை இழுத்தடித்து விட்டு ஒரு மாதம் எஞ்சியிருந்த நிலையில், சஜித்தை வேட்பாளராக அறிவித்தார் ரணில்.

தேர்தலுக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட மு.கா. தலைவர் ஹக்கீம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர்கள் நடைபெறவுள்ள தேர்தலில் கோத்தா வெற்றி பெறுவது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது என்ற செய்தியை தம் ஆதரவாளர்கள் சிலரிடம் முன்வைத்துள்ளனர். அச்சந்தர்ப்பத்திலேனும் அவர்கள் கோத்தாவுக்கும் விரும்புகின்றவர்கள் வாக்களிக்கலாம் என்று மக்களை அறிவுறுத்தவில்லை. அணிதிரண்டு தோற்கப் போகும் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு மக்களை பிழையாக வழிநடாத்தியுள்ளனர்.

முஸ்லிம்களின் அரசியல் விடுதலைக்காக உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் இன்று ஐ.தே.க.விற்குப் பின்னால் அளவுக்கு அதிகமாக அலைக்கழிந்து இறுதியில் தோற்றுப் போய் நிற்கின்றது. ரணில் ஓட்டும் ரயிலில் பணிப்பதற்கு நான் தயாரில்லை என்று கூறிச் சென்ற ஸ்தாபகர் அஷ்ரபின் அணுகுமுறைக்கு மாற்றமாக ரணிலைச் சுற்றி வருவதன் நோக்கம் என்ன? ரணில் ஐ.தே.க.வின் தலைவராக இருக்கும் வரை நாட்டுக்கோ முஸ்லிம்களுக்கோ ஐ.தே.க.வுக்கோ விடிவு ஏற்படப் போவதில்லை.

கடந்த பல தசாப்தங்களாக கட்சி தொடர் தோல்வியைத் தழுவியமைக்கு ரணிலின் ஆளுமையின்மையே காரணம். தற்துணிவும் நடைமுறை அறிவும் ரணிலிடம் இல்லை. ரணில் சிங்கள மக்களைப் பொறுத்தவரை ஒரு மேட்டிமை. ஐந்து நட்சத்திர ஹோட்டங்களில் கோட் சூட் அணிந்து, விருந்துண்டு, அமெரிக்கத் தலைவர்களுடன் ஆங்கிலத்தில் பேசத் தெரிந்த ஒரு கிறிஸ்தவர் அவ்வளவுதான்.

கடந்த சில ஆண்டுகளாக கட்சித் தலைவராக இருந்து கொண்டே ரணில் போடும் இரட்டை விளையாட்டுக்கள் மற்றும் மேற்கு நாடுகளுக்கான ஜால்ரா சிங்கள மக்கள் மத்தியில் ரணிலைப் பற்றி மட்டுமன்றி, ஐ.தே.க.வைப் பற்றியும் மிக விகாரமான படிமங்களை உருவாக்கி விட்டுள்ளது. ரணில் நீண்ட காலமாக ஐ.தே.க.வின் தலைவராக இருந்து வருகிறார். இரு முறை பிரதமர் பதவி வகித்துள்ளார். அவ்விரு முறையும் முஸ்லிம் கட்சிகள் அவருக்கு ஆதரவளித்தன. முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் இன்றுவரை ஐ.தே.க. ஆதரவாளர்களாகவே இருந்து வருகின்றனர். ஆனால் ஐ.தே.க.வில் முஸ்லிம்களுக்குக் கிட்டிய நலன்கள் என்ன? குறைந்தபட்சம் அபிவிருத்தி அரசியலிலேனும் முஸ்லிம்கள் விடிவு கண்டனரா?

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் 40 ஆண்டு காலம் ஐ.தே.க.வில் அங்கத்துவம் வகித்தவருமான ஏ.எச்.எம். அஸ்வரின் ஒரு கூற்று நினைவுக்கு வருகிறது. ''ரணில் முஸ்லிம்களுக்காக என்ன செய்துள்ளார். மிகக் கொதிப்பான சூழ்நிலையிலும் தமிழர்களைத் திருப்திப்படுத்த அவர் எடுத்த நடவடிக்கைகள் முஸ்லிம்களை பெருமளவு பாதித்தது'' என்று அஸ்வர் ஒருமுறை கூறியிருந்தார்.

ரணில், சமாதான ஒப்பந்தங்களில் முஸ்லிம் அபிலாசைகளை ஒருபோதும் கருத்திற் கொண்டதில்லை. முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பில் அவருக்கு எந்த அக்கறையும் இருந்ததில்லை. முஸ்லிம் பிரதேச அபிவிருத்தி குறித்தும் ரணிலுக்கு எந்தக் கரிசனையும் இருந்ததில்லை. இப்படிப்பட்ட ஒரு ரணிலை ஹக்கீமும் ரிஷாதும் இதற்கு மேலும் ஆதரிப்பதில் முஸ்லிம்களுக்கு ஒரு புண்ணியமும் இல்லை.

2000 களின் தொடக்கத்தில் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகள் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்வதற்கு ரணில் இணங்கவில்லை. பேருக்காக ஹக்கீமை அரச தரப்புக் குழுவில் இணைத்திருந்தார். அவர் முதன் முறையாக பிரதமர் பதவி வகித்த போது தமிழர்களுக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை உருவாக்கப்பட்டது. அதில் முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும் வழங்கப்படவில்லை.

மூதூரில் முஸ்லிம்கள் மீது புலிகள் இனச் சுத்திரிப்பை மேற்கொண்டபோது மொத்தமாகவே அங்கிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்படும் வரை அமைதி காத்த ரணில் அரசாங்கம், மூதூர் முற்றாகவே பற்றி எரிந்ததன் பின்னர் சாம்பல் மேட்டை அணைப்பதற்கு ஒரு வாளித் தண்ணீருடன் செல்வதான ஒரு கேலிச் சித்திரத்தை அன்றைய டெய்லி மிரர் ஆங்கிலப் பத்திரிகையில் வரைந்திருந்தார்கள்.

இதிலுள்ள இன்னொரு வேடிக்கை, மூதூரில் புலிகள் நரவேட்டை நடாத்திக் கொண்டிருந்த போது ரணிலுக்கு முண்டு கொடுத்த அமைச்சர் ஹக்கீம் மூதூரில் தங்கியிருந்தார். அவரால் ரணில் மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. கடந்த நான்கரை ஆண்டு கால கூட்டாட்சி எனப்படும் காட்டாட்சியில் அம்பாறையில் தொடங்கிய முஸ்லிம்கள் மீதான இனச் சம்ஹாரம் திகன வரை பரவியது. அதற்கு முன்னர் கிந்தோட்டையில் முஸ்லிம்கள் குறி வைத்துத் தாக்கப்பட்டனர்.

4/21 இற்குப் பின்னர் நீர்கொழும்பு, மினுவாங்கொடை, குளியாப்பிட்டிய, பண்டுவஸ்நுவர பிரதேசங்களில் முஸ்லிம்கள் மீதும், முஸ்லிம்களின் சொத்துக்கள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு பல கோடி சொத்துக்கள் அழிக்கப்பட்டன. ரணில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறைந்தபட்சம் இவற்றுக்கு இற்றை வரை நஷ்டஈடும் வழங்கவில்லை.

கலவரம் முடிந்ததற்குப் பின்னர் ரணிலுடன் ஹெலியில் சென்ற ஹக்கீ





மும் ரிஷாதும் சாம்பல் மேடுகளை பார்வையிட்ட வண்ணம் நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கப்படும் என்றனர். ஆனால், எதுவும் நடக்கவில்லை. கொட்டாம்பிடிய ஜும்ஆ பள்ளிவாயல் பல மாதங்களாக மூடப்பட்டது. தாக்கப்பட்ட பள்ளிவாயல்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு முழுச் செலவையும் அரசு ஏற்கவில்லை. ஆனால், 4/21 தாக்குதலில் சேதமடைந்த கிறிஸ்தவ தேவாலயங்கள் மூன்று வாரங்களுக்குள் முழுமையாக செப்பனிடப்பட்டன. ரணில் களத்திற்கு விரைந்து நிலைமையை நேரடியாகப் பார்வையிட்டு தேவாலயங்களை துரிதமாக புனர்நிர்மாணம் செய்தார். இனவாதிகளால் தாக்கப்பட்ட முஸ்லிம்களின் பள்ளிவாயல் குறித்து இதே கரிசனையை ரணில் வெளிப்படுத்தவில்லை.

முஸ்லிம் முதலமைச்சர்கள் மற்றும் ரிஷாத், ஹக்கீம் ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் ஐ.தே.க. தேசியப் பட்டியல் எம்.பி. ஆவார். ரணிலே இந்தப் பதவியை அவருக்கு வழங்கினார். அதே ரணில் அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்த ரிஷதையும் ஹிஸ்புல்லாஹ்வையும் பதவி விலகுமாறு பட்டினிச் சாவு போராட்டத்தில் ஈடுபட்ட ரத்ன தேரருக்கு ரணில் ஏன் தேசியப்பட்டியல் வழங்கினார் என்பது ஆச்சரியமான கேள்வியே.

ஞானசார தேரர் கடந்த நான்கரை ஆண்டு காலம் முஸ்லிம் விரோதப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தியிருந்தார். அவரைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலோ கைது செய்வது தொடர்பிலோ ரணில் எதுவும் பேசவில்லை. ரணில் குறித்தும் ஞானசாரர் எதுவும் சொல்லவில்லை. ஞானசாரரின் முஸ்லிம் விரோதப் பிரச்சாரங்கள் தொடர்பில் ரணில் காத்து வந்த கள்ள மௌனத்தின் அர்த்தம் என்ன?.

சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தையும் பற்றி வாய் கிழியப் பேசும் ரணில், சட்டத்தின் ஆட்சிக்கு சவால் விடுக்கும் தலை மழித்த ஒரு மதகுரு குறித்து ஏன் எதுவும் பேசவில்லை. நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த உடனேயே வெறுப்புப் பேச்சை தடை செய்யும் சட்டத்தைப் பாராளுமன்றில் கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்பட்டது. ஆனால், ஐ.தே.க. அங்கத்தவர்கள் அதனை நிறைவேற்றாமல் கைவிட்டதற்கான காரணம் என்ன? முஜீபுர் ரஹ்மான் போன்றவர்கள் இவ்விவகாரத்தில் தோற்றுத்தான் போனார்கள். வெறுப்புப் பேச்சைத் தடைசெய்யும் சட்ட மூலம் அன்று நிறைவேற்றப்பட்டிருந்தால் அதற்குப் பிந்திய இனக்கலவரங்கள் தடுக்கப்பட்டிருக்கலாம். ஆயினும், இன அமைதியை நிலைநாட்டி, முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதப் பிரச்சாரங்களைத் தடைசெய்ய வேண்டும் என்ற கரிசனை ரணிலுக்கு இம்மி அளவும் இருக்கவில்லை. அனைத்தையும் பூசி மெழுகிக் கொண்டு குறைநிரப்புக்காக முஸ்லிம் வாக்குகளை சூறையாடுவதே ரணிலின் குறியாய் இருந்தது. எதுவும் செய்யத் திராணியற்ற ஹக்கீம் போன்றவர்கள் அதற்குச் சோரம் போனார்கள்.

தேசிய அளவில் மட்டுமன்றி, ரணில் சர்வதேச அளவிலும் முஸ்லிம் விரோதியாகவே செயற்பட்டு வந்துள்ளார். அமெரிக்க இஸ்ரேல் தீவிர ஆதரவாளரான ரணில், மேற்குலகத்தின் கைப்பொம்மை என்றே கருதப்படுகின்றவர். பலஸ்தீன் பிரச்சினை குறித்து நேர்மையான நிலைப்பாடு எதுவும் ரணிலிடம் இல்லை. பலஸ்தீன் ஒருமைப்பாட்டு நிகழ்வுகள் எதிலும் திட்டமிட்டுப் பங்கேற்பதில்லை. மறுதலையாக இஸ்ரேலின் நேரடி ஆதரவாளராகவும் அதனுடன் நேரடித் தொடர்புள்ளவராகவும் விளங்குகின்றவர்.

2014 டிசம்பரில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற தேர்தலுக்குச் சற்று முன்னர் இலங்கையின் நீர்வளம் மற்றும் விவசாய நிலங்களில் இஸ்ரேலில் முதலீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். 2017 இல் ஏரியல் செரோன் இறந்த போது நியூடில்லி தூதரகத்திற் சென்று அனுதாப ஏட்டில் தனது கவலையைப் பதவு செய்தவர். 2003 இல் ஈராக் மீது அமெரிக்கா தாக்குதலை ஆரம்பித்த போது அமெரிக்க காட்டுமிராண்டித் தனத்தை ஆதரித்துப் பேசிய ஒரேயொரு மூன்றாம் மண்டலத் தலைவர். இத்தகைய ரணிலை முஸ்லிம்கள் இதற்கு மேலும் ஆதரிப்பது ஒரு சுய அழிவாகவும் மிகப் பெரும் அரசியல் பின்னடைவாகவுமே இருக்கும்.

இதன் மறு அர்த்தம் எதிர்த் தரப்பினர் யோக்கியதையானவர்கள் என்பது அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல தாய்நாடு 02

- ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி -

## இலங்கைச் சூழலை புரிந்துகொள்வதில் கல்வியின் முக்கியத்துவம்

ஒரு சமுதாய சூழலுக்கு ஏற்றவாறு வாழ்வதற்கு எமக்கு கல்வி மிக முக்கியமானதாகும். இது தொடர்பில் நாம் சிந்திப்பதற்கு தேவையான அறிவு காணப்பட வேண்டும். அது இயல்பாக வருவதில்லை. 11ஆவது நூற்றாண்டு வரையில் முஸ்லிம்களே உலகை ஆட்சி செய்தார்கள். காரணம், அவர்கள் கல்வியறிவு படைத்தவர்களாகவும் கல்வியைத் தேடுபவர்களாகவும் காணப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து அவர்கள் கல்வியை விட்டு விட்டு வெறும் துஆ மாத்திரமே என்ற கொள்கையின் பின்னால் செல்ல முற்பட்டார்கள். துஆவினால் மாத்திரம் ஒன்றும் கிடைக்கப் போவதில்லை. நபி (ஸல்) அவர்கள் துஆ மாத்திரம் செய்யவில்லை. நபி (ஸல்) அவர்களுக்கு தேவையானதை அவர்கள் செய்துகொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்லும்போது எந்த நேரத்தில் செல்ல வேண்டும்? எத்தனை பேர் செல்கிறார்கள்? யார் உணவைக் கொண்டு செல்வது? யார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது? என்று சகல விடயங்கள் தொடர்பாகவும் திட்டமிட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் சகல விடயங்களையும் தர்க்க ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவுமே மேற்கொண்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் முதற் தடவையாக மதீனாவுக்குச் சென்ற போது அங்கு எத்தனை முஸ்லிம்கள் உள்ளார்கள்? எத்தனை யூதர்கள் உள்ளார்கள்? கிறிஸ்தவர்கள் எத்தனை பேர் உள்ளார்கள்? என்கின்ற விடயங்களைத் திரட்டினார்கள். இதனை நாம் உலகில் முதலாவது எழுதப்பட்ட புள்ளி விபரம் (Statistics) என்கிறோம். இவ்வாறு அறிவு ரீதியில் புள்ளிவிபரங்களைப் பெறுவது முக்கியம்.

முஸ்லிம் சமூகம் இன்று பின்னடைவதற்கான காரணம் உலகியல் கல்விக்கு முன்னுரிமை வழங்காமையாகும். நாம் விஞ்ஞானத்தையும் தர்க்கவியலையும் எவ்வளவு அதிகமாகப் படித்த போதிலும் இஸ்லாம் பற்றிய நம்பிக்கை அதிகரிக்கவே செய்கிறது. இப்படித்தான் இஸ்லாம் வளர்ந்தது. அல்ஜிப்ராவின் தந்தை என வர்ணிக்கப்படும் முஹம்மது பின் மூஸா அல் குவாரிஸ்மி கணிதத் துறையிலும், வானவியலிலும், புவியியலிலும் சிறந்து விளங்கிய ஓர் அரேபியராகக் காணப்பட்டார். மருத்துவத் துறையிலும் அரேபியர்களே சிறந்து விளங்கினார்கள். 'அல் கரோயின்' என்னும் உலகில் மிகப் பழமையான பல்கலைகழகம் மொரோக்கோவைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பெண்ணால் உருவாக்கப்பட்டது.

ஆனால் இன்றைய கால முஸ்லிம்களின் கல்வி நிலைமை பின்னடைந்து செல்கிறது. முதல் ஆயிரம் பல்கலைக்கழகங்களுள் ஒரு முஸ்லிம் பல்கலைக் கழகமாவது உள்ளடங்கியுள்ளதா என்பது கேள்விக்குறி. எம்மால் முழு உலகையும் மாற்ற முடியாது. ஆனால் நாம் வாழும் சூழலையும் சமூகத்தையும் எம்மால் மாற்ற முடியும் என்றால் அது மிகப் பெரும் செயற்பாடாக அமையும். முஸ்லிம்கள் இதுவரை ஆராய்ச்சி செய்துள்ள விடயங்களை விளங்கிக் கொள்வதற்கான அறிவு எம்மிடம் காணப்பட வேண்டும். அது எப்படி வரும்? கல்வியைக் கற்று ஆராய்ச்சி செய்தால்தான் அது பற்றிய சிந்தனை வரும். கல்வி கற்றவர்களால் மாத்திரமே இது பற்றிச் சிந்திக்க முடியும். எனவே நாம் கல்விக்கான முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டும். 1892 இல் கொழும்பு சாஹிரா கல்லூரி உருவாக்கப் பட்ட போது மு.கா. சித்திலெப்பை, வாப்பிச்சி மரைக்கார் போன்றவர் களுக்கு சிலர் "ஆங்கி லக் கல்வியை போதிக்கப் போகின்றீர்கள். ஆங்கி லத்தை கற்றால் எல்லோரும் கிறிஸ்தவர்களாக மாறிவிடுவார்கள்" என்று கூறினார்கள்.

அப்போது மக்களுக்கு அவ்வளவு புரிதல் இருக்கவில்லை. இப்பின்னணியிலேயே சாஹிரா கல்லூரி உருவாக்கப்பட்டது. டாக்டர் ஜாயா அவர்கள் சாஹிரா கல்லூரியை விரிவுபடுத்தி, இலங்கையிலுள்ள ஏனைய பிரதேசங்களிலும் சாஹிரா கல்லூரிகளை நிறுவி, பெண்களுக்கும் சாஹிராக் கல்லூரியில் கற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தார். முஸ்லிம்களில் இன்று பெண்களே பல்கலைக்கழக நுழைவில் 60 வீதமானவர்களாகக் காணப்படுகின்றனர். அன்று ஆரம்பிக்கப்பட்ட நல்ல முயற்சிக்கு இப்படித்தான் இடையூறு செய்தார்கள்.

எனவே நாம் இன்று கல்விக்கான முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும். அதனோடு நாம் வாழும் சூழ்நிலையைத் திறம்பட நோக்க வேண்டும். அதற்கு வரலாற்றை கற்க வேண்டும். வரலாற்றைக் கற்பதற்கு நாம் சிங்கள மொழியைக் கற்க வேண்டும். ஆங்கிலத்தையும் கற்க வேண்டும். இணையத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். இதர சமூகங்களுடன் சேர்ந்து நடக்க வேண்டும். இந்த நிலைமைக்கு வந்தால் எம்மால் முன்னேறிச் செல்ல முடியும். முஸ்லிம்கள் தொடர்பில் பல்வேறு வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. அதில் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு வரலாற்று நூலாக லோனா தேவராஜா எழுதிய நூல் காணப்படுகிறது. அதில் முஸ்லிம்கள் 11 நூற்றாண்டுகளாக இலங்கையில் வாழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் முஸ்லிம்கள் எத்தனை பேர் வந்தார்கள்? அப்போது மிகப் பெரிய ஹிஜ்ரத்துக்களோ, இடப்பெயர்களோ நிகழவில்லை. ஆரம்பத்தில் நான்கைந்து அரேபியர்களே இங்கு வருகை தந்திருப்பார்கள். அல்லது தமிழ் நாட்டிலிருந்து சிலர் வந்திருப்பார்கள். அவர்கள் இங்கு வந்து அடுத்த மக்களோடு சேர்ந்து வாழ்ந்தார்கள். வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். அடுத்த சமூகத்தை சேர்ந்த பெண்களை திருமணம் செய்துகொண்டார்கள். இப்படித்தான் எமது சனத்தொகை பெருகி இன்று 2 மில்லியன் வரை அதிகரித்திருக்கிறது.

அன்று எமது மூதாதையர் 'முஸ்லிம்களுடன் மட்டும் தான் கதைக்க வேண்டும். சிங்களவர்களுடன் கதைக்கக் கூடாது. அவர்களுடைய உணவுகளை உண்ணக்கூடாது' என்கின்ற நிலைப்பாட்டில் இருந்திருந்தால் அவர்களை அந்த இடத்திலேயே சூழ்ந்து கொண்டு தாக்கியிருப்பார்கள். அவர்களது மறைவுடன் இஸ்லாமும் அழிந்து போயிருக்கும். எனவே நாம் இவை பற்றிச் சிந்திக்க வேண்டும். நாம் இந்நாட்டில் பல்லின சமூகத்துடன் வாழ்வதற்காக வேண்டியும், அவர்களை புரிந்துகொள்வதற்காக வேண்டியும், எமது மார்க்கத்தை அடுத்தவர்களுக்கு எத்திவைப்பதற்காக வேண்டியும் மொழியும் கல்வியறிவும் இன்றியமையாதவையாகும்.

"இஸ்லாத்தை நாம் உங்களுக்கு இலகுவாக்கியுள்ளோம்" என்பதாக அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான். பிள்ளைகளுக்கு நாம் இஸ்லாத்தைப் பற்றிய பயமுறுத்தும் படியான கருத்துக்களை வழங்கக் கூடாது. நடுநிலையான புரிதலையே கொடுக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் இஸ்லாத்தை பற்றிய சரியான விளக்கத்தை பெற்றுக்கொள்வார்கள். அல்குர்ஆனையும் ஹதீஸையும் ஆராந்து விளங்குவதற்குக் கூட ஒருவரிடம் அறிவு காணப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாம் எவராவது ஒருவர் கூறுவதையே நம்பவேண்டியேற்படும்.

எனது தந்தை சிங்கள மொழியில் என்னை படிக்க வைத்ததற்கு ஒரு காரணம் கூறுவார். டொக்டர் பதியுதீன் மஹ்மூத் 1960ஆம் தசாப்தத்தில் இலங்கையில் முஸ்லிம்கள் பயமில்லாமல் வாழ வேண்டுமென்றால் சிங்கள மொழியில் கல்வி கற்க வேண்டும் என்பதாக குறிப்பிட்ட கருத்தை அவர் நினைவு கூறுவார். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு தான் எனது தந்தையார் என்னை சிங்கள மொழியில் கற்க வைத்தார். சிங்களத்தில் கல்வி கற்றதனால் தான் இன்று என்னால் எனது சமூகத்திற்கு நிறைய சேவைகளை செய்ய முடிந்துள்ளது. எனவே நாம் சிறந்த முறையில் கல்வி கற்க வேண்டும். சமூகத்தில் சகல மக்களுடனும் சேர்ந்து வாழ வேண்டும். மொழிகளை கற்க வேண்டும். இவற்றை கொண்டு இஸ்லாத்திலுள்ள நல்ல விடயங்களை அடுத்தவர்களுக்கு எத்திவைக்க வேண்டும்.

# பழிவாங்கும் படலம்

• விக்டர் ஐவன்

தமிழில்: ராஃபி சரிப்தீன்

எமது எதிர்த் தரப்பினரைப் பழிவாங்கும் தன்மையானது பழங்குடியினர்களிடமிருந்து எமக்கு கிடைக்கப் பெற்ற பழக்கமொன்றாகக் குறிப்பிடலாம். அது இலங்கை அரசியலில் ஆழமாகப் பதிந்திருக்கிக்கும் ஒன்றாகவும் குறிப்பிடலாம். இலங்கையானது ஜனநாயக நாடாக இருப்பது அதன் வெளித்தோற்றத்தில் மாத்திரமே என்பது இதன் ஊடாகத் தெளிவாகின்றது.

இலங்கையில் தொடராக தேர்தல்கள் நடாத்தப்படுகின்ற போதிலும் ஜனநாயகம் குறித்த ஆழமான புரிதல் இருக்கின்ற நாடொன்றாக குறிப்பிட முடியாமலுள்ளது. இலங்கையில் மக்கள் மத்தியில் அபிமானம் பெற்ற லிபரல் முறையிலான அமைப்புக்கள் எந்த காலப்பகுதியிலும் இருந்ததாகத் தெரியவில்லை என்பதுடன் இலங்கையின் அரசியல் தலைவர்களிலும் லிபரல் சிந்தனையுடைய எவருமே இருக்கவில்லை. பொன்னம்பலம் அருணாச்சலம், ஈ.டப்லிவ் பெரேரா, டீ.பீ.ஜயதிலக போன்ற எமது ஆரம்ப காலத் தலைவர்கள் எவரையுமே லிபரல் குறித்த தெளிவுள்ள அரசியல் தலைவர்களாகக் கருத முடிவதில்லை.

இலங்கையில் இருந்து வந்த தேசப்பற்று குறித்த சிறந்த விளக்கவுரை ஒன்று டொனமூர் ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இலங்கையின் தேசப்பற்றானது நாட்டின் அனைத்து மக்கள் தொகுதியினரையும் உள்ளடக்கியதும் நாட்டை முதன்மைப்படுத்தியதாகவும் இருக்கவில்லை. மாறாக சாதி, இன, மதங்களை முதன்மைப் படுத்திய அமைப்பிலான தேசப்பாற்றாகவே அது குறிப்பிடப்பட்டிருக்கின்றது. குறித்த அறிக்கை வெளியிடப்பட்டு 90 வருடங்கள் அளவில் கழிந்துவிட்ட போதிலும் இலங்கையின் தேசப்பற்று என்பதானது எந்த விதமான மாற்றமுமின்றி அன்றிருந்த அதே நிலையிலேயே இன்றும் காணப்படுகின்றது.

### பழங்குடி அரசியல்

எதிர்த்தரப்பினிரிடமிருந்து பழி தீர்த்துக்கொள்கின்ற நடைமுறை இலங்கை சுதந்திரம் பெற்றுக் கொண்ட காலப்பகுதியிலிருந்தே இருந்து வருகின்ற ஒரு ஜனாநாயக முறைக்கு மாற்றமான முறையாகக் குறிப்பிடலாம். அரசாங்கங்கள் மாற்றம் பெறும்போது எதிர்க்கட்சிகள் சார்ந்த தலைவர்களிடம் மாத்திரமன்றி எதிர்க்கட்சி ஆதரவாளர்களிமும் பழி தீர்த்துக்கொள்ளப்படுகின்றது. அரசியல்வாதிகள் கூட நாட்டின் நலன்களை முன்னிறுத்தி செயலாற்றாது, தமது கட்சி ஆதரவாளர்களின் நலன்னை முன்னிறுத்தியே செயற்பட்டு வருக்கின்றனர்.

கட்சிகளின் ஆதரவாளர்கள் தவறு என்பதாகக் கருதுவது எதிர்த்தரப்பினரால் செய்யப்படுகின்ற தவறுகளை மாத்திரமாகும். தமது தலைவர்கள் மூலமாக நிகழ்கின்ற தவறுகளை அவர்கள் தவறு என்பதாகக் கருதுவதில்லை. தான் ஒரு வெற்றியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதற்கு முன்னர் ஆட்சியலில் இருந்தவர்களின் பழிவாங்கல்களுக்கு அலக்கான தமது கட்சி ஆதரவாளர்களுக்கு தாராளமாக நட்டஈடு வழங்கும் செயன்முறைகளை அனைத்து அரசியல் கட்சிகளும் பழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றன. அதற்காக இலங்கை நாடு செலுத்தியிருக்கும் நட்டஈடுகளைக் கணக்கிடுமிடத்து அது பாரிய தொகையாக அமையக்கூடும்.

இலங்கையின் கட்சிகளுக்கு ஏதோ ஒரு அடிப்படையில் குடும்பப் பின்னணிகள் காணப்படுவதுடன் அவற்றுக்கு உரிமை கோருகின்ற குடும்பங்களோ அல்லது குடும்பங்களின் தொகுதிகளோ காணப்படுவதுண்டு. ஐக்கிய தேசியக் கட்சியின் உரிமை ஒரு குடும்பத்தைச் சேர்ந்த குழுவொன்றிடமே காணப்படுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உரிமை ஒரு குடும்பத்திடம் காணப்பட்டது. தற்போது பொது ஜன பெரமுனவின் உரிமையும் ஒரு குடும்பத்திடமே இருக்கின்றது.

தேர்தல்களில் போட்டியிடுபவர்கள் கட்சியின் நிர்வாகத்தினால் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்ற போதிலும் கட்சியின் உரிமையாளினாலேயே வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அங்கத்துவக் கட்டணம் செலுத்துகின்ற அமைப்பிலான எந்த அங்கத்தவர்களும் இலங்கையிலிருக்கின்ற கட்சிகளில் இருப்பதாகத் தெரியவில்லை. அனைத்துக் கட்சிகளும் கறுப்புப் பணத்திலேயே இயங்கி வருகின்றன. கட்சிகளுக்கு நிதி கிடைக்கும் முறைகள் குறித்தோ கிடைக்கப்பெறுகின்ற நிதியின் அளவு குறித்தோ அல்லது அவை செலவிடப்படுகின்ற முறை குறித்தே கட்சித் தொண்டர்கள் அறிவதில்லை.

### பழிவாங்கும் கலாச்சாரம்

முதலாவது பிரதமரான டீ.எஸ். சேனாநாயக்க இந்திய தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையை நீக்கிவிட்டார். தோட்டப் பகுதிகளில் அவர்களது வேட்பாளர்கள் போட்டியிடக தொகுதிகளில் சமசமாஜ கட்சிக்கு வாக்குகளை வழங்கிய காரணத்தினாலும் தோட்டத் தொழிலாளர்களின் கட்சிகளிலிருந்து தெரிவானவர்கள் தனக்கு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஆதரவளிக்கவில்லை என்பது இதற்கான காரணமாகும். 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க தமிழ் மக்களின் மொழி உரிமையை இல்லமலாக்கியது தனக்கு ஆதரவளித்த சிங்கள பௌத்தர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவாகும்.

இந்த அடிப்படையில் எதிர்த்தரப்பினரிடம் உச்ச அளவில் பழிதீர்த்துக் கொண்ட தலைவராக ஜனாதிபதி ஜயவர்தனவை குறிப்பிடலாம். தான் ஆட்சிக்கு வந்ததும் பொலிஸ் படையினருக்கு ஒரு வார காலம் விடுமுறை வழங்குவதாக 77 ஆம் ஆண்டில் தேர்தல் கூட்டமொன்றில் அவர் குறிப்பிட்டிருந்தார். சிறிமாவோவின் சமகி பெரமுன ஆட்சிக் காலத்தில் யூ.என்.பீ ஆதரவாளர்கள் கடுமையாகப் பழிவாங்கப்பட்டிருந்தனால் அதற்காக பழிதீர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்குவதற்காகவே பொலிஸ் படை



யினருக்கு ஒரு வாரம் விடுமுறை வழங்குவதாக தனது கட்சிக் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தார். வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய வெற்றி பெற்றதன் பின்னர் பழிதீர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பமும் தமது ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டது. பொலிஸ் அறிக்கையின் பிரகாரம் தீக்கிரையாக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை ஆயிரத்தை அண்மித்திருந்தது.

இந்த படலம் அத்துடன் நின்றுவிடவில்லை. பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மையினைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி ஜயவர்தன தனது எதிர்த் தரப்புவாதியினால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத அடிப்படையில் அவரது குடியுரிமையை இல்லாமலாக்கினார். விஜேவீரவின் மக்கள் விடுதலை முன்னனி அம்மையாரின் குடியுரிமையை நீக்குவதில் பிரதான பங்காளராக செயற்பட்டது.

ஜே.வி.பி.யின் இரண்டாவது கலவரக் காலப் பகுதியில் தமது பாதுகாப்புக்காக பிரத்தியேக பாதுகாப்புப் படையினை வைத்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், தமது எதிர்த்தரப்பினரை ஜேவிபி அங்கத்தவர்கள் என்பதாக குறிப்பிட்டு கொலை செய்தனர். ஜேவிபியினரும் தமது முதல் சுற்றில் ஆளும் கட்சி ஆதரவாளர்களையும் இடதுசாரி கட்சிகளின் ஆதரவாளர்களையும் கொலை செய்தததுடன் இரண்டாவது சுற்றில் சிறிலங்க சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களையும் கொலைசெய்தனர்.

### பழிவாங்கும் செயன்முறையில் மாற்றம் உருவாதல்

ஐ.தே.க.யின் 17 வருட ஆட்சியின் பின்னரான சந்திரிக்கா ஆட்சிக் காலமாது பழிவாங்கும் செயன்முறையில் பாரியதொரு மாற்றம் ஏற்பட்ட காலமாகக் குறிப்பிடலாம். குறித்த மாற்றத்திற்கு குறிப்பிடத்தக்க அளவில் எனது பங்களிப்பும் காரணமாக அமைந்ததுடன் இன்னும் சில காரணங்களும் அந்த மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தின.

94 ஆம் ஆண்டு தேர்தலின்போது தேர்தல் பிரச்சாரத்துக்கு பொறுப்பான குழுவுக்கு தலைவராக நான் செயறலாற்றினேன். வாத பிரதிவாதங்களுக்கு மத்தியிலாயினும் பிரச்சாரப் பணிகளில் சேறு பூசும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்பதற்கு குழுவினரை உடன்படச் செய்வதற்கு என்னால் முடியுமாக அமைந்தது. தேர்தல் பிரச்சாரங்களை முடிவுக்கு கொண்டுவரவேண்டிய இறுதித் தினத்தின் பின்னர் அனைத்து பிரதான செய்தித் தாள்களிலும் இரண்டு பக்கங்களுக்கான அறிவித்தல் ஒன்றினைப் பிரசுரிக்க நடவடிக்கை மேற்கொண்டோம். வருகின்ற தேர்தல் வெற்றியின் பின்னர் எதிர்த்தரப்பினருக்கு சங்கடங்கள் ஏற்படுத்தக் கூடாது என்பதாக அந்த அறிவித்தல் ஊடாக வேண்டுகோள் விடுத்தோம். செயற்பாடுகள் மூலமாக மாத்திரமன்றி வார்த்தைகள் ஊடாகவும் சங்கடங்களை ஏற்படுத்தக் கூடாது என்பதாக வேண்டினோம். அது சந்திரிக்காவினால் வேண்டப்பட்ட ஒன்றல்லாத போதிலும் குறித்த அறிவித்தலைப் பரிசுரிப்பதற்கான அனுமதியினை சந்திரிக்கா வழங்கினார்.

கடுமையான போட்டியாக இருப்பினும் இறுதியில் வெற்றி கிட்டும் என்ற நிலை இருந்தாலும் பிரதமரைத் தெரிவுசெய்யும் உரிமை ஜனாதிபதி விஜேதுங்க வசமே இருந்தது. சந்திரிக்கா பொது ஜன முன்னணியின் பிரபலமான [illegible] இருந்தபோதிலும் கட்சியின் தலைவராக அப்போது அவர் இருக்கவில்லை. கட்சியின் தலைமை அவரது தாயார் வசமே இருந்து வந்தது. ஜனாதிபதியினால் தவறுதலாகவேனும் பிரதமர் பதவிக்காக சந்திரிக்காவைத் தெரிவு செய்யாது அவரது தாயார் தெரிவு செய்யப்படுவாரானல் அதற்காக மேற்கொள்வதற்கான எந்தவிதமான மாற்று நடவடிக்கையும் இல்லாமல் போய்விடும். அவ்வாறான ஒரு நிலை ஏற்பாடாமலிருப்பதற்காக முன்னேற்பாடு நடவடிக்கையொன்று இறுதித் தருவாயில் மேற்கொள்ளப்பட்டது.

அப்போது ஓய்வு பெற்றிருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவை சந்திரிக்கா சந்தித்தார். தனது தாயார் பிரதமராகத் தெரிவு செய்யப்படுவாரானால் அவர் ஜே.ஆர் உட்பட ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலிருந்தும் பழி தீர்த்துக்கொள்ளும் நிலை ஏற்படலாம் என்பதாகக் கூறி அவ்வாறான ஒரு நிலை ஏற்படாதிருப்பதற்காக பிரதமர் பதவியை தன்னிடம் வழங்குமாறு ஜே.ஆர் இடம் கேட்டுக் கொண்டார். ஜே.ஆர் ஜனாதிபதி விஜேதுங்கவைத் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். அதன் பின்னர் ஜனாதிபதியின் அழைப்பின்றியே சந்திரிக்கா அவரைச் சந்திக்கச் சென்றார்.

தேர்தல் முடிவு வெளியாகிக்கொண்டிருக்கும் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை இடம்மாற்றி அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் காமினி திஸானாயக்க ஈடுபட்டுக்கொண்டிருந்தார். பிரதமர் பதவியில் இருந்த ரணில் விக்ரமசிங்க தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு அலரி மாளிகையிலிருந்து வெளியானது காமினி திசானாயக்கவின் முயற்சியை பலவீனப்படும் திட்டத்தின் ஓர் அங்கமாகவாகும். இந்த நடவடிக்கையானது ரணில் சந்திரிக்காவுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

### ஒருவரை ஒருவர் பாதுகாத்துக்கொள்ளும் முறையின் உருவாக்கம்

அன்றைய இக்கட்டான சூழ்நிலையில் ஏதேதோ காரணங்களுக்காகவேனும் முன்னல் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன, ஜனாதிபதி டீ.பீ விஜேதுங்க, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் சந்திரிக்காவுக்கு உதவி புரிந்தனர். இதன் விளைவாக அதிகாரம் கிடைத்த பின்னர் நாட்டின் அரசியல் கலாச்சாரத்துடன் புதியதொரு அங்கம் இணைந்துகொண்டதாகக் குறிப்பிடலாம். எதிர்க்கட்சியாக செயற்படும்போது ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்காக ஆட்சியில் இருக்கின்ற கட்சி தொடர்பிலும் அதன் தலைவர்கள் தொடர்பிலும் எப்பேர்ப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்காக முற்படுகின்ற போதிலும் அதிகாரத்தினைக் கைப்பற்றிக் கொண்டதன் பின்னர் அந்த ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்காமலிருப்பதற்காக பிரதான கட்சிகள் இரண்டுக்குமிடையே அமைதியானதொரு இணக்கப்பாடு அமைத்துக் கொள்வதானது அரசியல் கலாச்சாரத்தில் புதிதாக இணைக்கப்பட்ட அங்கம் ஒன்று என்பதாகக் குறிப்பிடலாம்.

அதன் காரணமாக சந்திரிக்கா குமாரதுங்கவிடம் பலவகையான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் ஐக்கிய தேசிய கட்சியின் 17 வருட ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. சந்திரிக்கா ஜனாதிபதி பதவியில் இருக்கும் போது பாராளுமன்ற அதிகாரத்தினை ரணில் விக்ரமசிங்க கைப்பற்றிக் கொண்ட போதிலும் சந்திரிக்கா ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக முற்படவில்லை. அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மஹிந்த அரசாங்கம் கூட சந்திரிக்காவுடன் பிணக்குகள் இருந்த போதிலும் அவரது ஆட்சிக் காலத்திலோ அல்லது பாராளுமன்ற அதிகாரம் ரணில் விக்ரமசிங்க வசம் இருந்த காலப் பகுதியிலோ ஏற்பட்ட ஊழல்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

ஆட்சியில் இருக்கின்ற கட்சிக்கு அந்தக் காலப்பகுதியில் முடிந்த அளவு சொத்துக்களை ஈட்டிக்கொள்ளும் உரிமை வழங்கும் அடிப்படையிலேயே ஆட்ட விதிமுறைகளே ஏற்படுத்தப் பட்டிருந்தன. அது தொடர்பில் பேசுவதற்கான உரிமை எதிர்க்கட்சிக்கு இருந்த போதிலும் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் முன்னர் ஆட்சியில் இருந்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட தவறுகள் குறித்து தேடிப்பார்ப்பதிலிருந்து (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொஹொமட் ரோசன் ஷா ஜபீர் அவர்கள் நுவரெலியா மாவட்டத்திலுள்ள கொட்ட கலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வியை கம்பளை சாஹிரா கல்லூரியில் கற்றுள்ளார். வளங்கள் மாற்றீடு முகாமைத்துவம் (Supply Change Management) தொடர்பில் டிப்ளோமா பட்டத்தை பூர்த்தி செய்துள்ள இவர், பெருந்தோட்டப் பகுதியில் மூடப்பட்டிருக்கும் தேயிலைத் தொழிற்சாலைகள் தொடர்பில் மேற்கொண்ட ஆய்வில் கலாநிதிப் பட்டத்தைப் (Doctor of Business) பெற்றுள்ளார். முஸ்லிம் சமூகத்தின் வர்த்தகத்துறை சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட அனுபவம் உள்ள ரோசன் ஷா ஜபீர் அவர்கள் மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

• நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

# “முஸ்லிம்கள் ஒருபோதும் இந்நாட்டிற்கு துரோகம் செய்தது கிடையாது”



கலாநிதி ரோசன் ஷா ஜபீர்

**• நீங்கள் பெற்றுள்ள கலாநிதிப் பட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுங்கள்**

பெருந்தோட்டப் பகுதியை சுற்றிப் பார்க்கச் செல்கின்ற போது அதிகமான தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் நட்டம் ஏற்படுகின்ற போது தேயிலைத் தொழிற்சாலைகளை தனியார் துறைக்கு வழங்கியது. தனியார் துறை அவற்றைப் பொறுப்பேற்று பெருந்தோட்டப் பயிர் உற்பத்திக்குப் பயன்படுத்தியது. இவ்வாறு 20 அல்லது 30 தொழில் சாலைகளை பெற்று பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையெனப் பெயரிட்டது.

ஆனால் தனியார் துறையினராலும் இவற்றை நடத்திச் செல்ல முடியாமல் போனது. எனவே பூட்டுப் போடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை சிறந்த முறையில் நடாத்திச் செல்ல முடியும் என்ற சிந்தனை என்னுள் உதித்தது. தேயிலை உற்பத்தித் தொழிற்சாலையைப் பொறுப்பேற்றிருந்த நிறுவனமொன்றை நாடி ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்து, ஒரு தொழிற்சாலையை எனக்கு வழங்குங்கள் என்றதும், எனது திட்டத்தைப் பொறுப் பேற்ற அவர்கள், அதனை ஆராய்ந்து பார்த்து விட்டு 8 மாதங்களின் பின் எனக்கு ஒரு தொழிற்சாலையை வழங்கினார்கள்.

பெருந்தோட்டப் பகுதியில் இன்று அநேகமான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இவை எமது நாட்டின் சொத்துக்களாகும். இன்றைய மதிப்பில் ஒரு தொழிற்சாலை 10 கோடி ரூபாய் தேறும். புதிதாக ஒரு தொழிற்சாலையை நிர்மாணித்தால் அதற்கு அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு 2 கோடிக்கு மேல் செலவாகும். இந்நிலையில் எனக்கு வழங்கப்பட்ட தொழிற்சாலையைப் பொறுப்பெடுத்து உள்ளே நுழைந்து பார்த்தால் அங்கு நிறைய பொருட்கள் உடைந்து காணப்பட்டன. இயந்திரங்கள் தவிர்ந்த திருத்த வேலைகளுக்கு மாத்திரம் 9 மில்லியன் ரூபா செலவானது. 20 வருடங்களாக அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்படாதிருந்ததால் தற்போது இந்தத் தேயிலைத் தொழிற்சாலைக்கு புதிதாக அனுமதிப் பத்திரம் பெற வேண்டியிருந்தது. அதற்கு நான் விண்ணப்பித்தேன். குறுகிய காலத்தில் எனக்கு அனுமதிப் பத்திரமும் கிடைத்தது.

இதே சிந்தனையில் பெருந் தோட்டப் பகுதியில் தொழிற் சாலைகள் ஏன் தொடர்ந்து மூடப்பட்டு வருகின்றன? அவற்றை திறப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? மூடப்பட்டிருக்கும்போது இதன் பெறுமதி என்ன? திறந்தால் இதன் பெறுமதி எப்படியிருக்கும்? இந்தத் தொழிற்சாலைகளில் எவ்வளவு தேயிலையை உற்பத்தி செய்யலாம்? ஏற்றுமதிச் செலவுகள் எப்படியிருக்கும்? எத்தனை பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கலாம்? வருமான வரி எவ்வளவு இருக்கும்? இதனால் நாட்டுக்கு எத்தகைய நலன் கிட்டும்? என்கின்ற பல்வேறு வினாக்களை எனது திட்டத்தில் சமர்ப்பித்தேன். அத்தோடு மூடியிருக்கும் தேயிலைத் தொழிற்சாலைகளை மீள ஆரம்பித்துச் செய்வதில் ஆர்வமுள்ள சிலரையும் அறிமுகப்படுத்தி வைத்தேன். இதனைத் தொடர்ந்து அவர்கள் தம்வசமிருந்த தொழிற்சாலைகளை முயற்சியாளர்களுக்கு வழங்க ஆரம்பித்தார்கள்.

என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட பெருந்தோட்டத் துறையினர் நீங்கள் நல்லதொரு பணியைச் செய்திருக்கிறீர்கள். இதற்குப் பரிகார மாக உங்களைப் போற்றி ஒரு பரிசை வழங்க வேண்டும் என்றனர். பின்னர் என்னை பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அமைச்சுக்கு அழைத்தார்கள். சில நேர்காணல்களை வைத்தார்கள். தொடர்ந்து என்னை வர்த்தக அரங்குக்கு சிபாரிசு செய்தார்கள். Malaysia Sri Lanka Chamber of Commerce மற்றும் South India Chamber of Commerce ஆகியன இணைந்து எனக்கு வர்த்தகத்துக்கான கலாநிதிப் பட்டத்தை (Honaorary Doctor of Business) வழங்கியது. இலங்கையில் 10 பேருக்கு மாத்திரமே இப்பட்டம் வழங்கப்பட்டது. அதில் நானும் ஒருவன் என்பதை நினைத்து பெருமை கொள்கிறேன்.

**• பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைத் துறையில் இலங்கை தற்போது எந்த நிலையில் உள்ளது?**

கடந்த 18 மாதங்களாக சந்தையில் தேயிலையின் பெறுமதி குறைந்து கொண்டே வந்துள்ளது. நாமும் சில சமயங்களில் நட்டத்திலேயே தேயிலையைச் சந்தைப் படுத்தினோம். ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதனைத் தொடர்ந்து சில நாட்களில் தேயிலை யின் விலை 100 ரூபாவால் அதிகரித்தது. தற்போது தேயிலையின் விலை அதிகரித்துச் செல்கின்றது. எனவே ஒரு மாற்றத்தைக் காண முடியுமாக இருக்கிறது. முன்பு தேயிலையை உற்பத்தி செய்து அனுப்பாமலும் வைத்திருந்தோம். ஆனால் தற்போது இன்னுமின்னும் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஆசை அதிகரித்துள்ளது.

**• இலங்கைத் தேயிலை அதிகமாக சந்தைப் படுத்தப்படுகின்ற இடங்களை எவை?**

இலங்கைத் தேயிலையை மத்திய கிழக்கு நாடுகளே அதிகம் கொள்வனவு செய்கின்றன. அந்நாடுகளைத் தொடர்ந்து ரஷ்யா உள்ளது. ஒரு சில ஐரோப்பிய நாடுகளும் எமது தேயிலையை கொள்வனவு செய்கின்றன. அரேபியர்களே இலங்கைத் தேயிலையை தேடிப் பயன்படுத்துகின்றனர். இலங்கைத் தேயிலைக்கு ஒருபோதும் விலை அதிகரிக்கவில்லை. வெளிநாட்டவர்கள் தேயிலையை டொலர்களிலேயே கொள்வனவு செய்கின்றனர். அன்று டொலரில் தான் வாங்கினார்கள். இன்றும் அப்படித்தான்.

150 வருடங்களுக்கு முன்னர் தேயிலை உற்பத்தி செய்யப்பட்ட போது எந்த விலையில் வாங்கினார்களோ அதே அமைப்பில் தான் இன்றும் கொள்வனவு செய்கிறார்கள். ரூபாவின் மதிப்பு குறைந்திருப்பது மாத்திரமே நிகழ்ந்துள்ளது. ஒரு தடவை இவ்விடயத்தை அமைச்சிலும் கதைத்தேன். ஒரு நாளும் எமது தேயிலையின் விலை கூடியதில்லை. வெளிநாட்டவர்கள் அதே டொலரில் தான் இன்னும் வாங்குகிறார்கள். நாங்கள்தான் ரூபாவின் மதிப்பை குறைத்திருக்கின்றோம். டொலர் அடிப்படையில் பார்த்தால் தேயிலையின் சந்தைப் பெறுமதி அதிகரித்ததே இல்லை. இதுவொரு கவலையான விடயமாகும்.

**• தற்போதைய காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில் தேயிலை உற்பத்தி எவ்வாறு பங்களிப்புச் செய்கிறது?**

நாம் படிக்கின்ற காலத்திலிருந்து இலங்கையின் பிரதான வருமானமாக தேயிலை காணப்பட்டது. ஆனால் தற்போது தேயிலை உற்பத்தி மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. உற்பத்திப் பொருளை அனுப்பி பணம் பெறுதல் என்பது இலகுவான விடயமல்ல. இலங்கையிலிருந்து ஏதாவதொரு பொருளை வெளிநாட்டிற்கு அனுப்பி பணத்தைப் பெறுவதாக இருந்தால், நாம் பலமாக இருக்கின்றோம் என்றே அர்த்தம். உதாரணமாக, இன்று என்னுடைய வீட்டில் பணம் இருந்தால் நான் தான் பலமானவனாகக் காணப்படுவேன். அதுபோல் உங்களது வீட்டிற்கு நான் வந்தால் நீங்கள் பலமானவர். நான் பலவீனமானவன். இதுபோன்று எமது நாட்டை ஒப்பிட்டுப் பார்த்தால் எப்பொழுதும் இங்கிருந்து ஒரு பொருளை வெளிநாட்டுக்கு அனுப்பி பணம் பெற்றால் நாம் பலமானவர்கள் தான். பணம் புலக்கத்தில் இருந்தால் எல்லோருடைய கைகளிலும் பணம் இருக்கும்.

**• புதிதாக வர்த்தகத் துறையில் கால்பதிக்க நினைக்கின்ற இளைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் செய்தி என்ன?**

முயற்சியையும் நம்பிக்கையையும் வைக்கு மாறு நான் இளைஞர்களுக்கு கூறுகின்றேன். நாம் முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் சமகாலத்தில் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு என்னென்ன கருவிகள் உள்ளதோ அவற்றையெல்லாம் பயன்படுத்த வேண்டும். அவையொன்றும் ஹராமானவையல்ல. Marketing Tactics என்பது இதைத்தான். அல்லாஹ் எனக்குத் தருவான் என்று இவ்விடத்தில் அமர்ந்துகொண்டிருந்தால் ஒன்றும் கிடைக்கப் போவதில்லை. ஒருவன் முகநூல், வாட்சப்பில் ஒரு பொருளை விளம்பரம் செய்து உலக அளவில் பிரபல்யம் அடைகின்றான். இதன் நலவை அவனே அடைகின்றான். சட்ட ரீதியான அனைத்து வழிமுறைகளையும் நாம் கையாள வேண்டும்.


அதேநேரம் நாம் அல்லாஹ் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். வெற்றி கிடைத்தாலும் நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். தோல்வியடைந்தாலும் அல்லாஹ்விடத்தில் பரிந்துரைக்க வேண்டும். எமது இலக்கை அடையும் வரை நாம் பின்வாங்கக் கூடாது. இஸ்லாத்தில் பணி ஓய்வுக் கொள்கை கிடையாது. இஸ்லாத்தில் வியாபாரம் என்று கூறி வரையறைகளும் கிடையாது. இஸ்லாம் உழைக்குமாறே கூறுகிறது. எவ்வளவு வேண்டுமானாலும் உழையுங்கள். ஸக்காத்தை வழங்குங்கள். நீங்கள் இன்னும் சிறந்த முஸ்லிமாக இருந்தால் ஸதகா கொடுத்துவிட்டு மூன்றில் ஒரு பங்கை சுவனத்துக்கு எடுத்துச் செல்லுங்கள். ஒரு நாளும் இதை மறக்கக் கூடாது.

தொழுகையையும் ஸக்காத்தையும் சேர்த்துப் பேசுகின்ற இஸ்லாம் தொழுது விட்டு வந்தால் ஸக்காத்தை வழங்கத் தயாராகுங்கள் எனக் கூறு கிறது. ஸக்காத்தை எப்படி வழங்குவது? ஒரு ஏழையாக இருந்தால் ஸக்காத் கொடுக்க முடியுமா? இஸ்லாம் மறைமுகமாக உழைக்குமாறு கூறுகின்றது.

ஸதகதுல் ஜாரியாவைக் கூட பணமின்றி செய்ய முடியாது. நபி (ஸல்) அவர்கள் மதீனா சென்ற போது அங்குள்ள மக்கள் இரண்டு வீடுகள் இருந்தால் ஒரு வீட்டைக் கொடுப்பார்கள். இப்படித்தான் பொருளாதார ரீதியான உதவியிருந்தது. இப்படியான பொருளாதார உதவி இல்லாவிட்டால் நபியவர்கள் அங்கு சென்றிருக்க மாட்டார்கள். நான் இளைஞர்களுக்கு கூறுவதென்றால் அவர்களுக்கென்று ஒரு அடைவு இருக்கும். அந்த அடைவை அடைந்துகொள்ளும் வரை முயற்சி செய்ய வேண்டும்.

இரண்டு விடயங்களை அடிப்படையாகச் செய்ய வேண்டும். முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். வெற்றி பெற்றால் அல்லாஹ்வைப் புகழ வேண்டும். தோற்றால் அல்லாஹ்வைப் பணிந்து நடக்க வேண்டும். ஆனால் பின்னடையக் கூடாது. முன் னேரிச் செல்ல வேண்டும். பல தடங்கல் வரும். அவற்றைப் படிப்பினையாகக் கொள்ள வேண்டும். (பக்.14)

## நாடுவது நலம்



# சிறுபான்மையினர் நம்பிக்கை இழக்கக் கூடாது

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து இன்னும் சில மாதங்களில் பொதுத்தேர்தலுக்கு முகம்கொடுக்கும் எதிர்பார்ப்பில் இலங்கைச் சமூகம் உள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை நாம் சரியான முறையில் வாசிப்புச் செய்ய வேண்டும். அம்முடிவுகளை மேல் வாரியாக அல்லாமல் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். இலங்கை என்னும் தனித்துவமான பின்னணியில் அல்லாமல் பிராந்திய ரீதியாகவும் உலக அரசியல் போக்குகளை அடிப்படையாகக் கொண்டும் நோக்கப்பட வேண்டியுள்ளது. இன்று இந்தியா, பர்மா போன்ற நாடுகளில் சுழன்று செல்லும் அரசியல் பிரவாகத்தையும் இந்தப் பின்னணியில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது நாட்டில் வடக்கு கிழக்கு உள்ளிட்ட இதர பகுதிகளிலுள்ள சிறுபான்மை மக்களுள் பெரும்பான்மையினர் சிங்கள பௌத்த தலைவர்கள் மீது நம்பிக்கை கொண்டுள்ளதனை இந்தத் தேர்தல் முடிவுகளினூடாக நோக்க முடிகிறது. சிறுபான்மை மக்கள் ஜனநாயகத்தின் மீது கொண்ட இந்த நம்பிக்கையை சிதைக்காமல் இருப்பதற்குரிய பின்னணியை உருவாக்கிக் கொள்வது இந்நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இதில் இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒன்று, தேசிய கட்சியாக செயற்படுவதில் இன ரீதியான கட்சிகள் தொடர்பிலுள்ள நம்பிக்கை சிதைவதற்கான இடமுள்ளது என்பது. இரண்டாவது, தேசிய கட்சிகள் தொடர்பான நம்பிக்கை சிதையும்போது ஜனநாயக முறைக்குள் எமது கவலைகளுக்கான தீர்வுகள் கிடைக்காது என்ற நம்பிக்கையில் தீவிரவாதத்தின் பால் ஈடுபடுவதற்கான வழிவகைகள் உள்ளன என்பது. இவை பற்றிச் சிந்தித்துச் செயற்படாமல் எமது நாட்டிற்கு முன்னகர முடியாது.

பௌத்த, ஹிந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் ஆகிய சகல மக்களையும் ஒன்றிணைக்கும் பயணத்தையே நாம் முன்னெடுக்க வேண்டும். சஜித் பிரேமதாச அவர்களின் தேர்தல் நடவடிக்கையின் கருப்பொருளாக ஒன்றாய் முன்னோக்கிச் செல்லல் என்கின்ற விடயம் காணப்பட்டது. இரண்டாவது, அதிகமானோரின் நலன்களேயன்றி சிறு தரப்பினரின் தேவைகளல்ல என்பதாகும். இம்முறை தேர்தலில் இவ்விரு விடயங்களையும் மக்கள் நிராகரித்தார்கள் என்று நான் கருதவில்லை.

சஜித் பிரேமதாசவிற்கு தனது தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்கு 35 நாட்களே கொடுக்கப்பட்டிருந்தன. நான்கு வருட கால ஆட்சியின் மறைந்த பகுதிகளை தோளில் சுமந்தவாறே அவருக்கு தேர்தலில் போட்டியிட முடிந்தது. ஒரு புறத்தில் நான்கு வருட கால ஆட்சியில் கனதியான பக்கமும் இருந்தது. காரணம், தகவல் அறியும் சட்டம், சுயாதீன ஆணைக் குழுக்கள், ஜனநாயகம், நல்லாட்சி போன்ற விடயங்கள் காணப்பட்டாலும் அதை விட எதிரணியினர் பல வருடங்களாக மறைபகுதிகளை மேலெழுப்பி வந்தனர். அதாவது மிகப்பெரும் பூதத்தை உருவாக்கினர். இது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்கின்ற விடயம். இதனை மக்களது உள்ளத்தில் புகுத்தினார்கள்.

மறுபுறத்தில் மேற்குலகிற்கு சார்பு என்கின்ற பிம்பமும், பௌத்த சமயத்திற்கு எதிரான கொள்கையை கொண்டிருத்தல் என்கின்ற பிம்பமும் கடந்த அரசாங்கத்திற்கு எதிராக சித்திரிக்கப்பட்டது. மூன்றாவது, ஊழல்வாதிகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் அவர்களை பாதுகாத்து வருகின்றனர் என்கின்ற குற்றச்சாட்டும் மத்திய வங்கி பிணைமுறி ஊழல் போன்ற சம்பவங்கள் தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் இருந்தன. இவையனைத்தையும் தோளில் சுமந்து கொண்டு தான் சஜித் பிரேமதாச தேர்தலுக்கு முகம்கொடுத்தார்.

இன்னும் ஒரு புறத்தில் சஜித் பிரேமதாசவிற்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புரிமையும் இறுதிக் கட்டத்திலேயே வழங்கப்பட்டது. தேர்தலுக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பிருந்து தான் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளையும் ஆரம்பிக்க முடிந்தது. தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் இவையனைத்து நிகழ்வுகளையும் ஆராய வேண்டியுள்ளது. 35 நாள் என்னும் குறுகிய காலப்பகுதியில் பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மக்களுள் பெரும்பான்மையையும் அவர்களது நம்பிக்கையையும் பெற்றுக்கொண்ட தலைவராக சஜித் பிரேமதாச அவர்கள் மேலெழுப்பப்பட்டார்.

மறுபுறத்தில் இக்குறுகிய காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 20 வீதம் என்ற அடிப்படையில் காணப்பட்ட பௌத்த மக்களது விசுவாசத்தை இவரால் 30 வீதமாக அதிகரிக்கவும் முடிந்தது. இங்கு சகலரையும் ஒன்றிணைத்த இலங்கைக்காக வேண்டியும் சிறிய தரப்பினரின் தேவைப்பாடுகள் அல்லாமல் பெரும்பான்மையினரின் நலனுக்காக வேண்டி அவதானம் செலுத்தும் நாடு தொடர்பான கனவு மக்களால் நிராகரிக்கப்படவில்லை. மாறாக நான்கு வருட கால ஆட்சியின் மறைந்த பகுதியை தோளில் சுமக்க வேண்டியேற்பட்டதால் ஊழல், ஊழல்வாதிகளை பாதுகாத்தல், பௌத்தத்திற்கு எதிரான நிலைப்பாடு, மேற்குலக சார்பு நிலைமை, பாதுகாப்பு குறித்து சோடிக்கப்பட்ட மிகப்பெரும் பிம்பம் ஆகிய விடயங்கள் மக்களுக்கு மத்தியில் புகுத்தப்பட்டிருந்தன. இதுவல்லாத வித்தியாசமான பயணத்தையே மேற்கொள்கின்றோம் என்கின்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு சஜித் பிரேமதாசவுக்கு 35 நாட்கள் என்கின்ற குறுகிய காலப்பகுதியே வழங்கப்பட்டிருந்தது.

இதனால் இந்நாட்டின் ஜனநாயக முறை குறித்து சிறுபான்மை மக்கள் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. இந்நாட்டின் தேசிய தலைவர்கள் தொடர்பில் உள்ள நம்பிக்கை சிதைந்துபோனதாக கருத வேண்டியதில்லை. மறுபுறத்தில் இந்நாட்டில் சகலரையும் ஒன்றிணைக்கும் இலங்கையினால் மாத்திரமே இந்நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்கின்ற நம்பிக்கையில் உள்ள தேசிய தலைவர்கள் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை.

தேசிய தலைவர்கள் தற்பொழுது மக்கள் மத்தியில் செல்ல வேண்டும். அவர்களது கருத்துக்களுக்குச் செவிமடுக்க வேண்டும். தைரியமான முறையில் இந்நாட்டில் சகல இன மக்களுக்கும் கௌரவமான, சமமான முறையில் வாழக்கூடிய சூழலைக் கட்டியெழுப்பும் பயணத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஒருபோதும் ஓரினம் மற்றுமொரு இனத்தை பயமுறுத்தி நாட்டின் ஸ்திரப்பாட்டையும், சகவாழ்வையும் நிலையாக கட்டியெழுப்ப முடியாது. வடக்கு கிழக்கைப் புரிந்துகொள்ள வேண்டும். தெற்கு வடக்கைப் புரிந்துகொள்ள வேண்டும். கிழக்கு வடக்கைப் புரிந்து கொள்ள வேண்டும். கிழக்கு தெற்கைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இது பௌத்த சமயம் உள்ளிட்ட எல்லா சமயங்களுக்கும் செல்லுபடியான விடயமாகும். காரணம், எமக்கு ஏதேனும் ஒரு பிரச்சினை இருக்குமாக இருந்தால் அவற்றுக்கான காரணங்கள் என்ன என்பதை புரிந்து கொண்டால் தான் அவற்றுக்கு தீர்வு வழங்க முடியும்.

அதுவல்லாமல் வலுக்கட்டாயமான முறையில் அவற்றுக்கு தீர்வு வழங்க முடியாது. இதனால் மக்களை நாம் புரிந்துகொண்டு அவர்களுடன் சேர்ந்து பயணிக்க வேண்டும். மக்களுடனான தொடர்பாடலை இன்னும் வலுப்படுத்த வேண்டும். ஜனநாயகப் பயணத்திலிருந்து நாம் தூர விலகி விடக்கூடாது. அதுவே மிக முக்கியமானது. இதன் மூலமே நாம் தீர்வு காண வேண்டும்.

இப்பயணத்தில் எமது நாட்டின் ஐக்கியத்தையும் முன்னோக்கிய பயணத்தையும் ஸ்தம்பிதமடையச் செய்கின்ற அச்சுறுத்தல்களை நாம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். தனித்து நின்று இப்பிரச்சினையை தீர்க்க முடியாது. நாடெனும் வகையிலும் பிராந்திய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் காணப்படும் பின்னணியை நன்றாகப் புரிந்துகொண்டு அறிவால் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்லிப் மாகாணத்திலிருந்து பெருந்தொகையானோர் வெளியேற்றம்

சிரியாவின் இத்லிப் மாகாணத்திலிருந்து 120,000 சிரியர்கள் வெளியேறி வருவதாக துருக்கியைத் தளமாகக் கொண்ட மனிதாபிமான உதவி நிறுவனம் தெரிவித்துள்ளது. சிரிய இராணுவம் கிளர்ச்சியாளர்களை இலக்காக வைத்து நடத்தி வரும் தாக்குதல் கூர்மையடைந்துள்ளதால் இத்லிப் மாகாணத்திலிருந்து மக்கள் அச்சத்தோடு வெளியேறுகின்றனர். சிலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

தற்போது துருக்கி 3.7 மில்லியன் சிரிய அகதிகளைப் பராமரித்து வரும் நிலையில், துருக்கியில் எல்லைப் புறமாக ஊடுருவும் சிரிய அகதிகளின் தொகை மேலும் 50,000 ஆல் அதிகரித்



துள்ளதாக ஜனாதிபதி ரஜப் தையிப் அர்துகான் தெரிவித்துள்ளார்.

துருக்கியினால் இவ்வளவு பெரும் தொகை அகதிகளைச் சமாளிக்க முடியாது என்றும் வடமேற்கு இத்லிப் மாகாணத்தின் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும் எனவும் துருக்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் 70,000 சிரிய அகதிகள் துருக்கியினுள் ஊடுருவலாம் என்று துருக்கி மனிதாபிமானப் பணியகம் கவலை வெளியிட்டுள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகம் என்டோனியோ கட்டஸ், மோதலை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தியுள்ளார். மக்களின் சுதந்திர நடமாட்டத்தையும் பாதுகாப்பையும் உறுதிசெய்வது சம்பந்தப்பட்ட அனைவர் மீதான கடமை என்றும் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இத்லிப் பிராந்தியத்தை மீளக் கைப்பற்ற வேண்டும் என்று சிரிய ஜனாதிபதி அஸாத் தனது இராணுவத்தைக் கோரியுள்ளார். ரஷ்யாவும் ஈரானும் சிரிய இராணுவத்திற்குப் பக்க பலமாக இருந்து ஆதரவளிப்பதால் மனிதாபிமான நெருக்கடிகளைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

துருக்கி சிரிய அரசாங்கத்திற்கு எதிராகப் போராடும் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதாகக் கூறப்படுகின்றது. கடந்த 9 ஆண்டுகளாக கிளர்ச்சியாளர்களுக்கும் சிரிய அரச படைக்கும் இடையில் இடம்பெறும் மோதலில் நாட்டின் சனத்தொகையில் அரைவாசிப் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதோடு நான்கரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



## சர்வதேசப் பார்வை



# பலஸ்தீனப் பிராந்தியங்களில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை

காஸா மேற்குக்கரை, கிழக்கு ஜெரூசலம் ஆகியவற்றில் சமீப காலங்களில் இஸ்ரேல் இழைத்த போர்க் குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முன்வந்துள்ளதாக ரொய்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. மேற்குக்கரையிலும், காஸாவிலும், கிழக்கு ஜெரூசலத்திலும் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன. இன்னும் இழைக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து நான் விசாரணையை ஆரம்பிக்கப் போகின்றேன் என பிரதான சட்டத்தரணி பென்சூடா அறிவித்துள்ளார். இதேவேளை, இஸ்ரேல் பிரதமர் நெடன் யாஹூ பலஸ்தீன் பிராந்தியங்கள் குறித்து விசாரிப்பதற்கான சட்ட அதிகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இல்லை எனவும் இறைமையுள்ள தேச அரசுகள் தாக்கல் செய்யும் வழக்குகளை மாத்திரமே அது விசாரணை செய்ய முடியும் என்றும் பலஸ்தீன் அரசாங்கம் என்ற ஒன்று இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2015 இல் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் போர்க் குற்ற விசாரணை ஒன்றை ஆரம்பிப்பதற்குப் போதுமான தகவல்களைத் தந்துள்ளது என்று பென்சோடா தெரிவித்துள்ளார். மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான முழு அதிகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு உண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

# அல்ஜீரியாவின் இடைக்கால ஜனாதிபதி மரணம்

முன்னாள் ஜனாதிபதி அப்துல் அஸீஸ் புதப்லிகா பதவி விலக்கப்பட்டதை அடுத்து இடைக்கால ஜனாதிபதியாகப் பதவி வகித்த இராணுவ ஜெனரல் அஹமத் ஜையித் ஸலாஹ் 23 ஆம் திகதி மாரடைப்பினால் மரணித்தார். இச்செய்தியை அந்நாட்டின் அரச ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

79 வயதான ஜையித் 2018 ஏப்ரலில் இடம்பெற்ற முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். தேர்தல் எதுவும் நடைபெறாத நிலையில் இராணுவத் தரப்பிலிருந்து தன்னை ஜனாதிபதியாக அவர் அறிவித்தார்.

2019 டிசம்பர் 12 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அப்துல் மாலிக் தப்பூனி தேர்தல் மூலம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் வரை இடைக்கால ஜனாதிபதியாக இருந்த ஜையித், ஒரு இரும்புச் சர்வதிகாரி என்று அறியப்பட்டவர். புதிய ஜனாதிபதி மூன்று நாள் துக்கதினத்தைப் பிரகடனம் செய்துள்ளார்.



இயற்கை எரிவாயுவை அதிகம் கொண்ட அல்ஜீரியாவில் நீண்டகாலமாக இராணுவ ஆட்சியாளர்களே மாறி மாறி அதிகாரத்தில் இருந்து வந்துள்ளனர். 1940 ஜனவரி 13 இல் கிழக்கிலுள்ள பத்னா மாகாணத்தில் பிறந்த ஜையித் ஸலாஹ் 1954 முதல் 1962 வரை நடைபெற்ற பிரெஞ்சு காலனித்துவத்திற்கு எதிரான புரட்சியில் நேரடியாகப் பங்கு கொண்ட ஜையித், சுதந்திரமடைந்ததற்குப் பின்னர் இராணுவத்தில் பணியாற்றினார். 1993 இல் மேஜர் ஜெனரல் பதவியைப் பெற்ற அவர், 1990 களில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தின்போது அல்ஜீரிய தரைப்படையின் கொமாண்டராகப் பணியாற்றினார்.

# சவூதி - இஸ்ரேல் உறவுகள் குறித்துக் கொண்டாட்டம்



சவூதி அரேபியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவினைக் கொண்டாடும் முகமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜெரூசலத்தை இஸ்ரேலியப் பிரஜை ஒருவர் சவூதியின் கொடியை அசைத்து தனது மகிழ்ச்சி ஆரவாரத்தை வெளிப்படுத்தியுள்ளார். தான் மிக விரைவாக சவூதி அறேபியா செல்ல முடியும் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பான விடியோ காட்சியொன்றை இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

வெளிப்படையான ராஜதந்திர உறவுகள் இல்லாதபோதும், சவூதி மற்றும் இஸ்ரேலுக்கிடையில் வலுப்பெற்று வரும் பொருளாதார அரசியல் ராஜதந்திர உறவுகளின் குறியீடாகவே இது பார்க்கப்படுகின்றது.

சவூதி பெண் செயற்பாட்டாளர் சுஆத் அல் சம்மாரி, இஸ்ரேலிய தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், பெரும்பான்மையான சவூதியர்கள் இஸ்ரேலைத் தரிசிப்பதற்கு விரும்புகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். ''ஏனைய வளைகுடா அறபு நாடுகளைப் போன்று சவூதியர்களும் இஸ்ரேலைக் காண வேண்டும் என்ற கனவுடன் உள்ளனர்.''

தற்போது இரு நாடுகளுக்கும் இடையில் சுமுகமான உறவுகள் வலுவடைந்து வருகின்றன. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை அங்கீகரித்துள்ள சவூதி அறேபியா, பலஸ்தீனர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து மௌனம் காத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யூத இனத் தேசியவாதச் சட்டத்தை இஸ்ரேல் நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது

யூத தேச அரச சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இஸ்ரேலிய கல்வியமைச்சு ஆரம்பித்துள்ளதால் அந்நாட்டில் பெரும் கிளர்ச்சி எழுந்துள்ளது.



2018 இல் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் இச்சட்டம் இயற்றப்பட்டது. யூத இன வாதத்தை அடிப்படையாகக் கொண்ட இச்சட்டத்தை துரூசிகள் மற்றும் அறபுகள் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

இஸ்ரேலின் ஒரேயொரு உத்தியோக பூர்வ மொழி ஹிப்ரு என்று மாணவர்களுக்குக் கற்பிக்குமாறு கல்வியமைச்சு அறிவித் துள்ளது. இஸ்ரேலின் கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் இஸ்ரேல் ஒரு யூத தேச அரசு என்ற கருத்தை மாணவர் மத்தியில் பதிக்குமாறு கல்வியமைச்சர் வேண்டியுள்ளார்.

நாட்டிலுள்ள பொது இரண்டாம் நிலை பாடசாலைப் பரீட்சைகள் ஹிப்ரு மொழிக்கும் யூத கலாச்சாரத்திற்கும் முன்னுரிமை வழங்க வேண்டும் என வேண்டப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் அனைத்துப் பாடசாலைகளினதும் ஊடக மொழியாக ஹிப்ரு மாத்திரமே அங்கீகரிகப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதனால் இஸ்ரேலில் வாழும் அறபுகள் மற்றும் துரூசிகளின் தாய்மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

2018 ஆகஸ்டில் யூத தேச அரசு சட்டம் நிறைவேற்றப்பட்டது. துரூஸ் சமூகம் இதனை எதிர்த்து நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

# தூனிசியாவில் புதிய அரசாங்கம் அமைக்கும் முயற்சி

தூனிசியாவில் புதிதாக அமைக்கவுள்ள அரசாங்கம் சுயேச்சை வேட்பாளர்களாகக் களமிறங்கி வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் உள்ளடக்கியிருக்கும் என தூனிசியாவின் பிரதமர் ஹபீப் ஜமீல் தெரிவித்துள்ளார்.



கடந்த மாதம் தூனிசியாவின் மிதவாத இஸ்லாமிய நஹ்ழா கட்சியினால் ஹபீப் ஜமீல் பிரதமராக நியமிக்கப்பட்டார். கடந்த ஒக்டோபரில் நடைபெற்ற தேர்தலில் நஹ்ழா கட்சி அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. கட்சிகளை இணைத்து அரசாங்கமொன்றை உருவாக்குவது சாத்தியமில்லாத நிலையில் சுயேட்சை அங்கத்தவர்களை இணைத்து புதிய அரசாங்கத்தை அமைக்கப் போவதாக ஹபீப் ஜமீல் தெரிவித்தார்.


அநேகமான அரசியல் கட்சிகள் அரசாங்கத்தில் இணைவதற்கு மறுத்துள்ள அதேவேளை, பிரதான கட்சியொன்று ஆட்சியமைக்கும் பட்சத்திலும் அரசோடு இணையும் உத்தேசம் தமக்கில்லை என அறிவித்துள்ளது. 2011 இல் இடம்பெற்ற அறபு வசந்தத்தைத் தொடர்ந்து தூனிசியாவில் ஜனநாயக ரீதியான தேர் தல்கள் இடம்பெற்று வருகின்றன. நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடிகள் கடந்த 8 ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கங்கள் அடிக்கடி மாற்றமடைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் குடியுரிமைச் சட்டம் இந்துத்துவத்தின் இறுதிப் புகலிடம்

• கலாநிதி றவூப் ஸெய்ன்

சமீபத்தில் இந்து வலதுசாரிக் கட்சியான பா.ஜ.க. லோக்சபாவில் நிறைவேற்றிய சர்ச்சைக்குரிய குடியுரிமைச் சட்டமூலம் குறித்து நாடளாவிய ரீதியில் கடும் எதிர்ப்பும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்று வருகின்றன. சுமாராக இந்தியாவில் 28 மாநிலங்களிலும் மக்கள் கொதித்தெழுந்துள்ளனர். மக்களுக்கு எதிரான சட்டங்களை நிறைவேற்றுவதும் அதன்போது கிளர்ந்தெழும் மக்கள் மீது இராணுவத்தைப் பிரயோகிப்பதும் நரேந்தி மோடியின் வழக்கமாகியுள்ளது. இதுவரை நடைபெற்ற பல்வேறு மாநிலங்களிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் 15 பேரளவில் கொல்லப்பட்டுள்ளதோடு, ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.



### குடியுரிமைச் சட்டத்தின் பின்னணி

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவில் குடியேறியுள்ள (துன்புறுத்தல்களை எதிர்கொண்டு) சிறுபான்மைச் சமூகங்களுக்கு குடியுரிமை வழங்கும் நோக்கில் சர்ச்சைக்குரிய குடியுரிமைச் சட்டம் இந்தியப் பாராளுமன்றத்தினால் 11 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இதற்கு 125 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 105 பேர் எதிராகவும் வாக்களித்தனர். 20 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட இச்சட்டம் இக்குறிப்பிட்ட நாடுகளிலிருந்து துன்புறுத்தல்களினால் இந்தியாவுக்குப் பெயர்ந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு குடியுரிமை வழங்க மறுக்கின்றது.







இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாம் இச்சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. அங்கு இப்புதிய சட்டத்தினால் சுமார் 2 மில்லியன் மக்கள், அவர்களில் பெரும்பான்மையினர் முஸ்லிம்கள். தமது குடியுரிமையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மேற்போந்த நாடுகளிலிருந்து இந்தியாவுக்குப் பெயர்ந்துள்ள இந்துக்கள், சீக்கியர்கள், பாரசீகர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சமணர்கள் போன்றோருக்கு குடியுரிமை வழங்குவதற்காக மோடி இச்சட்டத்தை நிறைவேற்றியுள்ளார்.

ஆனால், இந்துத்துவ பாஸிசக் கட்சியான பா.ஜ.க. இச்சட்டத்தைக் கொண்டு வந்ததன் நோக்கம் குறித்து பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. மோடியின் உள்நோக்கம் இந்திய முஸ்லிம்களை அரசியல் ரீதியில் இலக்கு வைப்பதாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில், மோடி குடியுரிமை வழங்குவதற்கு இயற்றிய சட்டத்தை வெளிநாடுகளிலிருந்து புலம்பெயர்ந்த இந்துக்களோ, சமனர்களோ, பௌத்தர்களோ, சீக்கியர்களோ கோரவில்லை. மாறாக, தமது சுதேச கலாச்சாரத்தையும் பழைமை தோய்ந்த பாரம்பரியங்களையும் பேணிப் பாதுகாக்கின்ற நாடோடிகளாகவும் ஆதிவாசிகளாகவுமே அவர்களில் பெரும்பான்மையினர் இந்தியாவில் வாழ விரும்புவதாக அறுயிட்டுக் கூறியுள்ளனர். இந்நிலையில் மோடி அரசாங்கம் கொண்டு வந்துள்ள குடியுரிமைச் சட்டத்தின் பின்னணி என்ன?

### எதிர்ப்பையும் கண்டனத்தையும் கிளப்பியுள்ள சட்டம்

மோடியின் புதிய சட்டம் சுதந்திர இந்தியாவின் 70 ஆண்டு கால அரசியல் பாரம்பரியத்தையும் மதச்சார்பற்ற அரசியல் சட்டத்தையும் முற்றாகவே மீறும் பாசிஸம் என இந்தியாவின் இடதுசாரி இயக்கங்கள், கட்சிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், மிதவாத இந்துக்கள் தமது கடும் கண்டனத்தையும் ஆர்ப்பாட்டங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்கு வங்காள முதல்வர் பானஜீ, மோடியினால் முடிந்தால் அவரது பா.ஜ.க. இயற்றிய இச்சட்டத்தை ஐ.நாவின் மேற்பார்வையில் இந்தியர்கள் ஏற்றுக்கொள்கின்றார்களா என்பதைப் பரிசீலிப்பதற்கு மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடாத்திக் காட்டட்டும் என்று சவால் விடுத்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி மற்றும் பா.ஜ.க.வை ஆதரிக்காத சுதந்திரக் கட்சிகள் இச்சட்டத்தைப் பின்வாங்கும் வரை தேசியளவிலான மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதாக அறிவித்துள்ளன. இந்திய உச்ச நீதிமன்றத்தில் அரசியலமைப்பு மீறல் குற்றம் தொடர்பில் இச்சட்டத்திற்கு எதிரான வழக்கொன்றை தாக்கல் செய்யப்போவதாக பல்வேறு மனித உரிமை நிறுவனங்கள் அரசுக்கு சவால் விடுத்துள்ளன.

### சர்வதேச நாடுகளின் கண்டனம்

முஸ்லிம்களுக்கு எதிரான மோடியின் குடியுரிமைச் சட்டம் தொடர்பில் ஐ.நா.வில் உரையாற்றிய பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், "இந்தியாவில் சிறுபான்மையாக வாழும் 20 கோடி முஸ்லிம்களுக்கு எதிராகவே இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது எனவும், மதச்சார்பற்ற அரசியலமைப்பை மீறுகின்ற தீவிர இந்துத்துவ மதவாதத்தின் பின்னணியிலேயே இது உருவாக்கப்பட்டுள்ளது எனவும் இந்துக்களையும் முஸ்லிம்களையும் வேறுபடுத்தி அரசியல் இலாபம் தேடவே இந்த நடவடிக்கை எனவும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

அவர் மேலும் அங்கு குறிப்பிடுகையில், 1980 களில் மியன்மாரின் ரோஹிங்யா மக்களுக்கு எதிராக இராணுவ அரசாங்கம் இதேபோன்ற குடியுரிமைச் சட்டத்தையே கொண்டு வந்தது. ரோஹிங்யர்கள் தாம் மியன்மாரின் பிரஜைகள் என்பதை நிறுவுவதற்கு சட்ட ரீதியான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அவ்வாறு சமர்ப்பிக்க முடியாதவர்கள் பிரஜைகள் அல்ல என்று முத்திரை குத்தப்பட்டனர். ஈற்றில் முழு ரோஹிங்ய சமூகமும் வந்தேறு குடிகளாக்கப்பட்டு மியன்மாரிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்தியாவிலிருந்து பெருந்தொகை அகதிகள் பாகிஸ்தான் வருவதை நாங்கள் ஏற்க மாட்டோம். ஏற்கனவே, பெரும் தொகை அகதிகளை நாம் பராமரிப்பதற்குப் போராடுகின்றோம். எங்களது பொருளாதாரம் சீர்குலைந்து போயுள்ளது. 40 ஆயுதக் குழுக்கள் நாட்டில் செயல்படுகின்றன. இவற்றை எதிர்கொள்வதற்குப் போராடிக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு இன்னொரு சுமை வேண்டாம். சர்வதேச சமூகத்திற்கு நாம் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் கூறிவைக்கின்றோம். தயவுகூர்ந்து குடியுரிமைச் சட்டப் பிரச்சினையில் தலையிடுங்கள். இரண்டு மில்லியன் மக்களை அகதிகளாக்குவதோடு இப்பிரச்சினை நின்றுவிடப் போவதில்லை. நூற்றாண்டுகளாக இந்தியாவில் வாழும் ஒரு குடிமகன் தான் இந்தியன் தான் என்பதை நிறுவுவதற்கு கடதாசித் துண்டைக் காட்ட வேண்டிய தேவை ஏன் உருவாக்கப்படுகின்றது என இம்ரான் கான் மிகுந்த கவலையோடு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, கோலாலம்பூரில் நடைபெற்ற உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய 94 வயதான பிரதமர் மஹாதிர் முஹம்மத், இந்தியாவுக்கு இப்படியொரு குடியுரிமைச் சட்டம் ஏன் தேவைப்பட்டது என்று கேள்வியெழுப்பியுள்ளார். மோடியின் இச்சட்டம் இந்தியாவில் இன, மதப் பிளவுகளை மென்மேலும் கூர்மைப் படுத்தி பெரும் குழப்ப நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லப் போகின்றது. சிறுபான்மைச் சமூகங்களை பெரும்பான்மைச் சமூகங்களோடு மோத வைக்கும் இச்சட்டம் இந்தியாவுக்கு அவசியமில்லை. பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களும் இந்துக்களும் ஒற்றுமையாக வாழும் இந்தியாவில் அரசியல் தேவைகளுக்காக அவர்களைப் பிரிக்கும் இந்தச் சட்டமூலம் மிகவும் அநியாயமானது. மதச்சார்பற்ற அரசியலமைப்பை மீறுவது மதவாதத்தை அடிப்படையாகக் காண்டு அரசியல் இலாபம் பெறும் நோக்கிலேயே இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இது நீக்கிக் கொள்ளப்பட வேண்டும். இல்லையென்றால் இந்தியாவில் மிகப் பெரும் இனக்கலவரங்களும் மத ரீதியான மோதல்களும் உருவாவது தவிர்க்கப்பட முடியாதது என மஹாதிர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. சபை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் என்பனவும் பேரளவில் இச்சட்டத்தை ஆட்சேபித்துள்ளன. ஆயினும் அவை மறைமுகமாக மோடியின் அரசுக்கு ஆதரவளிப்பவை என்பதை நாம் அறிவோம்.

### குடியுரிமைச் சட்டத்தின் தாக்கம்

நூற்றாண்டுகளாக அஸாம் மாநிலத்தில் [illegible] முஸ்லிம்களின் குடியுரிமையை இச்சட்டம் கேள்விக்குள்ளாக்குகின்றது. பிற மாநிலங்களில் உள்ள முஸ்லிம்களும் தமது குடியுரிமையை நிரூபிப்பதற்கு ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என கோரப்படலாம் என்று அஞ்சப்படுகின்றது. மொத்தத்தில் இந்திய சிறுபான்மை முஸ்லிம்கள் 200 மில்லியன் பேரின் உள்ளங்களில் இச்சட்டம் பெருத்த பீதியையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

இதேவேளை, ஆங்சான் சூகி அரசாங்கத்தினால் துன்புறுத்தப்பட்டு இந்தியாவில் தஞ்சம் கோரியுள்ள மியன்மாரின் ரோஹிங்ய சிறுபான்மை முஸ்லிம்கள் குறித்தோ, பல பத்தாண்டுகள் தமிழகத்தில் வசித்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் குறித்தோ இச்சட்டம் கவனத்தில் கொள்ளவில்லை. முஸ்லிம்களை பீதி மயமாக்கி, அவர்களை வந்தேறு குடிகள் போன்று நடத்துவதற்கு இச்சட்டம் வழிகோலும் என எச்சரிக்கப்படுகின்றது.

### மோடியின் பின்னணி நோக்கம்

திடீரென்று பாராளுமன்றத்தில் மோடி கொண்டு வந்துள்ள சட்ட மூலத்தின் பின்னணி என்ன என்பது ஆழ்ந்த ஆய்வுக்குரியது. பொருளாதார ரீதியாக வேகமாக சரிந்து வரும் இந்தியாவில் மக்களின் கவனத்தை அரசாங்கத்தின் மீதான அதிருப்தியிலிருந்து திசை திருப்பும் நோக்கிலேயே இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக இந்திய பொருளியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பா.ஜ.க.வின் எல்லையற்ற ஊழல் மோசடிகள், மற்றும் முறைகேடான நிதி நிருவாகம், வெளிநாட்டுக் கடன் போன்ற நெருக்கடிகளால் பணவீக்கம் அதிகரித்து, வாழ்க்கைச் செலவீனம் உயர்ந்து செல்கின்றது. நாட்டின் இன்றைய உடனடிப் பிரச்சினை வீழ்ந்து வரும் பொருளாதாரத்தைத் தூக்கி நிலைநிறுத்துவதே. அதை விடுத்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் நோக்கில் மோடி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். நாடு அடுத்து வரும் தேர்தல் வரை இந்தத் தீயினால் பற்றி எரிந்துகொண்டிருக்க வேண்டும். மதக் கலவரங்களும் சாதிக் கலவரங்களும் நடைபெற்றுக் கொண்டிருப்பதே மோடியின் திருகு தாளங்களை மறைப்பதற்குச் சாதகமான சூழலை உருவாக்கும்.

இதேவேளை, இன்று சர்வதேச அளவில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மூலோபாயமாக மதவாதம், இனவாதம் மற்றும் குடியேறிகள் பற்றிய பீதி (Xenophobia) என்பனவே மூலதனமாக்கப்பட்டுள்ளன. ட்ரம்ப் அதிகாரத்திற்கு வருவதற்கும், பிரித்தானியாவின் புதிய பிரதமர் போரிஸ் ஜோன்ஸன் அதிகாரத்திற்கு வருவதற்கும், நரேந்திர மோடி அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கும் இதே உத்தியையே கையாள்கின்றனர்.

தமது அதிகார வலையில் சிக்கியுள்ள சிறிய நாடுகளில் ஆட்சித் தலைவர்களுக்கும் இதே வழிகாட்டல்களையே அவர்கள் முன்வைக்கின்றனர். முஸ்லிம், கிறிஸ்தவ சிறுபான்மை மக்களுக்கு எதிரான உணர்வலைகளைத் தூண்டி, இந்துத்துவ மதவாதத்தை வளர்ப்பதன் மூலம் பெரும்பான்மை இந்துக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்கலாம் என்ற சமன்பாட்டை மோடி தொடர்ந்தும் பின்பற்றுகின்றார்.

காங்கிரஸிடமிருந்து அதிகாரத்தை தம் வசமாகிக்கிக் கொண்டதிலிருந்து பா.ஜ.க. அரசாங்கம் முன்னெடுத்து வரும் ஒவ்வொரு நகர்வும் இதைத் தெட்டத் தெளிவாக புலப்படுத்துகின்றது. முதன் முறை ஆட்சிக்கு வந்தவுடனேயே இந்தியாவின் தேசிய சுற்றாலாமையப் பட்டியலிலிருந்து தாஜ் மஹாலை நீக்கிவிட்டார்கள். பாபரி மசூதி அமைந்திருந்த இடத்தில் ராமர் கோயிலைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். இஸ்லாமிய மற்றும் முஸ்லிம் பெயர் தாங்கிய நகரங்களின் பெயர்களை மாற்றினார்கள். காஷ்மீரின் சிறப்பதிகாரத்தை ரத்துச் செய்து ஜம்மு காஷ்மீரை அதிகாரமற்ற யூனியன் பிரதேசங்களாக மாற்றினர். கடந்த ஆண்டில் அஸாமில் வாழ்ந்த சுமார் இரண்டு மில்லியன் மக்களில் (பெரும்பான்மையானோர் முஸ்லிம்) தேசிய குடியுரிமைப் பதிவேடு என்ற போர்வையில் முஸ்லிம்களை நாடற்றவர்களாக்கி நடுத்தெருவில் நிறுத்தினர். இன்று புதிய குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இந்திய முஸ்லிம்களின் இருப்புக்கே மோடி அரசாங்கம் அச்சுறுத்தல் விடுக்கத் தொடங்கியுள்ளது.

இந்தியாவின் சமூகப் பன்மைத்துவம், ஜனநாயகம், மதச்சார்பின்மை என்பவற்றை அச்சுறுத்தி, இந்துத்துவ பாசிஸத்தின் மூலம் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு மோடியும் முயற்சிக்கின்றார். ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் ஜாமிஆ மில்லி முஸ்லிம் மாணவர்கள் படையினரால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுகின்றனர். முஸ்லிம்களைக் குறிவைக்கும் இச்சட்ட மூலம் 20 கோடி இந்திய முஸ்லிம்களின் உணர்வுகளை மட்டுமன்றி, ஜனநாயக நேசர்கள் அனைவரையும் காயப்படுத்தியுள்ளது.

குடியுரிமை வேண்டாம் எனக் கோரும் மக்களுக்கு குடியுரிமை வழங்க சட்டம் இயற்றும் மோடி அரசாங்கம், நூற்றாண்டுகளாக இந்தியாவில் வாழும் முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தின் குடியுரிமையைப் பறிக்க முயல்கின்றது.

ஜனநாயகத்தில் தேர்தல் மட்டுமே எஞ்சியுள்ள இந்தியாவில் மோடி அதிரடியாக மேற்கொண்டு வரும் அதிகார விளையாட்டு தெற்காசியாவிலுள்ள ஏனைய நாடுகளிலும் செல்வாக்குச் செலுத்துமோ என்ற அச்சம் மேலெழுவது இயல்பானது. ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்படும் இப்பாரிய தாக்குதலுக்கு சிவில் சமூகமும் இடதுசாரிகளும் தக்க பதிலடிகளை வழங்க வேண்டும். இல்லையெனில், பெரும் ஜனநாயகம் எனப் போற்றப்படும் இந்தியாவின் மதச்சார்பற்ற அரசியலமைப்பு பெரும் கேள்விக்குறியாகி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 பொதுத் தேர்தல்: முஸ்லிம்களது நிலைப்பாடு எப்படி இருக்க வேண்டும்?

## தீர்மானிக்கும் சக்தி என தன்னை அடையாளப்படுத்தும் நிலையிலிருந்து விடுபட வேண்டும்.



அஷ்ஷெய்க் ரிஷாத் நஜிமுதீன் (நளீமி)
சிரேஷ்ட விரிவுரையாளர், ஜாமியா நளீமியா கலாபீடம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முஸ்லிம்களின் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் எனது அவதானத்தை நான் இரு வகையில் நோக்குகிறேன்:

1- முஸ்லிம் அரசியல்வாதிகள்

2- பொதுமக்கள் அல்லது சிவில் சமூகம்

முஸ்லிம் அரசியல்வாதிகள் தேசியக் கட்சி மற்றும் முஸ்லிம் இன மைய கட்சிகளில் அங்கம் வகிக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் போன்ற முஸ்லிம் இன மைய கட்சிகள் (Ethno-centric parties) தொடர்ந்தும் ஐக்கிய தேசிய கட்சியுடனே தன்னை இணைத்துக் கொண்டு வந்திருக்கின்றன. இது மாற்றமுற வேண்டும். தீர்மானிக்கும் சக்தி என தன்னை அடையாளப்படுத்தும் நிலையிலிருந்து அவை விடுபட வேண்டும். காலத்துக்குக் காலம் வந்து செல்லும் தேர்தல்களில் அவை காலம், சூழலை கருத்திற் கொண்டு கட்சிகளுடன் உரையாடல்களில் ஈடுபடுவதும் தீர்க்கமான முடிவுகளுக்கு வருவதும் தவிர்க்க முடியாதது. ஆனால், எக்கட்சியுடனும் நிரந்தரமாக தங்கி விடக் கூடாது என்பதில் அவதானமாக இருக்க வேண்டும்.

அடுத்தது, முஸ்லிம் பொதுமக்களுடன் தொடர்பானது. அவர்கள் முஸ்லிம்களுக்கு மட்டுமா வாக்களிக்க வேண்டும் அல்லது சிங்கள, தமிழ் சகோதர வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க முடியுமா என்ற வினாவில் பாரம்பரிய பதிலை கட்டுடைக்க வேண்டியுள்ளது. திறமை, அமானிதம், நேர்மை ஆகிய மூன்று பண்புகளையும் யார் அணிகலனாக கொள்கின்றாரோ அவரே எமது தெரிவுக்குட்படுபவர் எனும் நிலை நோக்கி முஸ்லிம் சமூகம் நகர வேண்டியுள்ளது. இவ்வகையான நிலைமாற்றமே அரசியல் பெறுமானங்கள் மீதான போட்டியை அரசியல்வாதிகளிடத்தில் ஏற்படுத்தி விடும்.

அதுவல்லாது இனம், மதம் சார்ந்து சிந்திப்பது பிரச்சினைகளை இன்னும் தீவிரப்படுத்தும் என்பதே எமது தாழ்மையான அவதானம். திறமை, அமானிதம், நேர்மை ஆகிய அரசியல் பெறுமானங்கள் மீதான கவனக் குவிப்பு காலப்போக்கில் இனமைய அரசியல் மீதான கேள்விக் குறியை ஏற்படுத்திவிடவும் வாய்ப்புள்ளது. திறமை, அமானிதம், நேர்மை கொண்ட ஒரு பௌத்த வேட்பாளர் அப்பெறுமானங்கள் இல்லாத முஸ்லிம் வேட்பாளரை விட சிறந்தவரல்லவா?

இறுதியாக இன்னொரு விடயத்தையும் வலியுறுத்த வேண்டியுள்ளது. எமது உரிமைகளைப் பெற கட்டாயமாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பது அவசியமானது எனக் கூறுவோருக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள வேண்டியுள்ளது. உரிமை, கடமை எனும் சமன்பாட்டில் உரிமையை கேட்டுக் கொண்டிருக்கும் சமூகம் வீழ்ச்சியை நோக்கியும் கடமையை செய்துகொண்டிருக்கும் சமூகம் வளர்ச்சியை நோக்கியும் நகரும் எனும் சமூகவியல் விதியை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தம்.

மலேசியாவில் சீனர்கள் உரிமையை விட கடமையில் கூடிய கவனம் செலுத்துபவர்கள். மலேசியாவின் அபிவிருத்தியில் தவிர்க்க முடியாத பங்காளிகள் அவர்கள். சீனர்களை புறக்கணித்து விட்டு மலேசியாவை கட்டியெழுப்புவதென்பது சாத்தியமற்றது எனும் நிலைதான் உள்ளது. அப்படியானதொரு பங்களிப்பு சமூகமாக மாற இலங்கை முஸ்லிம் சமூகம் மீளொழுங்கு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தையும் இங்கு அழுத்திக் கூறுகிறோம்.

## முஸ்லிம்களுக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்பதில்லை



சட்டத்தரணி எம்.எச்.எம். அஸ்லம்

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன வெற்றி வெற்றது. அதேபோன்று ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுஜன பெரமுன வெற்றி பெற்றது. முஸ்லிம்கள் சிலவேளை அடுத்த தேர்தலிலும் பொதுஜன பெரமுனதான் வெற்றி பெறும். எனவே முழுமையாக அந்தப் பக்கம் சார்ந்துகொள்வோம் என நினைப்பார்கள். ஆனால் உண்மையில் நாம் சார்ந்து கொள்வது ஆரோக்கியமான நிலைப்பாடல்ல. முஸ்லிம்கள் தற்போது எந்தக் கட்சியையும் நம்பிப் பலனில்லை. எந்தக் கட்சியில் ஊழல் இல்லையோ, அந்தக் கட்சி சார்பில் போட்டியிடும் சிறந்த அரசியல்வாதிகளுக்கு முஸ்லிம்கள் வாக்களிப்பதே அல்லாஹ்வுக்கும் இந்த நாட்டிற்கும் பொருத்தமானதாக இருக்கும். வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு வாக்களிப்பதில் பிரச்சினையில்லை. அதுவும் சிறந்த அரசியல்வாதிகளை தெரிவுசெய்தே வாக்களிக்க வேண்டும்.

ஆனால் வடக்குக் கிழக்கிற்கு வெளியில் முஸ்லிம்கள் என்று சொல்லி முஸ்லிம்களுக்கு வாக்களிப்பதனால் முஸ்லிம்கள் தெரிவுசெய்யப்படுவதுமில்லை, அதேபோன்று பெரும்பான்மையினர், 'முஸ்லிம்கள், முஸ்லிம் வேட்பாளர்களுக்கு மாத்திரம்தான் வாக்களித்தார்கள், எமக்கு வாக்களிக்கவில்லை' என்கின்ற நிலைப்பாட்டை விளங்கிக்கொள்வதால் முஸ்லிம் கிராமங்கள் மற்றும் முஸ்லிம்கள் எல்லா இடங்களிலும் புறக்கணிக்கப்படும் நிலையே ஏற்படுகிறது. அதனால் முஸ்லிம்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் பரவாயில்லை, நல்ல அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்க வேண்டும். இதற்கான வழிகாட்டுதல்களையே முஸ்லிம் சமூகத்துக்கு கொடுக்கப்பட வேண்டும் என நான் நினைக்கின்றேன்.



• ஹெட்டி ரம்ஸி

## "தேசிய ஒருமைப்பாடு, பாதுகாப்பை கருத்திற் கொண்டு SLPP இற்கு வாக்களிப்பதே சிறந்தது"



எஸ்.எச்.எம். ரஜாப்தீன் -
சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர், சட்டமா அதிபர் திணைக்களம்

இலங்கை அரசியல் வரலாற்றில் எதிர்வரும் பொதுத் தேர்தல் மிக முக்கிய திருப்பங்களை கொண்டுவரவுள்ளது. கடந்த காலங்களைப் போலன்றி இம்முறை முஸ்லிம்கள் தமது வாக்குகளை மிக கவனமாக பாவிக்க வேண்டும். மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் காலத்தில் ஒரு பொது நோக்கத்துக்காக சிறுபான்மை சமூகத்துக்கென ஒரு கட்சி உருவாக்கப்பட்டது. ஆனால் அவர்களின் திடீர் மரணத்தின் பின்னர் அக்கட்சி சிறு சிறு கட்சிகளாக பிரிந்து பொது நோக்கத்தையும் காலத்தின் தேவையையும் மறந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. சிறுபான்மைக் கட்சிகள் இனி ஆட்சி மாற்றங்களை கொண்டுவர முடியும் என்ற நிலைப்பாடும், தற்போதைய தேர்தல் முடிவுகளும் மாறியுள்ளது. பிரதான கட்சிகளின் பழைய சின்னங்களும் பழைய கொள்கைகளும் செல்வாக்குச் செலுத்திய காலம் தலைகீழாக மாறியுள்ளது. (பக்.15)

## "வடக்கு கிழக்கிற்கு வெளியே ஐ.தே.க.வை ஆதரித்து எதிர்க்கட்சியை பலப்படுத்துவது தான் மிகவும் பொருத்தமானது"



சட்டத்தரணி அஜாஸ் முஹம்மத் -
சமூக செயற்பாட்டாளர், சமூகவலைத்தள எழுத்தாளர்

முஸ்லிம் தனித்துவ அரசியல் இனியும் எவ்வளவு தூரம் எங்களுக்குப் பொருத்தமாக அமையும் என்பதைப் பற்றி மிக ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. முஸ்லிம் அரசியல்வாதிகள் எல்லோரும் ஓரணியாக நின்று எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு எமது பலத்தை நிரூபிக்க வேண்டும் என்பதான வீர வசனங்கள் பேசப்படுகின்றன. இது எவ்வளவு தூரம் சரிவரும் என்பது மிக ஆழமாக சிந்திக்கப்பட வேண்டிய விடயம்.

பெரும்பான்மைச் சமூகம் ஒரே பக்கமாக திரண்டிருக்கின்ற சூழலில் நாமும் ஓரணியாகச் சேர்ந்திருப்பது பாதிப்பாக அமையும் என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். பெரும்பான்மைச் சமூகத்தினுடைய வெறுப்புக்களை, குரோதங்களை நாம் தொடர்ந்தும் சம்பாதிக்கப் போகிறோமா? அல்லது அவர்களுடன் ஏதோ ஒருவகையில் நியாயமான இணக்கப்பாடுகளோடு நடந்துகொள்ளப் போகிறோமா? என்பதே எமக்கு முன்னாலுள்ள கேள்வியாகும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை நிச்சயப்படுத்துவதற்கான வியூகங்களை வகுக்க வேண்டும். ஐ.தே.க.வின் கீழ் ஒரு நியாயமான விட்டுக் கொடுப்புக்களோடு எங்களுடைய பிரதிநிதிகளை அதில் ஈடுபடுத்துவது சிறந்தது. வடகிழக்கிற்கு வெளியில் வாழும் முஸ்லிம்கள் எந்தக் காரணம் கொண்டும் சிறுபான்மை கட்சிகளுக்குப் பின்னால் போகாமல் ஏனைய பிரதான கட்சிகளுடன் பொருந்தமான பிரதிநிதிகளை உள்நுழைத்து அவர்களுக்கு வாக்களிப்பது சிறந்தது. வடக்கு கிழக்கிற்கு வெளியே ஐ.தே.க.வை ஆதரித்து எதிர்க்கட்சியை பலப்படுத்துவது தான் மிகவும் பொருத்தமானது என்று நினைக்கின்றேன். இதற்கு முஸ்லிம்கள் விழிப்போடு செயற்பட வேண்டும்.

வருகின்ற தேர்தலில் தற்போது அதிகாரத்தில் உள்ள அணி அளவுக்கதிகமான பொருளாதார வளங்களை கொடுத்து முஸ்லிம்களது பகுதிகளில் பல குழுக்களை தேர்தலில் இறக்கி, முஸ்லிம்களது வாக்குகளை சிதறடிக்கும் ஒரு திட்டத்தை முன்னெடுக்கும் வாய்ப்புள்ளது. தனிநபர்கள் அல்லது சுயாதீன உறுப்பினர்களுக்கு பின்னால் சென்று எமது வாக்குகளை வீணடிக்காமல் வெல்லக்கூடிய பிரதான தேசிய அரசியல் கட்சிகளில் போட்டியிடுகின்ற முஸ்லிம் அபேட்சகர்களுக்கு வாக்களிப்பதை நாங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## "எதிர்கால சந்ததி குறித்த நீண்ட கால பார்வையை கருத்திற்கொள்ள வேண்டும்"



ஏ.டபிள்யூ. எம்.ஹிஷாம் -
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்

அரசாங்கம் என்பது மக்களால் தம்மை நிர்வகிக்க அவர்களில் சிலரை மக்களே நியமித்துக் கொள்வதாகும். அரசாங்கம் மதச்சார்பற்றதாக தொழிற்படுவதே நாட்டின் அபிவிருத்திக்கு வித்திடும். அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொதுப் பண்பும் அதுவேயாகும். இலங்கை பௌத்த நாடு என்பதில் மாற்றுக்கருத்தில்லை. எனினும் நமது நாடு முப்பது வருட கால யுத்தத்தின் பின்பும் இனவாத அரசியல் நடவடிக்கைகளிலிருந்து பாடம் படிக்கவில்லை என்பதே நிதர்சனம். (பக்.15)

## "பொதுவாக ஆளும்கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் நிலைத்திருக்க வேண்டும்"



சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப்

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பிரதான அரசியல் கட்சிகளுக்கூடாக வழமையாக போட்டி போடுகின்ற வேட்பாளர்கள், அந்தந்த பிராந்தியங்களில் வழமையாக பிரதான கட்சிகளினூடாக அரசியல் செய்கின்ற அரசியல் தலைமைகள் அதே வியூகத்திலும் அதேநேரம் பிராந்திய ரீதியாக போட்டி போடுகின்ற சிறு கட்சிகள் அல்லது பிராந்திய ரீதியான சிறுபான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்தும் தனித்துவமான கட்சிகள் தங்களுக்குள் ஒரு விட்டுக்கொடுப்புடன் முன்மாதிரியான அடிப்படையில் சில மாவட்டங்களில் போட்டியிடுகின்ற எதிர்கட்சிகளில் ஒரு கட்சியாகவும் இன்னொரு மாவட்டத்தில் வேறொரு கட்சியாக போட்டியிடுவதன் பேரில் ஆசனங்கள் இழக்கப்படுவதை தடுத்து தக்கவைத்துக்கொள்ளும் விதத்திலும் வியூகங்களை அமைக்க வேண்டும். (பக்.15)

## முஸ்லிம்கள் ஒரு கட்சிக்குச் சார்பாக இருந்துகொண்டு தனது அரசியல் ஆதரவை வழங்குவது இந்த சமூகத்திற்கு ஆபத்தானது



எம்.எஸ்.எம். அஸ்மி,
கதிரியக்க தொழில்நுட்பவியலாளர், கண்டி தேசிய வைத்தியசாலை

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சிறந்ததொரு அரசியல் பாடத்தை இந்த சமூகத்திற்கு சொல்லியிருக்கின்றது. சிறுபான்மையினரின் வாக்குகள் இல்லாமல் எங்களால் அரசை அமைக்க முடியும் என்ற ஆபத்தான செய்தியை முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கியுள்ளது. இந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை மையமாக வைத்து முஸ்லிம்களது அரசியல் நிலைப்பாட்டில் திருப்புமுனை ஏற்படுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம்கள் ஒரு கட்சிக்குச் சார்பாக இருந்துகொண்டு தனது அரசியல் ஆதரவை வழங்குவது இந்த சமூகத்திற்கு ஆபத்தானது. எதிர்வரும் தேர்தல் வரலாற்று முக்கியத்துவமிக்க பொதுத் தேர்தலாகும். இந்தத் தேர்தலில் சிறுபான்மைக் கட்சிகள் வடக்கு கிழக்கை விட்டு வெளியில் வரக் கூடாது. இருக்கின்ற முஸ்லிம் அரசியல் தலைமைகள் பிரதான கட்சிகளோடு, புது முகங்கள் அறிமுகத்தோடு, பிரதான கட்சிகளுடன் இணைந்து வட கிழக்கிற்கு வெளியே தேர்தலில் முன்னிற்பது தான் சிறந்தது.

ஏனெனில், தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஒரு நிலையான அரசாங்கமொன்று உருவாக்கப்பட வேண்டும். அந்நிலையான அரசாங்கத்தை உருவாக்குவதற்காக வேண்டி பாராளுமன்றத்தில் அவர்கள் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற வேண்டிய தேவையுள்ளது. அந்த ஆசனங்கள் பெறப்படுகின்ற போது அதில் முஸ்லிம் பா. உறுப்பினர்களும் இடம்பெற வேண்டும். (பக்.15)

## "மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தடுப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம்"



ஹுஸ்னி ஜாபிர் -
செயலாளர், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான நிலையம்

பன்மைத்துவ சிந்தனையை ஆதரிக்காத சக்திகள் 2020 பாராளுமன்ற தேர்தலில் மிகப் பெருமளவு ஆசனங்களுடன் வெற்றி பெறுவதற்கான அடையாளங்கள் தெளிவாகத் தென்படுகின்... (பக்.15)

## "கோட்டாபயவின் கரங்களை பலப்படுத்த வேண்டும்"



ரம்ஸி குத்தூஸ்
சிரேஷ்ட ஊடகவியலாளர், தமிழ் மிரர் பத்திரிகை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ் தலைமையில் முஸ்லிம்கள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க முயற்சிசெய்ய வேண்டும். பெரும்பான்மை யின மக்கள் மத்தியில் முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட அதிகமான பிரச்சினைகள் புகுத் தப்பட்டுள்ளன. உதாரணமாக அண்மையில் கைதுசெய்யப்பட்ட பாட்டலி சம்பிக்க ரணவக்க தான் ஆரம்பத்தில் முஸ்லிம்கள் எதிர்காலத்தில் இந்நாட்டில் பிரச்சினைக்குரிய வர்கள் என்கின்ற கருத்தை முன்வைத்தார். தற்பொழுது அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஆகவே இதை இல்லாமல் செய்வதற்கும் முஸ்லிம்களின் பாதுகாப்பு, அபிவிருத்தி, நலன்களை கருத்திற்கொண்டு முஸ்லிம் கட்சிகள், முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் கரங்களை பலப்படுத்த வேண்டும். கோட்டாபய மீதுள்ள அச்சத்தை நீக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் அவ்வச்சத்தை போக்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவாகச் சட்டத்தின் பார்வையில் ஒரு நாடு ஒரு சட்டம்



• கலாநிதி ஸலீம் மர்சூப்

### அறிமுகம்

சில காலமாக பேசுபொருளாக மாறியிருந்த முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்ட சீர்திருத்த விவகாரங்கள், தற்போது இதே போன்று முக்கியமானதாகக் கருதப்படுகின்ற தனியார் சட்டங்களை நீக்குவது தொடர்பான கருத்தாடல்களாக பரிணமித்திருக்கின்றன. ஒரு நாடு, ஒரு சட்டம் என்ற இந்தக் கோஷம் நடைமுறைக்கு வந்தால் எம்.எம்.டி.ஏ (MMDA) மற்றும் இன்னும் சில தனிப்பட்ட சட்டங்கள் வழக்கற்றதாகிவிடும். 'ஒரு நாடு, ஒரே சட்டம்' என்ற கோஷம் மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்கிறது. இது சமூக ஊடகங்களில் ஆர்ப்பரிக்கின்ற அர்ப்பணமிக்க ஆதரவாளர்களினது மட்டுமன்றி சில பிரபலமான வழக்கறிஞர்களினதும் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இந்த மோகம், முன்னோக்கி நகர்த்துவதற்கான உண்மையான விருப்பத்தின் ஆழ அகலங்களை தீவிரமாக பரிசீலிக்க வைக்கிறது. இந்த கட்டுரையில், இலங்கை திருமணச் சட்டத்தின் பின்னணியில் இந்த கருத்தில் கவனம் செலுத்தப்படுகிறது.

### இலங்கை சட்டத்தின் இயல்பு

இலங்கையின் சட்டப்பரப்பில் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' (அல்லது 'ஒரு தேசம், ஒரே சட்டம்') என்ற கருத்தை பொருத்துவது சிரமங்களுக்கு அப்பாற்பட்டதல்ல. ஒருவகையில், அனைத்து இலங்கையர்களும் பெருமைப்பட வேண்டிய வளமான கலாச்சார மற்றும் சட்ட பாரம்பரியத்திலிருந்து விலக்கிச் செல்ல இந்த கருத்து முயல்கிறது. இன்னொரு வகையில் பார்த்தால், இலங்கை என்பது ஒரு ''சட்ட அருங்காட்சியகம்'' ஆகும். இது பல்வேறு சட்ட மரபுகளிலிருந்து வரும் சட்டங்களை அருகருகே காட்சிப்படுத்துகிறது.

இலங்கையின் சிங்கள சட்டங்களும் பழக்க வழக்கங்களும் பண்டைய காலங்களில் நமது தீவு முழுவதும் நடைமுறையில் இருந்தன. ஆனால் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டு கண்டி பிரதேசத்துக்கு நாட்டு மக்கள் மட்டுப்படுத்தப்பட்ட காலத்தில் அது கண்டியச் சட்டமாக நாட்டில் பெயர் பெற்றிருந்தது. ரோமன் - டச்சு சட்டம் என்ற பெயரில் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் விட்டுச் சென்ற சட்டத் தடயங்கள் இப்போது இலங்கையின் பொதுவான சட்டத்தின் அடித்தளமாகக் கருதப்படுகிறது. சில விஷேட தீர்ப்புகள் மற்றும் சட்ட முடிவுகள் மூலமாக ஆங்கிலச் சட்டமும் இலங்கையில் உள்வாங்கப்பட்டது.

இந்தவகையான ஐரோப்பியச் சட்டங்கள் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்பே, இலங்கையின் வட மற்றும் கிழக்கு மாகாணங்களின் மலபார் திராவிட குடியேற்றவாசிகளின் வழக்கிலிருந்த சட்டமான தேசவழமை சட்டம், சோனக வர்த்தக சமூகத்தால் இந்தத் திருநாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட முஸ்லிம் சட்டம் ஆகிய இரண்டு சட்ட மரபுகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பினை இலங்கை பெற்றிருந்தது. இவைகள் எல்லாம் அடங்கிய எம்து சட்டப் பாரம்பரியம் மிகவும் செழுமையானது. கமலாவதி எதிர் டி சில்வா வழக்கில், ஆங்கில சட்டத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றிய பொறுப்பெடுத்தல் தொடர்பான தகராறொன்றை இந்தச் சட்டச் செழுமை மூலமாக நீதியரசர் தம்பையாவினால் நியாயமாகத் தீர்க்க முடிந்தது. பொறுப்பெடுத்தலின் போது ஆங்கிலச் சட்டத்தின்படி குழந்தையின் நலனே முக்கியமானதாகக் கருதப்பட்டது.

ஆனால் ரோமன் - டச்சு சட்டத்தில் இந்த விவகாரத்தில் தந்தைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. தனது தீர்ப்பின் போது ''இனம் போலவே சட்டமும் தூய்மையான இரத்தம் கொண்ட உயிரினம் அல்ல'' என்று அவர் வலியுறுத்தினார். அவரது இந்தத் தீர்ப்புக்கு நாட்டில் பல சட்டங்கள் நிலவியதால் உண்டான சட்டச் செழுமையே காரணமாக அமைந்தது. 'ஒரு நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதை ஆதரிப்பவர்கள், நம்முடைய சொந்த சட்ட மரபுகளும் பெறுமானங்களும் மாற்றீடுகள் முன்வைக்க முடியாத அளவுக்கு மிகவும் பெறுமதியானவை என்பதை மறந்து விடுகிறார்கள்.

### யாப்பு ரீதியான கட்டமைப்பு

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பில் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்து இடம்பெறவில்லை. அந்த யாப்பு பன்முகத்தன்மை பற்றியே பேசுகிறது. தனது மதம் அல்லது வழிபாடு, அனுஷ்டானங்கள், நடைமுறைகள் மற்றும் போதனைகளில் நம்பிக்கையை வெளிப்படுத்தவும், தனது சொந்த கலாச்சாரத்தை அனுபவித்து ஊக்குவிக்கவும் ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள சுதந்திரத்தை யாப்பு உறுதிப்படுத்துகிறது. அத்தோடு, என்ன முரண்பாடுகள் இருந்தாலும், நடைமுறையில் உள்ள எழுதப்பட்ட, எழுதப்படாத சட்டங்கள் அனைத்தும் செல்லுபடியானதாக வழக்கிலிருக்கும் என்ற அடிப்படை உரிமையையும் அரசியலமைப்பு உறுதியளிக்கிறது. அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுடன் முரண்படுபவற்றை சவாலுக்குட்படுத்தும் வகையில் அரசியலமைப்பின் 16 (1) அத்தியாயம், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் (எம்எம்டிஏ) போன்ற சட்டங்களைப் பாதுகாக்கிறது.

ஜம்இய்யதுல் உலமாவின் கடுமையான தடங்கல்களுக்கு மத்தியிலும் எம்.எம்.டி.ஏ வின் சில பாரபட்சமான விதிகளை திருத்துவதற்காக பல்வேறு ஏமாற்றங்களுக்கு மத்தியில் போராடி வரும் சில முஸ்லிம் பெண் ஆர்வலர்கள், அரசியலமைப்பின் 16 (1) ஐ திருத்துவதற்கு அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பது ஏன் என்பதை இதன் மூலமாக விளங்க முடிகிறது. உச்சநீதிமன்றத்தில் எம்.எம்.டி.ஏ-வின் கூறப்பட்ட விதிகளை சவாலுக்குட்படுத்துவதற்கோ அல்லது எம்எம்டிஏ என்பது முழுமையான இஸ்லாமியச் சட்டம் அல்ல என்று கோரி அந்தச் சட்டத்தின் ஆளுகையிலிருந்து எவரும் விலக்குப் பெறுவதற்கோ இது வழியமைக்கும்.




அரச கொள்கையினை வழிநடத்தும் கோட்பாடுகள் அடங்கிய அத்தியாயம் 27 உள்ளிட்ட அரசியலமைப்பின் எந்தப் பகுதியிலும் 'ஒரு நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதற்கான எந்த அடிப்படையையும் காண முடியாது.

இதற்கு மாறாக, அண்மைக்காலமாக, 'ஒரு நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்தை சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ள இந்தியா, அரசியலமைப்பை மீள வரையும் நிலைக்கு ஆளானது. இந்திய அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டபோது, இந்த விவகாரம் பரபரப்பாக விவாதிக்கப்பட்டது: அரசியலமைப்பு சபையின் சில உறுப்பினர்கள் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை மற்றும் தத்தெடுப்புக்கான பொதுவான சட்டம் இருக்க வேண்டும் என வாதிட்டனர். மற்றவர்கள் இது கட்டம் கட்டமாக அடையப்பட வேண்டிய குறிக்கோள் என்று நம்பினர். இந்திய அரசியலமைப்பின் 44 ஆம் அத்தியாயத்தில் உள்ள வழிநடத்துதல் கோட்பாடு, 'குடிமக்களுக்கு ஒரு சீரான சிவில் குறியீட்டைப் பாதுகாக்க அரசு முயற்சிக்க வேண்டும்'' என்று இணங்கியிருந்தாலும் அதற்குரிய நேரம் தோதானதல்ல என்று கருதப்பட்டது. இன்று வரை அந்த உரிய தருணம் வாய்க்கவே இல்லை.

### தீர்க்கப்பட விரும்பும் பிரச்சினை என்ன?

ஒருவர் 'ஒரு நாடு, ஒரே சட்டம்' தீர்வு பற்றிப் பேசும்போது, அதனால் தீர்க்க விளையும் பிரச்சினையைப் பார்ப்பது பயனுள்ளதாக அமையும். பெரும்பாலான பன்மைத்துவச் சமூகங்களில், கலாச்சாரங்கள் மற்றும் தனிப்பட்ட சட்டங்களின் மோதல்களை ஒருவர் காண முடியும். இது பெரும்பாலும் குழந்தைத் திருமணம் மற்றும் பலதார மணம் போன்ற சில நடைமுறைகளால் ஏற்கனவே இருக்கும் சனத்தொகைக் கட்டமைப்பு தீவிரமாகச் சிதைவடையக் கூடும் என்ற பெரும்பான்மையினரின் அச்சத்தின் வெளிப்பாடாகும்.

அதே சமயம், இந்த சமூகங்களிலுள்ள பெண்கள் தங்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாகத் தோன்றும் சட்டங்களில் மாற்றங்களைக் கோருகிறார்கள். அவர்கள் சட்ட சீர்திருத்தங்களுடன் முன்னேறத் தவறும்போது, 'ஒரு நாடு, ஒரே சட்டம்' தீர்வைத் தழுவுகிறார்கள்.

இந்த சமூகங்களின் பன்முகத்தன்மையின் ஒரு பகுதியாக இருக்கும் தனியார் சட்டங்களுக்குப் பதிலாக, பன்மைச் சமூகங்களில் உள்ள பெரும்பான்மைச் சமூகங்களுடன் இணைந்து பெண் ஆர்வலர்களும் பொதுவான சட்டத்தை கோருவது விசித்திரமானது. இங்குள்ள பெண்கள் எதிர்கொள்ளும் இரண்டக நிலை என்னவென்றால், பாலின நீதியை அடைவதற்கான நோக்கத்திற்காக, அவர்கள் பன்முகத்தன்மையை இழக்கத் துணிவதாகும். குறைந்த பட்சம் அவர்கள் விரும்புகின்ற கலாச்சார மற்றும் சட்டப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியையாவது அவர்கள் இழக்க நேரிடும்.

பாலின நீதிச் சட்டங்களும் சட்டத் தொகுப்புகளும் சமகால ஜனநாயக நாடுகளுக்கு முன்னாலுள்ள முக்கியமான சோதனையாக மதிப்பிடப்படுகிறது. ஐரோப்பா கண்டத்தில் உள்ள மேற்கத்திய ஜனநாயக நாடுகள் தொடர்ச்சியான சட்டவாக்கங்களின் மூலம் பெண்களுக்கு சமத்துவத்தை உறுதி செய்வதில் நெருங்கி வந்துள்ளன. ஆங்கில பொதுச் சட்டம் நிலவும் இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் கனடாவில், வரலாற்று தீர்ப்புகள் மற்றும் சட்டங்கள் மூலம் பெண்களின் நிலை படிப்படியாக முன்னேறியுள்ளது.

இந்த ஒவ்வொரு நாடுகளிலும், பாலின சமத்துவம் வெறுமனே சட்டத்தின் மூலமாக உணரப்படவில்லை. இந்த செயல்முறை படிப்படியாக பெண்ணிய போராட்டங்களால் முன்னெடுக்கப்பட்டதன் விளைவாகவே நடைமுறைக்கு வந்தது. உண்மையில், அமெரிக்காவில் ஒரு யுனிவர்சல் கமர்ஷியல் கோட் (யு.சி.சி) மட்டுமே உள்ளது. ஆனாலும் அதன் பல்வேறு மாநிலங்களிடையே அதன் தனியார் சட்டங்களில் பெரும் வேறுபாட்டைக் கொண்டுள்ளது. குறிப்பாக குழந்தை திருமணம் விடயத்தில் பல்வேறு மாநிலங்களிலும் வேறு வேறான சட்டங்கள் உள்ளன. விஷேட சட்டங்களால் ஆளப்படாதவர்களுக்கான திருமண பதிவு (பொது) கட்டளைச் சட்டத்தினதும் (''எம்.ஆர்.ஓ)'' இலங்கை முஸ்லிம்களால் பிரயோகிக்கப்படும் எம்.எம்.டி.ஏ. இனதும் பின்னணியில் திருமணச் சட்டத்தை நோக்குவதனூடாக 'ஒரு நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்தை விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.

### எம்.எம்.டி.ஏ, எம்.ஆர்.ஓ மற்றும் ஒரு நாடு - ஒரு சட்டம்

ஒரு தேசத்திற்கு சட்டமொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக, ஒரு ஆதாரவான அரசியலமைப்பு கட்டமைப்பை மட்டும் கொண்டிருப்பது போதுமானதல்ல என்பதனை 'ஒரு நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்தை ஏற்றுக்கொள்பவர்களில் பெரும்பாலோர் உணர்வதில்லை. பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டங்கள் அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடிய சட்டத்தின் புதிய குறியீடுகளை உருவாக்குதலும் இதற்கு அவசியமானது. உதாரணமாக, எம்.எம்.டி.ஏ.வை ரத்து செய்து, முஸ்லிம்களை திருமணப் பதிவு (பொது) கட்டளைச் சட்டத்தின் (எம்.ஆர்.ஓ) விதிகளால் நிர்வகிக்க வேண்டுமென்று கூறுவதாக இருந்தால் குழந்தைத் திருமணம் பற்றி பிந்தையவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேள்வி கேட்க வேண்டி வருகிறது.

முதலில் சட்டம் இயற்றப்பட்ட 1907 ஆம் ஆண்டின் ஆரம்ப காலங்களில், திருமண பதிவு கட்டளைச் சட்டத்தின் (எம்.ஆர்.ஓ) 15 வது பிரிவு, பதினாறு வயதை பூர்த்தி செய்யாத ஆண் அல்லது பன்னிரண்டு வயதைப் பூர்த்தி செய்யாத பெண்ணின் திருமணம் செல்லுபடியாகாது என்று குறித்துரைத்திருந்தது. கட்டளைச் சட்டத்தின் 22 வது பிரிவு ''இருபத்தொரு வயதிற்கு கீழ்ப்பட்ட ஒருவரின் தந்தையோ'', அல்லது தந்தை கிடைக்கவில்லை அல்லது திறமையற்றவராக இருந்தால் தாயோ அல்லது இருவரும் கிடைக்கவில்லை என்றால் அல்லது தகுதியற்றவராக இருந்தால் முறையாக நியமிக்கப்பட்ட ஒரு பாதுகாவலரோ, ''அத்தகைய கட்சியின் திருமணத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கு அதிகாரம் உடையவராவார். மேலும் அந்தத் திருமணத்திற்கு அத்தகைய ஒப்புதல் அவசியமானதாகும்'' என ஆரம்பத்தில் குறித்துரைத்திருந்தது.

உண்மையில், பிரிவு 22 (2) பெற்றோர் இல்லாத இடத்தில் அல்லது பாதுகாவலர், அல்லது அத்தகைய பெற்றோர் அல்லது பாதுகாவலர் நியாயமற்ற முறையில் சம்மதத்தைத் தடுத்து நிறுத்துகிறார்கள் எனின், இருபத்தொருவருக்குக் குறைவான நபரின் திருமணம் மாவட்ட நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் மட்டுமே ஒப்பந்தம் செய்யப்படலாம். 1907 ஆம் ஆண்டில், எம்.ஆர்.ஓ இயற்றப்பட்டபோது, மேஜராகும் வயது இருபத்தி ஒரு வயதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 1989 என்ற மிக அண்மைக் காலத்திலேயே இது 18 ஆகக் குறைக்கப்பட்டது.

ஆகவே, 1995 க்கு முன்னர், எம்.ஆர்.ஓ. சட்டத்தின்படி குறைந்தபட்ச திருமண வயது ஒரு ஆணுக்கு 16 ஆகவும், ஒரு பெண்ணுக்கு 12 ஆகவும் இருந்தது. அந்த குறைந்தபட்ச வயதிற்குட்பட்ட நபர்களின் திருமணங்கள் செல்லுபடியாகாது. அந்த குறைந்தபட்ச வயதுக்கு மேல் ஆனால் மேஜராகும் வயதுக்கு கீழே (இது மேலே குறிப்பிட்டபடி 1989 இல் 21 முதல் 18 ஆகக் குறைக்கப்பட்டது) பெற்றோர், பாதுகாவலர் அல்லது மாவட்ட நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் மட்டுமே திருமண ஒப்பந்தம் செல்லுபடியாகும். திருமணத்தை ஒப்பந்தம் செய்யக்கூடும். 1989 ஆம் ஆண்டில் பெரும்பான்மை வயது பதினெட்டு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டிருந்தாலும், எம்.ஆர்.ஓ 1995 வரை திருத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு திருத்தச் சட்டத்தின் மூலம், அந்தக் கட்டளைச் சட்டத்தின் 15 வது பிரிவு பின்வரும் விதிமுறைகளுடன் மாற்றப்பட்டது:

'இந்த பிரிவு நடைமுறைக்கு வந்தபின் ஒப்பந்தம் செய்யப்பட்ட எந்த திருமணமும் திருமணத்திற்கு இரு தரப்பினரும் பதினெட்டு வயதை பூர்த்தி செய்யாவிட்டால் செல்லுபடியாகாது.'

எவ்வாறாயினும், செல்லுபடியாகும் திருமணத்திற்கு பெற்றோர், பாதுகாவலர் அல்லது மாவட்ட நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவைப்படும் கட்டளைச் சட்டத்தின் 22 வது பிரிவு மாற்றப்படாமல் சட்டத்தை குழப்பமான நிலையிலேயே விட்டு வைத்தது. 18 வயதிற்கு கீழான எவரும் செல்லுபடியாகும் திருமணத்தை ஒப்பந்தத்தில் ஈடுபடுவதைத் தடைசெய்த பிரிவு 15 இன் திருத்தம், 18 வயதை நிறைவு செய்த ஒருவரை திருமண ஒப்பந்தமொன்றில் ஈடுபடுவதைச் செல்லுபடியாக்கும் வகையில் மறைமுகமாக அனுமதித்தது. இந்தக் குழப்பநிலை தொடர்வதற்குக் காரணமாகியது.

பிரிவு 22 க்கு உட்பட்டு இது இயற்றப்பட்டது என்பதைக் குறிக்கும் சொற்கள் பிரிவு 15 இல் காணப்படவில்லை. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, பிரிவு 15 இல் குறிப்பிடப்பட்டுள்ள பதினெட்டு வயது மேஜராவதற்கான வயதிற்கு ஒத்ததாக இருப்பதால் குழப்பம் மேலும் அதிகரிக்கிறது. இந்தச் சூழலில், எம்.எம்.டி.ஏ கமிட்டி அளித்த பரிந்துரைகளின் வெளிச்சத்தில் எம்.எம்.டி.ஏ-க்கு திருத்தங்களை பரிசீலிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவின் முன்னணி உறுப்பினர் ஒருவர் Roar ஊடகத்துக்கு வழங்கியதாகத் தெரிவிக்கப்படும் தகவலில்,

''பொதுத் திருமண கட்டளைச் சட்டத்தின் 22 வது பிரிவின்படி, 18 வயதிற்கு கீழ்ப்பட்ட திருமணங்களை மாவட்ட நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் அனுமதிக்க முடியும் என்று ஒரு விதி உள்ளது என்பது ஜம்இய்யதுல் உலமாவின் அவதானங்களில் ஒன்று'' என்று குறிப்பிட்டுள்ளார்.

1995 ஆம் ஆண்டில் எம்.ஆர்.ஓவின் 15 வது பிரிவு திருத்தப்பட்ட பின்னர் ஒரு திருமணத்துக்கு அதன் எல்லைக்குட்பட்ட அனைத்து நபர்களிடமிருந்தும் ஒப்பந்தம் செய்யக்கூடிய குறைந்தபட்ச வயதை 18 ஆக மாற்றியது. 1997 ஆம் ஆண்டில் 22 ஆம் பிரிவில் உள்ள ''இருபத்தி ஒன்று'' என்ற வார்த்தை ''பதினெட்டு''ஆக மாற்றப்பட்டது. அந்தத் திருத்தம், ஒரு குழந்தையின் திருமணத்தை உறுதிப்படுத்துவதற்காக பெற்றோர் அல்லது நீதிமன்றத்தின் சம்மதத்தைப் பெறும் முறையை பாராளுமன்றம் தக்க வைத்துக் கொள்ளும் வகையில் அமையப்பெற்றதாகக் கருதுவதற்கு இடமிருக்கிறது. இது சொந்தமாகத் திருமணம் செய்து கொள்ள இயலாத ஒருவரை, பெற்றோர், பாதுகாவலர் அல்லது மாவட்ட நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் குறைந்த பட்ச வயது வரம்பில்லாமல் (ஒரு குழந்தையை) திருமணம் செய்து கொடுக்க MRO அனுமதிக்கிறது என்ற ஜம்இய்யதுல் உலமாவின் கூற்றை நியாயப்படுத்துகிறது.

எம்.ஆர்.ஓ-வுக்கான 1995 மற்றும் 1997 திருத்தங்களை குணரட்னம் எதிர் பதிவாளர் நாயகம் வழக்கில் பரிசீலித்தது. 18 வயதை பூர்த்தி செய்யாத ஒரு இளைஞனுடன் தனது திருமணத்தை பதிவு செய்ய பதிவாளர் நாயகம் மறுத்ததை சவாலுக்குட்படுத்தி 14 வயதுடைய ஒரு பெண்ணின் தந்தையால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இரு தரப்பினரினதும் பெற்றோரின் சம்மதத்துடனேயே இந்தத் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டது.

திருமணத்திற்கு இரு தரப்பினரும் பதினெட்டு வயதை பூர்த்தி செய்யவில்லை என்ற வகையில் திருமண ஒப்பந்தம் செல்லுபடியாக முடியாது என்ற அடிப்படையில், மேல்முறையீட்டு நீதிமன்றம் பதிவாளர் நாயகத்தின் முடிவை ஆதரிப்பதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை. மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒப்படைக்கும் போது, நீதியரசர் ஷிரானி திலகவர்தன எழுதிய தீர்ப்பில்,

''பிரிவு 22 இன் படி, 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களின் விடயத்தில் திருமணத்துக்கு இரு தரப்பினதும் ஒப்புதல் தேவை. திருமண பதிவு கட்டளைச் சட்டத்தின் 22 வது பிரிவில் திருத்தங்களைக் கொண்டு வரும்போது, 1995 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க திருமண பதிவு (திருத்தம்) சட்டத்தின் உட்பொருளை சட்டத்தின் வடிவமைப்பாளர்கள் கருத்தில் கொள்ளவில்லை என்று தெரிகிறது'' என்று குறிப்பிட்டிருந்தார்.

'ஒரு நாடு, ஒரு சட்டம்' என்ற கருத்துக்காக வாதாடுபவர்கள், சட்ட சீர்திருத்தத்திற்கான கொள்கையை ஆரம்பித்தவர்களின் பொதுவான இழுத்தடிப்பையும் அலட்சியத்தையும், நமது சட்டத்தை உருவாக்குபவர்களின் திறமையின்மையையும் மறந்துவிட்டதாகத் தெரிகிறது. எங்கள் சட்டத்தை உருவாக்குபவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அவர்களாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை என்பதை எம்.ஆர்.ஓவின் 22 வது பிரிவு தொடர்ந்தும் நிலைத்திருப்பதனை வைத்துப் புரிந்து கொள்ள முடிகிறது. எம்.ஆர்.ஓவின் 1995 இன் 15 ஆவது பிரிவுக்கான திருத்தத்தின் நோக்கத்துடன் இது தெளிவாக முரண்படுகிறது.

'ஒரு நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதைக் கருத்தில் கொள்ளுமாறு கேட்கப்படும் ஒரு முஸ்லிம் எதிர்கொள்ளும் மற்றொரு காரணியாக எம்.ஆர்.ஓவில் உள்ள விவாகரத்துச் செய்வதற்கான ஏற்பாடுகள் அமைகின்றன. திருமணம் என்பது இணக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. கணவன்-மனைவியாக இருதரப்பும் தொடரத் தயாராக இருக்கும் வரை மட்டுமே நீடிக்க வேண்டும். எவ்வாறாயினும், எம்.ஆர்.ஓவின் 19 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் பரஸ்பர ஒப்புதலால் விவாகரத்து இடம்பெற முடியாது. அல்லது விவாகரத்து வழங்குவதற்கான ஒரு களமாக திருமணத்தின் மீளமுடியாத முறிவை சட்டம் அங்கீகரிக்கவில்லை. (பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்

அகில இலங்கை அறபுக் கல்லூரிகள் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இரண்டு நாள் மாநாட்டில் ஜாமிஆ நளீமிய்யாவின் பிரதிப் பணிப்பாளரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிரதித் தலைவருமான அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் அவர்கள் ஆற்றிய கருப்பொருள் உரையின் சுருக்கம்.

# தாய் நாட்டுக்கு விசுவாசமாக நடப்பது இஸ்லாத்துக்கு முரணானது அல்ல

### தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்றால் என்ன?

தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்றால் ஒரு தேசத்தின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு, மனித வள அபிவிருத்தி போன்றவற்றில் நாம் காணும் நேர்மறையான மாற்றம் என சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்தலாம். அதிலும் குறிப்பாக மனித வள அபிவிருத்தியே தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பிரதான இடத்தை வகிக்கிறது. ஏனெனில், இன்றைய உலகின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு முதலானவை தொடர்பில் ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பிரதான காரணமாக விளங்குவது பண்பாட்டு வீழ்ச்சியாகும். இந்த உண்மை புரியப்பட வேண்டும். இன்று உலகிற்கு பொதுவாகவும் எமது தேசத்துக்கு குறிப்பாகவும் தேவைப்படுவது ஆன்மிக, ஒழுக்க, பண்பாட்டு ரீதியிலான வழிகாட்டல்களாகும்.

ஒரு நாட்டில் உள்ள பாடசாலைகள், கலாசாலைகள், பல்கலைக்கழகங்கள் உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களதும் பிரதான பணி நல்ல மனிதர்களை உருவாக்குவதாக இருக்க வேண்டும். ஆன்மிகம், பண்பாடு, ஒழுக்கம், அறிவு, ஆரோக்கியம் நிறைந்த ஆளுமை கொண்ட மனிதர்களை உருவாக்குவதே அவற்றின் இலக்காக இருக்க வேண்டும். இதுவே உண்மையான மனித வள அபிவிருத்தி ஆகும்.

### அறபுக் கலாசாலைகளும் மனித வள அபிவிருத்தியும்

நல்லொழுக்கமும் பண்பாடும் உள்ள ஒரு தலைமுறையை உருவாக்குவதே அறபுக் கலாசாலைகளின் தார்மீகக் கடப்பாடாகும். அல்லாஹ்வின் அருளால் அன்றிலிருந்து இன்றுவரை அதனை இலக்காகக் கொண்டே அறபுக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அறபுக் கல்லூரிகளின் பாடத்திட்டமானது உடல், அறிவு, ஆன்மா ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வகையிலும் ஆன்மிகம், பண்பாடு, அறிவு, ஆரோக்கியம், உளவியல் போன்ற அனைத்திலும் ஒரு மாணவனை மேம்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ்வையும் மறுமையையும் நம்பி ஏவல்களை எடுத்து நடந்து விலக்கல்களை முற்று முழுதாக தவிர்ந்து வாழ்வதோடு அவற்றை பிறருக்கு போதித்து சமூகத்தை வழிநடத்தும் இறையடியார்களை அறபுக் கலாசாலைகள் உருவாக்குகின்றன. இதன் மூலம் அவை சிறந்த மனிதர்களை இந்நாட்டுக்கு வழங்குகின்றன. சிறந்த மனிதர்களே தேசத்தின் நற்பிரஜைகள். இதனை ''சிறந்த இறையடியான் = சிறந்த மனிதன் = நற்பிரஜை'' எனும் சமன்பாடு தெளிவாக விளக்குகிறது. ஆகவே, அறபுக் கலாசாலைகள் நற்பிரஜைகளை உருவாக்குகின்றன. எப்போதும் நற்பிரஜைகளே தேச நிர்மாணத்திற்குப் பங்களிப்புச் செய்வர்.

### நற்பிரஜைத்துவம்

நற்பிரஜைத்துவம் என்பது ஒருவர், தான் ஒரு பிரஜை என்ற வகையில் தனது வகிபாகத்தை முறையாகவும் சரியாகவும் நிறைவாகவும் நிறைவேற்றுவதைக் குறிக்கும். அந்த வகையில் நற்பிரஜை என்பவர்,

- பிறரையும் அவர்களது உடமைகளையும் மதிப்பவராக இருப்பார்.
- பிறருக்கு உதவுபவராகவும் பரிவு காட்டுபவராகவும் இருப்பதோடு பிறருடைய நலனுக்கு முன்னுரிமை வழங்குவார்.
- பிறருடைய கருத்துக்களை செவிமடுப்பார்
- உதவி தேவைப்படும் மக்களுக்கு உதவுவார்.
- சூழலை மதிப்பார்; அதற்கு எத்தகைய பங்கமும் விளைவிக்க மாட்டார்.
- சிரமப்பட்டு உழைப்பார்.
- பண்பாடாகவும் இனிமையாகவும் நடப்பார்.

அத்தோடு நற்பிரஜைத்துவத்தின் கருப்பொருட்களாக பின்வரும் ஆறு அம்சங்கள் நவீன காலத்தில் அதிகம் வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

1. நாணயமாக நடத்தல் (Honesty)
2. தயவு காட்டல் (Compassion)
3. மதித்தல் (Respect)
4. பொறுப்புணர்ச்சி (Responsibility)
5. துணிச்சல் (Courage)
6. தேசப்பற்று (Patriotism)

இவற்றை வாழ்வில் கடைப்பிடிக்கும், போதிக்கும் நல்ல மனிதர்களை அறபுக் கல்லூரிகள் உருவாக்குகின்றன. என்றாலும், மேற்படி அம்சங்களில் குறிப்பாக தேசப்பற்று தொடர்பாக சிறந்த தெளிவை பெற்றிருப்பதானது அறபுக் கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகளைப் பொறுத்தவரையில் மிக அத்தியாவசியமானதும் காலத்தின் தேவையுமாகும். ஏனெனில், தேசப்பற்று தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டில் போதிய தெளிவின்மை இன்று உணரப்படுகின்றது.

### இஸ்லாத்தின் பார்வையில் தேசப்பற்று

தேசப்பற்று நற்பிரஜைக்குரிய அடிப்படைப் பண்பாடாகும். தேசப்பற்று என்பது நாட்டின் மீதான பற்றையும் விசுவாசத்தையும் குறிக்கும். தேசப்பற்று என்பது மனித இயல்பாகும். இதில் முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவர் என்ற வேறுபாடு இல்லை. ஏனெனில் நபியவர்களும் அவர்களுடைய தோழர்களும் தமது தாயகமான மக்கா மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தனர். ''பூமியில் எனக்கு மிகவும் விருப்பமானது மக்காவாகும். எனது சமூகம் என்னை அங்கிருந்து வெளியேற்றாதிருந்தால் அதுவல்லாத இன்னொரு இடத்தில் நான் குடியேறி இருக்கமாட்டேன்'' என மக்காவைப் பார்த்து ஹிஜ்ரத் செல்லும்போது நபிகளார் கூறிய வார்த்தைகள் இஸ்லாத்தின் பார்வையில் புவியியல் கண்ணோட்டத்தில் ஒரு தேசத்திற்கு பெறுமானம் உண்டு என்பதைக் காட்டுகிறது.

### சகோதரத்துவத்தின் வகைகள்

1. இஸ்லாமிய சகோதரத்துவம்: முஃமின்கள் அனைவரும் சகோதரர்கள் என்பது இஸ்லாம் கூறும் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். இதற்கு பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் மற்றும். நபிகளாரின் பொன்மொழிகள் ஆதாரமாக இருக்கின்றன.



''முஃமின்கள் அனைவரும் சகோதரர்கள். எனவே (பிணக்குகள் ஏற்படும்போது) அவர்களுக்கிடையில் சமாதானம் செய்து வையுங்கள்.'' (அல்குர்ஆன் 49: 10)

''...அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாகி விட்டீர்கள்.'' (அல்குர்ஆன் 3: 103)

''ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு சகோதரனாவான்'' (புகாரி)

2. மனித சகோதரத்துவம்: மனிதர்கள் அனைவரும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததியினர் என்ற வகையில் உலகில் வாழும் ஒவ்வொருவரும் இன்னொருவருக்கு சகோதரரே.

''மனிதர்களே, உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த உங்களின் இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள்.'' (அல்குர்ஆன் 4:1)

''மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம்.'' (அல்குர்ஆன் 49:13)

''நீங்கள் அனைவரும் ஆதமின் சந்ததியினர். ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர்.'' (அபூ தாவூத்)

3. தேசம், இனம்சார் சகோதரத்துவம்: ஓர் இனத்தை சார்ந்தவர்கள் அல்லது ஒரு மொழி பேசுபவர்கள் அல்லது ஒரு தேசத்தைச் சேர்ந்தவர்கள் சகோதரர்களாவர். நபிமார்கள் பலரை அல்குர்ஆன் அறிமுகம் செய்யும்போது அவர்களை அந்தந்த இனத்தைச் சார்ந்தவர்களின் சகோதரர்கள் என்றே பேசுகிறது.

''அவர்களிடம் அவர்களின் சகோதரர் நூஹ் இவ்வாறு கூறியதை நினைவுகூருங்கள்: ''நீங்கள் அஞ்சுவதில்லையா?'' (அல்குர்ஆன் 26: 106)

''அவர்களிடம் அவர்களின் சகோதரர் ஸாலிஹ் இவ்வாறு கூறியதை நினைவுகூருங்கள்: ''நீங்கள் அஞ்சுவதில்லையா?'' (அல்குர்ஆன் 26: 142)

''அவர்களிடம் அவர்களின் சகோதரர் லூத் இவ்வாறு கூறியதை நினைவுகூருங்கள்: ''நீங்கள் அஞ்சுவதில்லையா?'' (அல்குர்ஆன் 26: [illegible])

''மேலும், மத்யன்வாசிகளிடம் அவர்களுடைய சகோதரர் ஷுஐபை அனுப்பினோம்.'' (அல்குர்ஆன் 29: 36)

அந்த வகையில், ஒரு மனிதனுக்கு ஒரே நேரத்தில் வெவ்வேறு கண்ணோட்டங்களில் வேறுபட்ட உறவுகளும் தொடர்புகளும் இருக்கும்.

உதாரணமாக, பிறந்த ஊருடனான உறவு, தான் சார்ந்த பிரதேசத்துடனான உறவு, தனது தேசத்துடனான உறவு, தனது தேசம் அமைந்துள்ள பிராந்தியம், கண்டத்துடனான உறவு, தனது மார்க்கம் சார்ந்த உறவு, தனது சமூகத்துடனான உறவு, தான் சார்ந்த மார்க்கத்தைப் பின்பற்றும் சர்வதேச சமூகத்துடனான உறவு, உலகளாவிய மனித சமூகத்துடனான உறவு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

உண்மையில் பிரஜைகள் என்ற வகையில் உருவாகும் உறவானது மதம், இனம், மொழி முதலான அனைத்து வரையறைகளையும் கடந்ததோர் உறவாகும். இங்கு ''அல்வலாஉ வல்பராஉ'' எனும் கோட்பாட்டை பிழையாக புரிந்து, முஃமின் களை மாத்திரமே தங்கள் நேசத்துக்குரியவர் களாக எடுத்து முஸ்லிம் அல்லாதவர்களை விட்டு முற்று முழுதாக ஒதுங்கி வாழ்வதோடு முஸ்லி மல்லாதவர் ஆட்சி செய்யும் நாட்டுக்கு விசுவாச மாக நடந்து கொள்வது இஸ்லாத்துக்கு முரணா னது என்ற நிலைப்பாடு கொண்டவர்களுக்கு கட்டாயம் ஒரு செய்தியை சொல்லியாக வேண் டும். ''தாய் நாட்டுக்கு விசுவாசமாக நடப்பது ஒருபோதும் இஸ்லாத்துக்கு முரணானது அல்ல'' என்பதே அச்செய்தியாகும். நவீன இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவரான ஷைக் பின் பைய்யா வின் பின்வரும் கருத்து இங்கு ஞாபகமூட்டப்பட வேண்டியது.

''தாய் நாட்டுக்கு விசுவாசமாக நடப்பது, அது ஷரீஆவின் வரம்புகளுக்கு உட்பட்டிருந்தால் ஒருபோதும் மார்க்கத்துக்கு விசுவாசமாக நடப்பதற்கு முரணானது அல்ல. இங்கு விசுவாசமாக நடப்பது உயர்ந்த பெறுமானங்களுக்கு விசுவாசமாக நடப்பதையும் தாய் நாட்டுக்கும் குடிமக்களுக்கும் நன்மை செய்வதையும் குறிக்கிறது. அது ஷரீஆவும் மனித பகுத்தறிவும் ஏற்றுக்கொள்ளும் அம்சமாகும்'' (கிதாபுல் வலா பைனத்தீனி வத்தவ்லா)

ஆனால், தாய் நாட்டின் மீதான விசுவாசமும் ''தீன்'' மீதான விசுவாசமும் முரண்படும்போது தீனுக்கே முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

### நற்பிரஜைத்துவம் எனும் உறவுக்கு வலுவூட்டும் இஸ்லாமியக் கோட்பாடுகள்

மனிதர்கள் என்ற அடிப்படையில் நாம் அனைவரும் ஒரு உம்மத். ஓர் இறைவனின் அடிமைகள் என்ற உணர்வு எம்மோடு எப்போதும் ஒன்றித்து இருக்க வேண்டும்.

### அனைவருக்கும் நலன்கள், எதிர்பார்ப்புக்கள் மற்றும் கவலைகள் ஒரே வகையானவை:

இவற்றில் முஸ்லிம்-காபிர், ஏழை-பணக்காரன், அரசன்-குடிமகன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்றெல்லாம் மனிதர்களை வேறுபடுத்திப் பார்க்க முடியாது. மனிதன் என்ற உணர்வு மாத்திரமே எம்மை இந்த பார்வையை வழங்கி பிறருக்கு உதவும் எண்ணத்தை வழங்கும். யாராக இருந்தாலும் நீதியாக நடக்குமாறு இஸ்லாம் பணிக்கிறது. முஸ்லிம் அல்லாதவர் என்ற காரணத்துக்காக ஒருவருக்கு அநீதி இழைக்கப்படுவது ஷரீஆவுக்கு முற்றிலும் முரணானது. மனிதர்கள்தங்களுக்கு மத்தியில் சண்டை சச்சரவுகள் இன்றி ஐக்கியமாக இருப்பதையே இஸ்லாம் விரும்புகிறது. அதற்காக பாடுபடுவது உயர்ந்த பணியாக நோக்கப்படுகிறது.

### தேசத்தைக் கட்டியெழுப்புவதில் எமது முஸ்லிம்களின் பங்களிப்பு

(பக்.14)




அபூ ஷாமில்

## தலைகீழ் பாடம்

இலங்கை முஸ்லிம் சமூகத்திடையே நிலவுகின்ற பிரிவினைவாதம் வெடித்துச் சிதறிய சந்தர்ப்பமாக ஈஸ்டர் தாக்குதல்களின் பிற்பாடான நிலைமைகளை எடுத்துக் கூற முடியும். அது வரை வளர்க்கப்பட்டு வந்த ஸலபி - சூபி முரண்பாடுகள் உச்ச கட்டத்துக்குச் சென்று அது காட்டிக் கொடுப்புக்களாக உருவெடுத்து முழு சமூகத்தையுமே குட்டிச் சுவராக்கியது. ஒன்றாய் அமர்ந்து உண்ணுதல் என்ற அடையாளத்தினால் வெளிக்காட்டப்பட்டிருந்த முஸ்லிம் சமூக ஒற்றுமை அம்மணமாகியது. பள்ளிவாசலின் ஒரு அழைப்பினூடாக முஸ்லிம் சமூகத்தை இலகுவாக ஒன்றுபடுத்த முடியும் என்று இலங்கை மக்களிடம் வளர்ந்திருந்த நல்லபிப்பிராயம் சுக்கு நூறாகச் சிதைந்து போனது.

முஸ்லிம்களிடம் ஒற்றுமை இல்லை என்பதைக் காட்டிக் கொடுக்கும் இடமாக பள்ளிவாசல்கள் மாறின. சில வேளைகளில் பள்ளிவாசல்களே கூடக் காட்டிக் கொடுக்கப்பட்டன. இருந்த ஸஹ்ரான் கொல்லப்பட்ட போதும் எஞ்சியிருப்பவர்களை ஸஹ்ரான்களாக்கும் பணியை பலரும் மும்முரமாகச் செய்து வந்தார்கள். முதலாம் ராஜபக்ஷ ஆட்சி தோல்வியடைந்தமைக்கு முஸ்லிம்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டது தான் காரணம் எனக் கண்டறியப்பட்டு, முஸ்லிம் சமூகத்தை பிளவுபடுத்தி தமது வெற்றியை உறுதி செய்து கொள்வதில் இரண்டாம் ராஜபக்ஷ வெற்றி பெற்றார். முஸ்லிம்கள் தமது சமூகத்தின் கோடாரிக் காம்புகளாக மாறி சமூகத்தைப் பிளவுபடுத்தி தமது இலக்கிலிருந்து தோல்வி அடைந்தனர்.

இரண்டாம் ராஜபக்ஷ ஆட்சி ஆரம்பித்த போது தான் தம்மிடமிருந்து ஒற்றுமை களவாடப்பட்டு வேறோரிடத்தில் குடி புகுந்திருப்பது முஸ்லிம் சமூகத்துக்குப் புரிந்தது. ஜாதி, குலம், வர்க்க பேதம் போன்ற இன்னோரன்ன காரணங்களாலும் ஒற்றுமைப்படுத்தப்படவே முடியாது என்று கருதப்பட்டு வந்த சமூகம் ஒன்றாய் இணைந்து ஒரு முகமாக ஒருமித்த குரலில் செயற்பட்டு தமது ஒற்றுமையை உலகுக்கே எடுத்துக் காட்டி சாதனை படைத்தனர். அவர்களை ஒற்றுமைப்படுத்தும் தளமாக அவர்களது வழிபாட்டுத் தலங்கள் மாறின. சமயத் தலைவர்களின் குரல்களுக்குச் செவிசாய்த்து அவர்களின் வழிகாட்டலில் சிங்கள சமூகம் ஒன்றுபட்டு இயங்கி வெற்றியைச் சாதித்துக் கொண்டது.

இலங்கை மக்களுக்கு ஒற்றுமைப் பாடம் புகட்ட வேண்டிய சமூகம், இப்போது தலைகீழாகப் பாடம் படித்துக் கொண்டிருக்கிறது. சிலபோது இன்னும் இந்தச் சமூகம் பாடம் படிக்கவில்லையோ என்று கூட எண்ணத் தோன்றுமளவுக்கு முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமை இன்னும் கூறுபோடப்படுகிறது. எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்படும் போது அதனை வரவேற்பதோடு நில்லாமல் தானும் அதில் ஒரு பங்காளியாக மாறுவதற்கு முடியாமல் இந்தச் சமூகம் ஓரங்கட்டி நின்றிருக்கிறது. இதனால் இன்று எந்தக் கயவனாலும் பந்தாடப்பட முடியுமான தாத்தாரியர் காலத்து நிலைக்கு இலங்கை முஸ்லிம் சமூகம் தள்ளப்பட்டிருப்பது முழு இஸ்லாமிய உலகுக்கும் ஓர் அவலமாகவே அமைகிறது.

ஒரே ஸப்பில் ஒரே கிப்லாவை முன்னோக்கி ஒரே இறைவனுக்காகத் தொழுகை நடத்திய முஸ்லிம்கள் ஏன் இந்தப் பிரிவினைவாதக் கோஷங்களுக்குள் தொலைந்து போனார்கள்? ஒரே ஸஹனில் ஒன்றாக உண்டு களித்தவர்களுக்கு மத்தியில் பிளவுகளை உருவாக்குவதற்குத் துடித்தவர்களுக்கு ஏன் இவர்கள் இரையானார்கள்?

தேர்தல் முடிவுகள் எந்தப் பெறுபேற்றை வெளிப்படுத்தினாலும் அது முஸ்லிம்களின் ஒற்றுமை சிதைந்து விட்டது என்பதைத் தெளிவாகப் படம் போட்டுக் காட்டியது. ஒரே அணிக்கு முஸ்லிம்கள் வாக்களிப்பதுதான் ஒற்றுமை என இங்கு கூறவரவில்லை. ஆனால் தேர்தலின் பிற்பாடான நம்மவர்களின் செயற்பாடுகள் சமூகம் இன்னும் துருவமயப்படுத்தப்படுதலில் இருந்து நீங்கவில்லை என்பதைக் காட்டுகிறது. குறித்த அணிக்கு வாக்களித்ததால் நாங்கள் எங்களைக் காப்பாற்றிக் கொண்டோம், உங்களை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதான சம்பவங்கள் ஆங்காங்கு நடக்கின்றன. ஒரு தரப்பு அடுத்த தரப்பைக் குற்றவாளிகளாக சிலவேளை தேசத் துரோகிகளாகப் பார்க்கிறது. அவர்கள் வாக்களித்ததும் இவர்கள் வாக்களித்ததும் சமூகத்தின் நன்மைக்குத்தான் என்பதை இரு தரப்பும் விளங்கிக் கொள்ளாமல் பிளவுபடுகின்றன.

இந்த இடத்தில் தான் முஸ்லிம் சமூகம் தலைகீழ்ப் பாடத்தைப் பயில வேண்டியிருக்கிறது. சிங்களப் பெரும்பான்மையினரை ஒற்றுமைப்படச் செய்த பௌத்த மத வழிபாட்டுத் தலங்களிடம் இருந்து பாடம் படிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அது இனவாதத்தைத் தூண்டுகின்ற பிரச்சாரத்தினூடாக அல்லாமல், நாட்டை ஒன்றுபடுத்த வேண்டிய நன்னோக்கத்தில் செயற்படுவது நாட்டுக்கு மற்றுமொரு முன்மாதிரியை முஸ்லிம் சமூகத்தில் இருந்து வழங்கியதாக அமையும். மத ரீதியாக, கொள்கை ரீதியாக பிளவுபட்டுள்ள சமூகம் இப்பொழுது அரசியல் ரீதியாகவும் பிரிந்து செல்லத் துணிந்திருப்பது தடுக்கப்பட வேண்டும்.

இப்படியே விட்டால் சிறுபான்மை முஸ்லிம் சமூகம் இன்னும் சின்னஞ் சிறிதாகத் துண்டாடப்படும் நிலை வர முடியும். அதற்கு முன்னர் முஸ்லிம் சமூகத்தை மீளவும் ஒன்றுபடுத்தி சமூகமாய்ச் செயற்படச் செய்வதற்கு முஸ்லிம் தலைமைகள் முன்வர வேண்டும். பிரிந்து செயற்படுகின்ற பல்வேறு தரப்புகளையும் அழைத்துக் கலந்துரையாட வேண்டும். ஒருத்தரை ஒருத்தர் பலப்படுத்துவது குறித்துப் பேச வேண்டும். குறிப்பாக இலங்கை முஸ்லிம் வர்த்தக சமூகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாதிப்புக்கள் இன்னும் தீவிர நிலை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. துருவமயப்பட்டிருக்கும் அரசியல் பிரிவுகளை ஒரே இடத்தில் அமரச் செய்வதனூடாக இந்தப் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு ஆவன செய்ய முடியும்.

முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையின்மை நாட்டின் ஸ்திரத்தன்மையைக் குலைக்கும் சக்திகளுக்கு சாதகமாக அமையாமல் கவனமெடுக்க வேண்டும். இதற்கு எவரிடமும் இருந்தாவது முன்மாதிரிகளைப் பிச்சையெடுப்பது இல்லாத ஒன்றையிட்டுப் பெருமைப்படுவதை விடப் பாவமானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநலம் 43

# பிடிவாத ஆளுமைக் கோளாறு
## (Obssesional Personality Disorder)

இந்தக் கோளாறை தமிழில் ஒற்றைச் சொல்லில் மொழிபெயர்ப்பது கடின மானது. சிலர் இதனை பிடிவாத ஆளு மைக் கோளாறு எனப் பெயர்க்கின்றனர். வேறு சிலரோ ஒரே கருத்தில் ஊன்றிப் போகும் ஆளுமைக் கோளாறு எனக் குறிப்பிடுகின்றனர். எவ்வாறாயினும் அதன் பண்புகளை நோக்குவதன் மூலம் இவ்வகை ஆளுமைக் கோளாறின் இயல்புகளைப் புரிந்துகொள்ளலாம். பிடிவாத ஆளுமைக் கோளாறு உடைய வர்கள் எந்த வேளையிலும் வளைந்து கொடுக்காத விரைப்புத் தன்மை உடையவர்களாகக் காணப்படுவர்.

எந்தவொரு விடயத்தையும் பரந்த கண்ணோட்டத்தில் இத்தகையோர் பார்க்க மாட்டார்கள். மாறாக, அது குறித்த விபரங்களை அதி நுணுக்கமாக கவனிப்பவராக இருப்பதோடு, அனைத் தும் மிக ஒழுங்காகவும் விளைவை எதிர்வுகூறக் கூடிய வகையிலும் அமைய வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். எப்போதும் தம்மைத் தவிர உள்ளோ ருக்கு சொல்லிக் கொடுக்க முயல்பவர் களாகவும் தேவையின்றி அடுத்தவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பவர் களாகவும் காணப்படுவர். இதன் காரண மாக சிலவேளைகளில் கோமாளித்தன மாகவும் நடந்துகொள்வர். ஏனையோரின் ஒத்துழைப்போடு செயல்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் இவ்வாறானவர்கள் மற்றவர்களின் கருத்தக்களை ஒதுக்கி விட்டு அளவுக்கு மீறிய தன்முனைப் போடு நடந்துகொள்வர்.

கவனத்துடனும் ஒழுங்குமுறையாக வும் நடப்பதில் மித மிஞ்சிய ஆர்வம்



காட்டும் இவர்கள், எதிர்பாராத வகை யில் தமது நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படும்போது மனம் குழம்பி அசௌக ரியம் அடைவர். தமக்கேயுரிய நிலை யான சில கண்ணோட்டங்களையும் நியமங்களையும் அமைத்துக் கொண் டுள்ள இவர்களுக்கு அவற்றிலிருந்து சிறிதேனும் விலகிப் போவது பெரும் சிரமத்திற்குரிய செயலாக இருக்கும். எனவே, அடுத்தவர்களுடைய விருப்புக் கள், தேவைகள், அபிப்பிராயங்கள், கண்ணோட்டங்கள் என்பவற்றைப் பற்றி இவர்கள் சிறிதும் இலட்சியம் செய்ய மாட்டார்கள்.

இவர்கள் சிறு சிறு விடயங்களில் கடைப்பிடிக்கும் நுணுக்கமும் அவர் களது தன்மையில் பேணும் இயல்பும் அவர்கள் ஆடை அணியும் விதத்தில் நன்கு பிரதிபலிக்கும். ஆடை விடயத் தில் அப்பழுக்கற்ற நேர்த்தியைக் காண் பிக்க இவர்கள் முயல்வார்கள்.

இத்தகைய பிடிவாத ஆளுமைக் கோளாறு உடையவர்கள் மனச் சான்று பற்றி அளவுக்கு மீறிய கரிசனையுடைய வர்களாகவும் சுயவற்புறுத்தலுடன் வேலை செய்பவர்களாகவும் காணப்படக் கூடும். இத்தகையோர் சில்லறை விவ காரங்களையெல்லாம் நுணுக்கமாகக் கவனிக்க வேண்டிய அலுவலகப் பதவி களுக்குப் பொருத்தமானவர்களாக அமையக் கூடும். எனினும், தமது வழிமுறைகளிலிருந்து சிறிது விலகிச் செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் இவர்கள் கடுமையான பிடிவாதத்துடன் நடந்துகொள்வர்.

இக்கோளாறு கடுமையாக உள்ளவர் களின் இத்தகைய நடத்தைகள் வெளிப் படையாகவே தெரிந்த போதிலும் மிதமான கோளாறு உள்ளவர்களில் நெருக்கடிகளோ பதட்டமோ ஏற்படும் வேளைகளில்தான் இவை முனைப்பாகச் செயல்படுகின்றன.

---

அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் – 17

# மு:மின்களின் தாய்

### நபிகளாரிடம் சந்தேகங்களை நிவர்த்திக்கும் ஆயிஷா

ஒருமுறை நபிகளாரை நோக்கி ஒரு மனிதர் வந்தார். அப்போது மனிதர்களில் மிக மோசமான வர் வருகின்றார். அவருக்கு இடம்கொடுங்கள் என்றார்கள். அவர் நபிகளாரை நெருங்கியபோது, அவரோடு மிக மென்மையாக உரையாடிய நபி களாரின் செயலைக் கண்டு ஆயிஷா ஆச்சரிய மடைந்தார். அம்மனிதர் ரஸூலுல்லாஹ்விடமிருந்து எழுந்து சென்றபோது, இறைதூதரே அம்மனிதரைப் பற்றி நீங்கள் இப்படி இப்படியெல்லாம் சொன்னீர் கள். பின்னர் அவரோடு மிக மென்மையாகப் பேசி னீர்களே? எனக் கேட்டார். அப்போது நபிகளார், "மக்களால் புறக்கணிக்கப்படுகின்றவனே மக்களில் மிகவும் தீங்கானவன். அதேபோன்று ஒருவனின் ஆபத்துக்குப் பயந்து நாம் யாரை புறக்கணிக்கின் றோமோ அவனும் மக்களில் மிகவும் தீங்கானவன் என்றார்கள்.

நபிகளார் சேரிப் புற மற்றும் மிகுந்த நாட்டுப் புற அறேபியர்களின் அன்பளிப்புப் பொருட்களை ஏற்க மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் தங்களது உணவு களிலும் குடிபானங்களிலும் சுத்தத்தைப் பேணுவ தில்லை என்பதோடு, இஸ்லாமிய ஷரீஆ, மார்க் கத்தின் அடிப்படைகள் பற்றிய அறிவு அவர்களிடம் போதுமானதாக இருக்கவில்லை. மேலும், அவர்கள் உணவு, குடிபானங்களில் பேணுதலானவர்களும் அல்லர்.

ஒருமுறை உம்மு ஸுன்புலா எனும் பெண்மணி நபிகளாருக்கு சிறிது பாலை அன்பளிப்பாகக் கொண்டு வந்தார். ஆனால், அங்கு நபிகளார் இருக்கவில்லை. அப்பெண்ணைப் பார்த்த ஆயிஷா சேரிப்புற அறேபியர்களின் உணவுகளை உண்பதை நபிகளார் தடுத்துள்ளார்கள் என்றார். அப்போது நபி களாரும் அபூபக்ரும் வீட்டிற்குள் நுழைந்தனர். உம்மு சுன்புலாவே! நீங்கள் என்ன கொண்டு வந்தி ருக்கிறீர்கள் என வினவியதற்கு, உங்களுக்கு பால் கொண்டு வந்திருக்கின்றேன் எனக் கூறினாள் அப் பெண். அதற்கு நபிகளார், உம்மு சுன்புலாவே! பாலை ஊற்றுங்கள் என்றவுடன் அவள் ஊற்றினாள். பின்னர் அபூபக்கருக்கும் ஊற்றுங்கள் என்றார். அவள் ஊற்றினாள். நபிகளார் அதனைப் பருகினார்கள். அப்போது ஆயிஷா சேரிப்புற அறேபியர்களின் உணவு களை உண்பதை நீங்கள் தடுத்திருந்தீர்களே என்றார். ஆயிஷாவே! இவர்கள் சேரிப்புற அறபிகளல்லர். இவர்கள் எமது சுற்றத்தார். நாம் அவர்களின் சுற்றத் தார். அவர்களை அழைத்தால் அழைப்புக்குப் பதில் தருவார்கள். அவர்கள் நாட்டுப் புறத்தவர்களல்லர்" எனப் பதிலளித்தார்கள்.

நபிகளாரின் இவ்வார்த்தைகள் அவர்கள் ஷரீஆ சட் டங்களை நன்கு அறிந்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அதே போன்று இஸ்லாத்திற்கு உதவு வதற்கு அழைப்பு விடுத்தால் அவர்கள் பின்வாங்காமல் பதிலளிப்பார்கள் என்பதையும் உணர்த்துகின்றது.

"தெளிவாகச் சொல்லுங்கள், நெருங்கி நடவுங்கள், நன்மாராயம் கூறுங்கள். ஏனெனில் யாருடைய அமலும் அவரை சுவர்க்கத்திற்கு அனுப்பி விடாது" என்ற நபிகளாரின் வார்த்தையைக் கேட்டபோது நான் ஆச்சரியமடைந்தேன். ஏனெனில் அவர்கள், 'எவரை யும் அவரது அமல் சுவர்க்கத்திற்கு அனுப்பாது என்று கூறினார்கள். இந்தப் பொது விதியிலிருந்து பாவங் களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் மட்டுமே விதி விலக்கானவர்கள் என ஆயிஷா எண்ணினார்கள். எனவே, நீங்கள் இதில் சேர மாட்டீர்களே எனக் கேட்டார். அதற்கு நபிகளார் அல்லாஹ் தனது பாவ மன்னிப்பினாலும் அருளினாலும் என்னை பாதுகாத்து விட்டான்" என்றார்கள்.

நபிகளார் ஒருமுறை வித்ர் தொழுவதற்கு முன்பே தூங்குவதற்கு விரும்பினார். அப்போது ஆயிஷா, அல்லாஹ்வின் தூதரே வித்ர் தொழுவதற்கு முன்பா தூங்குகிறீர்கள் எனக் கேட்டார். அதற்கு நபிகளார் (ஆயிஷாவே!) எனது இரு கண்களும் தூங்கும். ஆனால், எனது உள்ளம் உறங்குவதில்லை" என்றார்கள்.

யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாதவர்களுக்கு ஆயிஷாவின் இக்கேள்விகள் ஒழுங்கற்ற, அனா வசியமான கேள்விகளாகத் தோன்றக் கூடும். இத்தகையோர் ஆழ்ந்த சிந்தனை அற்றவர்கள். ஆயினும், நடைமுறை யதார்த்தங்களை ஏற்றுக் கொள்கின்றவர் இவ்வாறான விளக்கங்களையும் தெளிவுகளையும் பெற வேண்டுமாயின், நபி களாரிடம் இதுபோன்ற கேள்விகளைக் கேட்டுத் தான் ஆக வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வர். அதில் எவ்வித ஐயமும் இல்லை.

இன்று முஹம்மதிய சமூகத்தின் மனிதர்கள் தமது நுபுவ்வத்தின் யதார்த்தத்தை சரியாக விளங்கிக் கொள்வதற்கு இந்தக் கேள்விகள் பெருமளவு உதவி யிருக்கின்றன. இக்கேள்விகளையும் கலந்துரையா டல்களையும் ஆராய்ச்சி அணுகுமுறைகளையும் கவனமாக உற்று நோக்கும்போது, இன்னொரு பக்கமும் புலப்படுகின்றது. அதுதான் ஆயிஷாவின் அனைத்து அசைவுகளையும் ஒவ்வொரு செயற் பாட்டையும் நபிகளார் கண்காணித்து வந்திருக்கி றார்கள் என்பது. அவருடைய விவகாரத்தில் நபி களார் முழுக் கவனம் செலுத்தியுள்ளார்கள். அவர் தவறிய சந்தர்ப்பங்களில் அவற்றைத் திருத்தி யுள்ளார்கள். அவரை இதமாகப் பயிற்றுவித்து, தொடர்ந்தும் பராமரித்து வந்துள்ளார்கள். பெண் களின் உலகத்திற்கு முதற் பிரச்சாரகராக வந்த ஆயிஷா அவர்களைப் படிப்படியாக வளர்த்தெடுத் துள்ளார்கள்.

(தொடரும்)

---

# இடைவிலகல் குறித்து பெற்றோர்கள்...

கம்பஹா மாவட்ட முஸ்லிம் கல்வி – 12

**கலாநிதிப் பட்டத்திற்காக றவூப் ஸெய்ன் மேற்கொண்ட கம்பஹா மாவட்ட இடைநிலைப் பாடசாலை மாணவர் இடைவிலகல் எனும் தலைப்பிலான ஆய்வின் அறிக்கை முக்கியத்தும் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**



பிள்ளைகளுடன் பெற்றோர் கழிக்கும் நேரம்,பிள்ளைக்குக் கல்வியின் மகிமை குறித்து ஊக்குவித்தல், பிள்ளைகளிடம் கற்றல் பற்றிய தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பல், வீட்டிலுள்ள அனைத் துப் பிள்ளைகளையும் நீதியாகவும் சமத் துவமாகவும் நடத்தல், பிள்ளைகளின் உளவியல் தேவைகளான அன்பு, கணி ப்பு, பாதுகாப்பு போன்றவற்றைப் பூர்த்தி செய்தல், மகிழ்ச்சியான பிள்ளைகளைப் பராமரித்தல், மகிழ்ச்சிகரமான வீட்டுச் சூழலை உறுதிசெய்தல், சமநிலையான தண்டனை முறை, பிள்ளைகளைப் பாராட்டுதல், பிள்ளைகளின் கற்றலுக்கு ஆலோசனை வழங்கல், பிள்ளைகளின் நடத்தைகளைத் தொடர்ச்சியாக அவதா னித்தல், கற்றலில் பிள்ளை எதிர்நோக் கும் பிரச்சினைகளுக்குத் தேவையான நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெறல், பிள்ளைகளில் சுயமதிப்பை வளர்த்தல் ஆகிய உருப்படிகளுக்கான துலங்கலின் இடைப் பெறுமானம் சராசரிப் பெறு மானங்களை விடக் குறைவாக இருப்ப திலிருந்து மாணவர்களின் பாடசாலை இடைவிலகலில் பெற்றோர் மறைமுக மாகப் பங்களிக்கின்றனர் என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது.

கம்பஹா மாவட்டத்தில் இடை நிலைப் பாடசாலை இடைவிலகல் எனும் தலைப்பிலான இவ் ஆய்வின் எழுவினாக்களுள் ஒன்றான மாணவர் இடைவிலகளுக்கான காரணங்கள் எவை என்பது குறித்து பல்வேறு தரப்பினரிட மிருந்தும் பெறப்பட்ட தரவுகள் பகுப் பாய்வு செய்யப்பட்டன. இத்தகைய காரணிப் பகுப்பாய்வில் இடைவிலகிய மாணவர்கள் பள்ளிவாயல்கள், சமூக நிறுவனங்கள், மத்ரஸாக்கள் என்பவற் றின் உதவியுடன் இனங்காணப்பட்ட னர். அவர்களுடனான நேர்காணலின் போது இடைவிலகியமைக்கான கார ணங்கள் வினவப்பட்டன.

கற்றலில் ஆர்வமின்மை, ஆசிரியரின் கற்பித்தல் கவர்ச்சியின்மை, உழைப்பில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம், ஆசிரிய ரால் உளப்பாதிப்புக்கு உட்பட்டமை, பெற்றோரின் தூண்டுதல், பணம் சம் பாதிப்பதில் ஏற்பட்டமிகை ஆர்வம், பாடசாலை தூரத்தில் அமைந்திருத்தல், சகமாணவர்களுடன் பிணக்குகள், பிள் ளைகளின் தீராத உடல் உபாதைகள், கற்பிப்பது விளங்காமை, ஆசிரியரின் தண்டனைகள், வீட்டுவேலைச் சுமை, படித்துப் பிரயோசனமில்லை என்ற எண் ணம், தேவையானளவு உணவும் கற்றல் சாதனங்களும் கிடைக்காமை, பெற்றோர் வெளிநாடு சென்றமை, பாதுகாவலர் களால் சுரண்டப்படுகின்றமை, படிப்ப தற்கு வீட்டில் வசதியின்மை போன்ற காரணங்கள் குறித்து அவர்களிடம் வினவப்பட்டது.

இவ்ஆய்வில் இடைவிலகிய மாண வர்களுடனான நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகள் மிக முக்கியமா னவை. தரம் 06 இலிருந்து 10 ஆம் தரம் வரையான வகுப்பறைகளிலிருந்து இடை விலகிய மாணவர்கள் மட்டுமன்றி சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் இடைவிலகியோரும் இந்த நேர்காண [illegible]

இம்மாணவர்கள் தெரிவித்த காரணங் களைப் பகுப்பாய்வு செய்யும்போது, குறிப்பிட்ட மாணவனின் கற்றல் ஆர்வம் மற்றும் இயலளவு இடைவிலகலில் முன் னணிப் பங்குவகிப்பதை அவதானிக்க முடிந்தது. கற்றலில் ஆர்வமின்மை, கற்பித்தல் விளங்காமை, வீட்டுவேலை சுமை, இயல்பானகற்றல் குறைபாடு என்பன இங்கு மாணவர் தொடர்பான ஒரு கூட்டுக் காரணி இடைவிலகலுக்கு இட்டுச் சென்றுள்ளதை அவதானிக்க லாம்.

மேற்குறிப்பிட்ட கூட்டுக் காரணி களைத் தூண்டும் துணைக் காரணங் களாக ஆசிரியரின் கற்பித்தல் கவர்ச்சி யின்மை, ஆசிரியரின் தண்டனை முறை, ஆசிரியரால் உளப்பாதிப்பிற்கு உட்பட்ட மை ஆகியன அமைந்துள்ளதை அறிய முடிந்தது.

ஆக மாணவர் தரப்புக் காரணிகளில் கல்வி மீதான ஆர்வமின்மையும் அதற் கான துணைக் காரணிகளும் முக்கிய மானவை. அதேபோன்று மாணவர் இடைவிலகலை ஏற்படுத்தும் இரண்டா வது மிகப் பெரிய காரணமாக மாண வர்களின் வறுமை நிலை காணப்படு கின்றது. இக்காரணியை அடியொற்றிய தாகவே தேவையான உணவு நேரத்திற் குக் கிடைக்காமை, கற்றல் சாதனங்கள் கிடைக்காமை, பணம் சம்பாதிப்பதில் ஆர்வம், உழைப்பில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஆகிய காரணங்கள் அமை கின்றன. அதிபர், ஆசிரியர், பெற்றோர் ஆலோசக ஆசிரியர்களும் இவ்விரு காரணங்களையும் மிகப் பிரதானமான தென தமது வினாக்கொத்திலும் நேர் காணல்களிலும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மாணவர்களின் வறுமை நிலைக்கு அவர்கள் பொறுப்பல்ல என்பதிலிருந்து மாணவர் இடைவிலகலுக்கான இறுதிக் காரணம் பெற்றோரைச் சென்று சேர் கின்றது. ஒற்றைப் பெற்றார், கூட்டுக் குடும்பம், வீட்டு வசதியின்மை, பெற் றோர் (தாய்) வெளிநாடு செல்லல், பிள்ளைகளைக் குறிப்பிட்ட தரத்துடன் பாடசாலையிலிருந்து இடைவிலகுமாறு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ தூண்டுவதன் மூலம் பிள்ளைகளை உழைப்புக்கு நிர்ப்பந்தித்தல், விவாகரத் துப் பெற்ற தாய்மார்கள் தமது ஆண் பிள்ளைகளை பாடசாலையிலிருந்து நிறுத்தல் என்பன இடம்பெறுகின்றன.

ஆக, மாணவர்களின் கற்றல் ஆர்வ மின்மை என்பதற்குள் குடும்பத்தின் வறுமை நிலையும் வறுமை நிலை என்ற காரணிக்குள் குடும்பத்தின் கட்டமைப் பும் பொருளாதார மற்றம் வருமான நிலைகளும் உள்ளடங்கியிருக்கின்றன. ஏற்கனவே இலக்கிய மீளாய்வில் ஆய் வாளர் சுட்டிக் காட்டியது போன்று இடைவிலகளுக்கான காரணம் கம்பஹா மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஒரு கூட்டுக் காரணியாகவே உள்ளது.

கட்டுக் கோப்பு இல்லாத சிதறிய, விவாகரத்துப் பெற்ற, போதைவஸ்துக் குத் தந்தை அடிமையான, தாய் வெளி நாடு சென்ற குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளே பெரும்பாலும் இடை நிலை வகுப்பறைகளிலிருந்து இடை விலகியுள்ளனர். இத்தகைய குடும்பங் களில் பெற்றோரின் கல்வி மீதான ஈடுபாட்டையோ, வீட்டுமையக் கற்ற லில் பெற்றோரின் பங்களிப்பையோ ஆரோக்கியமான பெற்றார் - பிள்ளை தொடர்பாடல் களையோ எதிர்பார்க்க முடியாது. இவை எதுவும் கல்விக்குச் சாதகமாக இருக்கவில்லை என்பது வினாக்கொத்துத் தரவுகள் மூலமும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவு கள் வழியாகவும் உய்த்துணரப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுத் தேர்தல்... (01 ஆம் பக்கத் தொடர்)

மஹஜன எக்ஸத் பெரமுன, ஸ்ரீலங்கா மஹஜன பெரமுன, கொமியூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடது சாரி முன்னணி ஆகிய கட்சிகள் இதுவரை இதற்கான இணக்கத்தைத் தெரிவித்திருக்கின்றன. ஜேவிபியின் இடது சாரிக் கொள்கைகள் தற்போது பலவீனமடைந்திருப்பதால் புதிய இடது சாரி முன்னணிக்கு சமூகத்தில் இடம் கிடைத்திருப்பதாகவும், அதனாலேயே இந்தக் கூட்டணியை ஆரம்பிக்கத் தீர்மானித்ததாகவும் கலாநிதி திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இந்தக் கூட்டணிக்கான பெயரும் சின்னமும் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனவும், ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் தம்முடன் இணைந்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐரோப்பிய... (01 ஆம் பக்கத் தொடர்)

அத்தோடு இந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்பவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னர் விசாவுக்காக விண்ணப்பிக்க வேண்டும் என்ற விதி மாற்றப்பட்டு ஆறு மாத காலமாக நீடிக்கப்பட்டுள்ளது.

2018 இல் செனகென் வீசாவுக்கென 36,449 பேர் விண்ணப்பித்திந்தார்கள். இவர்களில் 20 வீதமானவர்களின் (7,302) விசா விண்ணப்பம் மறுக்கப்பட்டிருந்தது. செனகன் நாடுகளுக்குச் செல்வதற்காக இலங்கையர்களில் அதிகமானோர் பிரான்ஸ் விசாவுக்கே விண்ணப்பித்துள்ளனர். இதன் எண்ணிக்கை 13,236 ஆகும். இது தவிர சுவிட்சர்லாந்துக்கு 8503 விண்ணப்பங்களும், ஜேர்மனிக்கு 7912 விண்ணப்பங்களும் கிடைத்திருந்தன.

## கொழும்பின்... (01 ஆம் பக்கத் தொடர்)

புத்தளம் பிரதேசவாசிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அருவாக்காடு பிரதேசத்தில் கொட்டப்பட்டு வந்த குப்பைகள் 20 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளன. பெப்ரவரி மாதம் வரை கொழும்பில் பெறப்பட்டுள்ள புதிய காணியில் குப்பைகள் கொட்டப்படும். பெப்ரவரி மாதத்திலிருந்து ஜோன் கீல்ஸ் நிறுவனம் சீன நிறுவனம் ஒன்றுடன் இணைந்து கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்யும் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளன. அதனடிப்படையில் கொழும்பின் குப்பைகளை அருவக்காடு குப்பை சேகரிப்பு நிலையத்திற்கு அனுப்புவது நிறுத்தப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் பாலித நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## இலங்கைத்... (01 ஆம் பக்கத் தொடர்)

இலங்கைத் தமிழர்கள் குடியுரிமை கேட்டால் வழங்கலாம். ஆனால் அவர்கள் குடியுரிமை கேட்கக் கூடாது. அவர்கள் தங்களது நாடுகளுக்கே திரும்பிச் சென்று அவர்களது உரிமைகளைப் பெற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் என்னைச் சந்தித்துள்ளனர். அவர்கள் யாரும் இந்தியாவில் குடியுரிமை கேட்கவில்லை. நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கு விமான, கப்பல் போக்குவரத்து வசதி செய்து தருமாறே அவர்கள் கேட்டனர். இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கக் கூடாது. அவர்களுக்குக் குடியுரிமை கொடுத்தால் இலங்கைத் தெலுங்கர்கள், இலங்கைக் கன்னடர்கள் எல்லாம் குடியுரிமை கோரத் தொடங்குவர் எனவும் இல. கணேஷன் தெரிவித்தார்.

## பழிவாங்கும்... (01 ஆம் பக்கத் தொடர்)

தவிர்ந்துகொள்வதற்காக இரண்டு கட்சிகளிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அமைதியானதொரு இணக்கப்பாடு காணப்பட்டது.

அவ்வாறானதொரு நடைமுறை காணப்பட்டது என்பதனை நிரூபிப்பதற்கான பலமான இரண்டு எடுத்துக்காட்டுகள் வருமாறு.

ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்தில் பட்டலந்த வதைமுகாம் குறித்து அராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மூன்றுபேர் கொண்ட ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. ஆணைக் குழுவின் அறிக்கையில் இருந்த முக்கியமான தகவல்கள் அடங்கிய அத்தியாயமொன்று அச்சிடப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படாமலிருந்ததாக குறித்த ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவரிடமிருந்து எனக்கு அறியக் கிடைத்தது. நான் அது குறித்து முன்னர் எழுதியிருக்கின்றேன். அது உண்மையாயின் ரணில் விக்ரமசிங்கவைப் பாதுகாப்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதிவியில் இருக்கும்போது முக்கியமானதொரு பிரச்சினையில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றார். வங்கிகளில் தனியார் காப்பகங்கள் வைத்திருக்கின்ற அரசியல்வாதிகளின் தகவல்கள் அறிந்த ஒருவர்; ஊடாக பிரதமருக்கு அவை ஒவ்வொன்றாக வழங்கப்பட்டிருந்தது.

காப்பகங்கள் இருக்கின்ற வங்கிகள் மற்றும் அவற்றில் இருக்கின்ற பணப் பெறுமதி என்பன ஏதோ ஒரு விதத்தில் அவருக்கு கிடைக்கப்பெற்றிருந்தது. சொந்த நலன்களுக்காகவன்றி பொது நலன் கருதியே குறித்த தகவல்களை அவர் வழங்கியிருந்தார். முதலாவது இரண்டாவது தகவல்கள் குறித்து சட்டம் முறையாக அமுல்படுத்தப்பட்டன. அவரது மூன்றாவது தகவல் சந்திரிக்காவின் காப்பகம் குறித்ததாக இருந்தது. எனினும் பிரதமர் முன்னைய இருவர் தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கையினை இதற்காகவும் மேற்கொள்ளவில்லை. இது தொடர்பான விபரங்களை எனது 'சவ்ர ரெஜினி' எனும் நூலில் குறிப்பிட்டிருக்கின்றேன்.

மஹிந்த ராஜாபக்ஷ ஜனாதிபதி உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட முன்னர் ரணில் விக்ரமசிங்கவை அழைத்து தனது பதவியை விட்டுச் சென்றது கூட அதுவரை காலமும் நடந்து வந்த நடைமுறைக்கு ஏற்ப தனது விடயங்களையும் மேற்கொள்வதற்காக ரணில் விக்ரமசிங்கவிடம் உறுதிமொழி வாங்குவதற்காக இருக்கலாம்.

### நல்லாட்சியின் முட்டாள்தனமான நடைமுறை

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஊழல்களை சீரான முறையில் மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தை மாத்திரம் இலக்கு வைத்து செயற்பட்டதானது அரசாங்கம் தூக்கியெறியப்படும் நிலை உருவாகக் காரணமாக அமைந்தது. ஊழலின் அளவுகளில் வித்தியாசங்கள் இருந்த போதிலும் ஊழல் என்பது ராஜபக்ஷ காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒன்றல்ல என்பதாகவே குறிப்பிட வேண்டும். அதற்கு முன்னரான சந்திரிக்கா காலத்திலும் அதற்கும் முன்னரான யூ.என்.பீ. ஆட்சிக் காலத்திலும் காணப்பட்டே வந்திருக்கினறது.

மஹிந்த ராஜபக்ஷவை தோல்வியடையச் செய்வதற்காக ஒன்றிணைந்திருந்த பழைய அரசியல்வாதிகளில் அதிகமானோருக்கு ஊழல் சார்ந்த வரலாறு காணப்படுகின்றது. ஆட்சியைப் பெற்று நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வது அவர்களது நோக்கமாக இருக்கவில்லை. மீண்டும் பொருள் ஈட்டுவதற்குச் சந்தர்ப்பம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதே அவர்களது நோக்கமாக இருந்தது. ஊழலுக்கு எதிராகச் செயற்படும் அரசாங்கம் ஒன்றாயின் அது ஊழலற்ற ஒன்றாகவே இருக்க வேண்டும். அது மக்களுக்கு தெரியும் விதமாகவும் இருக்க வேண்டும். எனினும் நல்லாட்சி அரசாங்கத்திடம் அத்தகைய தன்மை இருந்ததாகக் கருத முடியவில்லை.

ஊழல் விசாரணைகள் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு மட்டும் வரையறுக்கப்படும்போது அது அரசியல் பழிவாங்கலாகவே மஹிந்த ஆதரவாளர்களால் நோக்கப்படும். 1977 ஆம் ஆண்டு சிறிமிவோ பண்டாரநாயக்க தோல்வியடைந்தது போன்று படுதோல்வியாக மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வி அமையவில்லை. சிங்கள பகுதிகளின் வாக்குகள் வெற்றியடைந்தவரை விட தோல்வியடைந்தவருக்காகவே அதிகமாக கிடைத்திருந்தது. இந்த விடயம் நல்லாட்சி அரசாங்கத்தினால் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

அத்துடன் ஊழல் என்பது அரசவியலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட விடயமொன்றல்ல என்பதுடன் அது முழு நாட்டு மக்களையும் சூழ்ந்திருக்கின்ற கொடிய புற்றுநோயாகவே கருத வேண்டும். அவ்வாறான சூழ்நிலையொன்றில் ஊழலை ஒழிக்க வேண்டுமாயின் கவனமாக ஆராய்ந்து மக்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்திலான ஒரு செயற்திட்டத்தின் ஊடாகவே நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும். ஊழல் விசாரணைகளை ராஜபக்ஷ ஆட்சிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாது அனைத்து ஆட்சிக் காலங்களிலும் இடம்பெற்ற ஊழல்கள் குறித்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருப்பின் அது மக்களால் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமைந்திருக்க வாய்ப்பிருந்தது.

ஏதாவது காரணங்களினால் அவ்வாறான வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் சிக்கல்கள் இருந்திருப்பின் இதன் பின்னர் ஊழல் ஏற்படாத விதத்திலான சட்ட ஒழுங்குகளை மீள்கட்டமைத்திருக்கலாம். பாரளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்துக்கு முரணாக அரசாங்கத்துடன் வியாபாரங்கள் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை இல்லமலாக்கி கட்சி பேதங்கள் பாராமல் குறித்த தவறுகளை செய்திருப்பதர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதிவியிலிருந்து நீக்கம் செய்திருக்கலாம்.

## சம்பிக்கவின்... (03 ஆம் பக்கத் தொடர்)

வேறு விதமான காரணங்களின் அடிப்படையில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததையும் நாம் மறந்து விட முடியாது. ஆனாலும் ஐ.தே.க. வின் முன்னாள் அமைச்சர் சம்பிக கைது தொடர்பாக இந்த அரசாங்கத்தின் நடத்தை குறித்து நாட்டில் சிங்கள மக்கள் மத்தியில் அவ்வளவாக நல்ல எண்ணம் இல்லை. அவர் ஒரு சிறந்த சிங்கள தலைவர் என்ற அடிப்படையிலும் நேர்மை யானவர், ஒரு சிறந்த தேசாபிமானி என்ற அடிப்படையிலும் நோக்கப்படுவதால் அவரை கைது செய்தமை அரசியல் பழிவாங்கல் என்றே குற்றம் சுமத்தப்படுகின்றது.

அத்துடன் இன்றைய அரசாங்கம் முருத்தெட்டுவே ஆனந்த தேரர், அதுரலியே ரத்ன தேரர், மாகல் கந்தே சத்தாதிஸ்ஸ ஆகியோரது கைப்பொம்மையாக மாறி இருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இவர்களுக்கு தேவையான ஒவ்வொருவர் தொடர்பாக முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கையில் இறங்கி இவர்களின் பின்னால் இருக்கின்ற இன விரோதிகளை திருப்திப்படுத்த முற்படுவதால் பின்னால் பாரிய பாதிப்பு இருக்கின்றது என்பதை புரியாமல் அரசாங்கத்தின் போக்கு இருக்கின்றது. இவ்வாறு போனால் சிங்கள மக்கள் மத்தியில் இருந்தே ஜனாதிபதி குறித்தும் அரசாங்கம் குறித்தும் மிக மோசமான அருப்தி ஏற்படலாம்.

சட்டம், நீதி, நிர்வாகம் என்பன சுதந்திரமாகவும் நீதியாகவும் சுயாதீனமாகவும் இயங்குகின்றது என்று மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனாலும் அந்த சட்டம் என்ற வேலியே பயிரை மேய ஆரம்பித்தால் மக்கள் நீதியை தேடுவதென்பது இருளில் கருப்புப் பூனையை தேடுவதற்குச் சமமானதாகும். சட்டமா அதிபர் திணைக்களம் சுயாதீனமானதாகவும் அரசியல் தலையீடுகள் இன்றியும் இயங்க வேண்டியது அவசியமாகின்றது.

கடந்த ஆட்சியில் இவ்வாறாக குற்றமிழைத்தவர்கள் பலர் இருந்தபோதும் அப்போதைய ஜனாதிபதிக்கும் அவருடன் இணைந்திருந்த 23 அமைச்சர்கள் காரணமாகவும் சரியான குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. ஊழல்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு 30 இற்கும் மேற்பட்ட அறிக்கைகள் பெறப்பட்ட போதும் அப்போதைய ஜனாதிபதி அவருக்கு சாதகமான விடயங்களைத் தவிர வேறு எந்தவிதமான குற்றங்கள் தொடர்பாகவும் சட்ட நடவடிக்கை எடுப்பதில் ஆர்வம் காட்டவில்லை.

அதன் காரணமாகவே வரலாற்றில் ஒரு துர்ப்பாக்கியமான அரசியல் தலைவர் என்ற அவப் பெயரோடு மைத்திரிபால சிறிசேனா விடைபெற வேண்டி ஏற்பட்டது. ஆனாலும் அந்த ஆட்சியில் விடப்பட்ட தவறுகள் இந்த ஆட்சியில் இடம் பெறாது என்பதை சம்பிகவின் கைது சரியாக எதிர்வு கூறுவதாக இருக்கின்றது.

அதனால் ஐ.தே.க.வின் முன்னாள் அமைச்சர்கள் பலருக்கு அதிர்ச்சி வைத்தியம் காத்திருக்கும் என்பதில் சந்தேகம் இருக்காது.

தமிழர்களும் முஸ்லிம்களும் இன அடிப்படையில் வேறாக செயற்படுகின்ற நிலையில் இந்த அரசாங்கத்தை பாதுகாக்க சிங்களவர்கள் ஒன்றுபட வேண்டும் என்ற பிரச்சாரத்தை மேலும் மும்முரமாக மேற்கொள்வதற்குப் பலமான ஒரு அத்திவாரமாக அமைய இருப்பது இத்தகையவர்களது கைதுகளாகும். அதுவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசாங்கத்தின் நிலையைப் பலப்படுத்தும் ஆயுதமாகவும் அமைய இருக்கின்றது.

## முஸ்லிம்கள்... (07 ஆம் பக்கத் தொடர்)

- **முஸ்லிம்களின் பொருளாதார நிலைமை இன்று எப்படிக் காணப்படுகின்றது. அண்மைக் காலமாக முஸ்லிம்களின் பொருளாதாரம் ஒரு சரிவு நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருப்பது தெரிகிறது. இதனை நீங்கள் எப்படிக் காண்கிறீர்கள்?**

ஒரு சரிவுநிலை காணப்படுகிறது என்பது உண்மை. அண்மைக் காலத்தில் நடந்த ஒரு சில அசம்பாவிதங்களே அதற்குக் காரணம். இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களின் வரலாறு 1200 வருடங்களையும் விட அதிகம். ஒரு நாளும் இந்நாட்டிற்கு துரோகம் செய்யாத மக்கள் என்றால் முஸ்லிம் களைத் தவிர வேறு யாருமில்லை. ஆனால் அண்மையில் மதுமாதவ அரவிந்த என்கின்ற பாடகர் ஒரு நேர்காணலில் நாம் மாத்திரம் தான் இலங்கை மக்களுக்கு குண்டை சுமந்து தாக்குதல் நடத்தவில்லை. தமிழர்களும், முஸ்லிம்களும் தாக்கினார்கள். நாம் மாத்திரமே தாக்கவில்லை என்றார்.

இது மிகவும் ஆத்திரமூட்டக்கூடிய கருத்தாகும். இலங்கையின் பொருளாதாரத்தை எடுத்துப் பாருங்கள். வரலாற்றில் பொருட்களை நாம் நல்ல விலை கொடுத்தே வாங்கியுள்ளோம். சர்வதேச சந்தைக்கு நல்ல விலைக்கே விற்பனை செய்துள்ளோம். சர்வதேச சந்தைக்கு ஒருவர் செல்வதாக இருந்தால் இரண்டு விடயங்கள் அங்கு நடைபெறுகிறது. ஒன்று சர்வதேச சந்தையை அவர் காட்டிக் கொடுக்கின்றார். மற்றையது அந்த நாட்டுடன் நல்லுறவைப் பேணுகிறார். இலங்கைப் பொருளாதாரத்தைப் பற்றி பேசும்போது நாம் அங்கிருந்து தான் வர வேண்டும். எமக்குத் தனியாக சம்பாதித்து ஓடி விட முடியாது. மன்னர்களோடு இருந்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றியுள்ளோம். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக வேண்டி பாடுபட்டவர்கள் தான் முஸ்லிம்கள்.

ஆனால் அண்மைக்காலத்தில் அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வெறுப்புச் பிரச்சாரத்தினால் பெரும்பான்மையினருக்கு மத்தியில் உள்ள சிறுபான்மையினரின் வியாபாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. தற்போது ஓரளவுக்குப் பரவாயில்லை. பெரும்பான்மையினர் குறுகிய சிந்தனையிலேயே உள்ளார்கள். கொக்காகோலா, பெப்சி போன்ற சர்வதேச உற்பத்திகளுக்கு அதிக பணம் செலவழிக்கிறார்கள். ஆனால் இங்குள்ள முஹம்மட், அஹம்மடின் புடவைக் கடையை பகிஷ்கரிக்கிறார்கள். இது பற்றிக் கதைப்பதென்றால் அது மிகப்பெரும் பகுதியாகும்.

எமது பொருளாதார பாதிப்புக்கு எமது செயற்பாடுகளும் காரணமாக உள்ளது. எமது சமூகத்தைச் சேர்ந்த ஒரு சில வியாபாரிகளது தில்லுமுல்லு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அடிப்படையில் ஒவ்வொரு மனிதனுக்கும் இஸ்லாத்தை நடைமுறையில் சரியாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். வியாபாரம் என்பது சமுத்திரம். அதில் போக முடியும். ஆனால் சரியான பாதையில் செல்ல வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் வியாபாரி என்று கூறிக்கொண்டு நாங்கள் வியாபாரம் செய்வது எப்படி? ஒரு கடையை நடத்திச் செல்கின்றோம். ஒரு தேநீர் கடையை செய்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். நபி (ஸல்) அவர்கள் தேநீர் கடையொன்றையும் பெட்டிக் கடையாக வைத்திருந்தார். எமது சமூகம் வியாபார சமூகம் என்கிறோம். ஆனால் வியாபாரத்தின் அடிப்படைகள் வித்தியாசமானவை. மூலப்பொருட்களை நாமே தயாரித்து உற்பத்திப் பொருளையும் நாமே தயாரித்து அதைச் சந்தைப்படுத்தி சந்தையில் வெற்றிபெறுபவரே உண்மையான வியாபாரி.

நாங்கள் வியாபாரிகளல்ல. நடுத்தரத்திலுள்ளவர்கள். சாரமொன்றை ஒருவர் உற்பத்திசெய்கின்றார். நாம் அதை வாங்கி இன்னுமொருவருக்கு விற்பனை செய்கின்றோம். உற்பத்தியாளன் எமக்குத் தராவிட்டால் அல்லது நுகர்வோன் எம்மிடமிருந்து அந்தப் பொருளை வாங்காவிட்டால் எமது வியாபாரம் அத்தோடு முடிவடைந்துவிடும். வியாபாரம் என்பது சர்வதேச வர்த்தகம் என்பதை ஒவ்வொரு முஸ்லிமுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் மிகப்பெரும் வியாபாரியாவார், அவரது அடிப்படை அல்அமீன், அஸ்ஸாதிக் ஆகும்.

- **இலங்கையின் பொருளாதாரம் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு மாறிச் செல்கின்றது. ஆரம்பத்தில் சிங்களவர்கள் விவசாயம் செய்தார்கள். முஸ்லிம்கள் வியாபாரம் செய்தார்கள். தமிழர்கள் கல்வியில் மேலோங்கிக் காணப்பட்டார்கள். ஆனால் தற்போது விவசாயம் வெற்றியளிக்காத காரணத்தால் சிங்களவர்கள் வேறு வேறு துறைகளை நாடுகின்றார்கள். சிங்களவர்கள் முஸ்லிம்களது வியாபாரத்திலும் உள் நுழையப் பார்க்கின்ற போது மோதல் வெடிக்கின்றது. இந்நிலைமை எதிர்காலத்தில் இன்னுமின்னும் எப்படியான நிலைமைகளை ஏற்படுத்தும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்.**

இது மிகப்பெரும் பிரச்சினையாகும். தோட்டத் தமிழர்களை எடுத்துப் பார்த்தாலும் நான் நினைக்கவில்லை அவர்கள் இதற்குப் பின்னர் தோட்டத்தில் வேலை செய்ய ஆர்வம் காட்டுவார்கள் என்று. கடந்த ஆட்சியின் போது இந்தியாவிலிருந்து மீண்டும் தமிழ் மக்களை கொண்டு வரப் பார்த்த செய்தியை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அது ஏனென்றால் தோட்டப் பகுதியில் உள்ளவர்களுக்கு தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். கொழும்பிலும் சிலர் வேலைபார்க்கின்றனர். இது போன்று தான் சிங்களவர்களிலும் 70 வீதமானவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வந்தார்கள். அப்போது யாழ்ப்பாண தமிழர்கள் தான் ஒவ்வொரு துறையிலும் பெரியவர்களாக இருந்தார்கள்.

இதேபோன்றதொரு கட்டத்தை அடையப் போய் தான் தமிழ் மக்களுடன் பிரச்சினைப்பட வேண்டியேற்பட்டது. அது படிப்பு சம்பந்தப்பட்டது. தற்பொழுது வியாபாரப் போட்டி. சிங்களவர்கள் பார்க்கிறார்கள் எல்லா வியாபாரத்தையும் நாங்கள் தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று. இந்த நாட்டில் உண்மையில் கிறிஸ்தவர்களே வியாபாரிகளாவர். எந்தவொரு கம்பனியை எடுத்துப் பார்த்தாலும் கிறிஸ்தவர்கள் இருப்பார்கள். இந்நிலையை நாம் அடைய வேண்டும். இன்று மலையகத் தமிழர்கள் எங்களை விட முன்னோக்கிப் போயுள்ளார்கள். எமது வியாபாரம் பெட்டிக்கடைக்குள் தான் உள்ளது. படிப்பை யாராலும் களவெடுக்க முடியாது. அதை யாராலும் நிறுத்த முடியாது. நாம் மீண்டும் படிப்பின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அப்போது மீண்டும் எம்மால் நாடாள முடியும்.


மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுப் போக்குவரத்து... (1 ஆம் பக்கத் தொடர்)

சிங்கள, தமிழ், முஸ்லிம் பயணிகள் 15,000 பேரிடம் பெற்றுக் கொண்ட கருத்துக்களின் அடிப்படையில் அவர்களில் நூறு வீதமானவர்கள் பொதுப் போக்குவரத்துச் சாதனங்களில் ஒலிக்க விடப்படும் இசை தமக்குத் தொந்தரவாக இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளனர் என தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவிக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பொதுப் போக்குவரத்து சாதனங்களில் ஒலிபரப்புவதற்கான ஆயிரம் மெல்லிசைப் பாடல்களையும், பயணிகளுக்கு அறிவூட்டப்பட வேண்டிய வீடியோக்களையும் அரசாங்கம் வழங்கவுள்ளது. இவை ஒலிக்கச் செய்யப்பட வேண்டிய டெசிபல் அளவு தொடர்பில் நிபுணத்துவ ஆலோசனை பெறப்படும் என போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இம்மாதம் 31 ஆம் திகதி குறித்த பாடல்களும், வீடியோக்களும் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் செய்வோரிடம் வழங்கப்படும். ஜனவரி 01 ஆம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வரும். பயணிகளின் காதுகளைச் சென்றடைய வேண்டியவற்றைத் தீர்மானிக்கும் இந்தச் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக இன்னும் பல சமூக செயற்பாட்டாளர்களும் திட்டங்களை முன்வைத்துள்ளனர்.

## சூழல்... (01 ஆம் பக்கத் தொடர்)

நுரைச்சோலை மின்னுற்பத்தித் திட்டத்தினால் கற்பிட்டி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டிய அவர், இந்தத் திட்டத்துக்குப் பதிலாக புதுப்பிக்கப்படும் சக்தி வழங்கக் கூடிய ஜெனரேட்டர்களை நிர்மாணிக்குமாறு வேண்டியிருந்தார்.

இதற்கு முன்னர் ஜப்பானுடைய மின் உற்பத்தித் தொழிற்சாலைகள் இங்கு நிறுவப்பட இருந்த வேளையில் கிறிஸ்தவ தேவாலயங்களின் தலையீட்டினால் அது நிறுத்தப்பட்ட பின்னர், சீனாவுடைய மூன்று மின்னுற்பத்தி நிலையங்கள் இங்கு நிறுவப்பட்டன.

கருதினாலுடைய முறைப்பாடுகளைத் தொடர்ந்து, எதிர்கால மின்னுற்பத்தித் திட்டங்களுக்கான கமிட்டிகளில் கருதினாலுடைய பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைக்குமாறு மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர கருதினாலுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மின்னுற்பத்திக்கு காற்று, சூரிய சக்தி போன்றவற்றை இலங்கை பயன்படுத்துவது குறைவாக இருப்பதாகவும், எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க சக்திப் பிறப்பாக்கத்தில் இலங்கை கவனம் செலுத்த வேண்டும் என்றும் கருதினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஓவல்வீவ்... (1 ஆம் பக்கத் தொடர்)

அரச ஊழியர்களுக்கென நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த வீட்டுத் தொகுதியில் மூன்று அறைகளைக் கொண்ட 304 வீடுகளும், 2 அறைகளைக் கொண்ட 304 வீடுகளுமாக 608 வீடுகள் உள்ளடங்குகின்றன. இவை அனைத்தும் ஏற்கனவே விற்பனை செய்து முடிக்கப்பட்டுள்ளன. முறையே இவை 880 சதுர அடிகளையும், 680 சதுர அடிகளையும் கொண்ட இந்த வீட்டுத் தொகுதி 25 மாடிகளைக் கொண்டதாகும்.

2014 ஆம் ஆண்டில் தற்போதைய பிரதமர் ஜனாதிபதியாக இருக்கும் வேளையில், பாதுகாப்பு அமைச்சராக இருந்த தற்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவின் யோசனையின் பேரில் இது ஆரம்பிக்கப்பட்டது.

பி. சரவணமுத்து மைதானத்துக்கு அண்மையில் அமைந்துள்ள இந்த வீட்டுத் தொகுதி 2014 நவம்பரில் ஆரம்பிக்கப்பட்ட போதும், 2015 இல் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டு, மீண்டும் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டது. 2020 மார்ச் மாதத்தில் இதன் பணிகளைப் பூரணப்படுத்தப்படவுள்ளன. இதற்கான மொத்தச் செலவு 6 பில்லியன் ரூபாவாகும். 15 அல்லது 20 வருட காலமாக அரச சேவையில் இருப்பவர்களுக்கே இங்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## தாய்நாட்டுக்கு... (12 ஆம் பக்கத் தொடர்)

இலங்கை முஸ்லிம்கள் சமாதான விரும்பிகள். வரலாறு நெடுகிலும் அவர்கள் இந்நாட்டில் வாழ்ந்த எமது மூதாதையர்கள் மேலே குறிப் பிட்ட இஸ்லாமிய கோட்பாடுகளைப் பேணிய வகையில் எல்லா சமூகங்களுடனும் பொதுவாக வும் சிங்கள பௌத்தர்களுடன் குறிப்பாகவும் சமாதானமாகவும் நல்லிணக்கத்துடனும் வாழ்ந்து வந்துள்ளனர். அதாவது நற்பிரஜைகளாக வாழ்ந்து இந்நாட்டின் வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளனர். இது பற்றி வரலாற்றுத் துறைப் பேராசிரியை லோனா தேவராஜா எழுதிய "The Muslims of Sri Lanka One Thousand Years of Ethnic Harmony 900-1915" எனும் நூல் இலங்கை முஸ்லிம்களின் சகவாழ் விற்கும் தேசிய பங்களிப்புக்கும் ஆதார பூர்வமாக சாட்சி பகர்கின்றது. அந்த வகையில், இந்நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் எமது முன் னோர்கள் வழங்கிய மகத்தான பங்களிப்புக்கள் ஆவணங்களாக தொகுக்கப்பட்டு இந்நாட்டில் வாழும் அனைவருக்கும் தெளிவுபடுத்தப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**அறபுக் கலாசாலை நிர்வாகிகளின் பொறுப்பு**

தேச நிர்மாணத்திற்கு பங்களிப்புச் செய்தல், நற்பிரஜையாக வாழ்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் எமது சமூகத்துக்கு மேலும் தெளிவூட் டும் வகையில் அறபுக் கலாசாலைகளின் கலைத் திட்டத்தில் பின்வரும் பாடங்கள் உள்வாங்கப் பட முடியும்.

- பிக்ஹுத் தஆயுஸுஸ் ஸில்மி (Peace Studies)
- பிக்ஹுல் முவாதனா அஸ்ஸாலிஹா (Good Citizenship)
- பிக்ஹுல் அகல்லிய்யாத் (Fiqh of Minorities)
- பிக்ஹுல் வாகிஃ (Fiqh of Contemporary Affairs)

## ஒவ்வொரு... (01 ஆம் பக்கத் தொடர்)

முன்னுரிமைப் பட்டியலில் அடங்குகின்றன. அணைக்கட்டுகள் நிர்மாணித்தல், குளங்கள் மற்றும் கிணறுகளை அபிவிருத்தி செய்தல் என்பவற்றையும் தெரிவு செய்ய முடியும். குடிநீர், சுகாதார நிலையங்கள், பாடசாலை அபிவிருத்திகள் போன்றவையும் தெரிவுக்குள் அடங்குகின்றன. தெரிவு செய்யும் ஒவ்வொரு திட்டத்துக்கும் 500,000 முதல் 20 இலட்சம் ரூபா வரை வழங்கப்படவுள்ளன.

உள்ளூர் அரசியல்வாதிகளையும் இணைத்ததான கிராமியக் குழுவொன்று இந்தத் திட்டங்களைத் தீர்மானிப்பதற்காகத் தெரிவு செய்யப்படும். எல்லா அரசாங்க உத்தியோகத்தர்களும் இந்தத் திட்டத்தில் இணைக்கப்படுவர். ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்தக் குழுவுக்கான ஒருங்கிணைப்பாளராகத் தொழிற்படுவர் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட திட்டங்கள் அனைத்தும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகாரத்துக்காக பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இதேவேளை பிரதமரின் வழிகாட்டலின் கீழ், கிராமத்துக்கொரு வீடு திட்டமும் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த வகையில் 14,021 கிராம சேவகர் பிரிவிலும் ஒவ்வொரு வீடு 2020 ஆம் ஆண்டுக்குள் நிர்மாணிக்கப்படவுள்ளது.

## முஸ்லிம்கள்... (10 ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதியை பிரதானமாகக் கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் முஸ்லிம் பா.உறுப்பினர்களும் இடம் பெற வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஆகக் குறைந்தது ஒரு முஸ்லிம் பா. உறுப்பினரையாவது தேர்ந்தெடுப்பது முக்கியம். ஏனெனில், முஸ்லிம்களின் சிறுபான்மை கட்சிகளை வைத்து பேரம் பேசும் அரசியல் முடிவடைந்து விட்டது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுடன் முஸ்லிம் அரசியல் தலைமைகளும், மார்க்கத் தலைமைகளும், புத்திஜீவிகளும் முஸ்லிம் சமூகத்தை சிறந்த முறையில் வழிநடத்த வேண்டும். இந்த அரசியலில் முஸ்லிம்கள் எவ்வாறு பங்குகொள்ள வேண்டும் என்பதை முஸ்லிம்களுக்கு விழிப்பூட்ட வேண்டும்.

## மூன்றில் இரண்டு... (10 ஆம் பக்கத் தொடர்)

பெரும்பான்மையை பெற்று விட்டால் 19 ஆம் திருத்தச் சட்ட மூலம், தகவல் அறியும் சட்டம் போன்ற ஜனநாயக வெற்றிகள் மீண்டும் இல்லாமலாக்கப்படலாம். எனவே அவ்வாறான சக்திகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தடுப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் ஆகின்றது. தேர்தலின் பின்னர் பதவிகளுக்காக பணத்துக்காக தத்தமது ஃபைல்களை பாதுகாத்துக் கொள்வதற்காக கட்சி மாறுவதற்கு வாய்ப்பு உள்ள தேசிய கட்சிகள் பிராந்தியக் கட்சிகள் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் போன்றவற்றுக்கு வாக்களிப்பதை தவிர்த்து, பன்மைத்துவ சிந்தனைக்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் உறுதியாக நிலைத்து பலமாக குரல் கொடுக்கக் கூடிய சக்திகளை பாராளுமன்றத்திற்கு அனுப்புவது அவசியமாக இருக்கின்றது. எந்த ஒரு கட்சியிலும் நிலையான உறுப்புரிமை பெறாத, மிதக்கும் வாக்காளர்கள் என்று அழைக்கப்படும் அனைவரும் ஒருமித்து ஆதரிக்கக் கூடிய சக்தி ஒன்று தேர்தலில் நிற்குமாக இருந்தால் அவ்வாறான சக்திகளை வெற்றி பெறச் செய்வதற்காக எமது வாக்குகளை பயன்படுத்துவது ஏற்படப்போகும் நஷ்டங்களை குறைக்கும்.

## தேசிய ஒருமைப்பாடு... (10 ஆம் பக்கத் தொடர்)

பிரதான கட்சிகளில் பழைய கட்சியான ஐ.தே.க. ஜனநாயகத்தைப் பற்றிப் பறைசாற்றிப் பேசினாலும் அக்கட்சியினுள்ளே இப்போது ஜனநாயகத்துக்காகப் போராட வேண்டிய நிலையும் அடுத்த பரம்பரைக்கான தலைமைத்துவம் உருவாக்கப்படாத ஒரு தலைமைத்துவமற்ற கட்சியாக மாறியுள்ளது. தமக்கிடையே ஒரு வேட்பாளரை தேர்ந்தெடுக்க வெளிப்படையான கருத்தைத் தெரிவிப்பதற்கும் முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதாவது ஒரு கட்சி ஆட்சியமைப்பதற்கு மிக உறுதியான அடிப்படையும் கட்சியைத் தெளிவான பாதையில் வழிநடாத்த சிறந்த முகாமைத்துவக் குழுவொன்றும் அவசியம். இவ்வாறான கட்டமைப்பை திடீரென உருவாக்கவும் முடியாது. எனவே இக்கட்சி மீண்டுவர இன்னும் பல காலம் காத்திருக்க வேண்டி வரும்.

எனவே தேசிய ஒருமைப்பாட்டைக் கருத்திற் கொண்டும், நாம் இலங்கையர், இலங்கையில் தான் நாம் பெரும்பான்மை சமூகத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்து வாழ வேண்டிய கட்டாயத் தேவையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களிப்பதே சிறந்ததென்பது எனது கருத்து.

## எதிர்காலத்தில்... (10 ஆம் பக்கத் தொடர்)

இனவாதத்தை மையமாக கொண்ட அரசியல் போக்கு யாவருக்கும் பொருந்தாத ஒன்றென்பதே நாமறிந்தது. எனினும் சிங்கள, தமிழ், முஸ்லிம் கட்சிகள் உண்மையிலேயே மக்களின் கோரிக்கைகளை அபிலாசைகளை பூரணமாக நிறைவேற்ற இதுவரையிலும் முடியாமலேயே காணப்படுகின்றன.

தமது உரிமைகளை முன்னெடுக்க புறப்பட்ட கட்சிகள் தமது நிகழ்ச்சி நிரலுக்குள் சுருங்கிக் கொண்டு விட்டன. கடந்த ஜனாதிபதியின் தெரிவில் சிறுபான்மையினரின் உளவியல் போக்கும் பெரும்பான்மையினரின் உளவியல் போக்கும் தெளிவாக பிரதிபலித்தன. எனினும் நாட்டின் வளர்ச்சியையும் எதிர்கால சந்ததி குறித்த நீண்ட கால பார்வையும் சிறுபான்மையினர் கருத்திற்கொள்ள வேண்டும். பெரும்பான்மை கட்சிகளோடு தொழிற்படும் விதத்திலான ஆளுமை மிக்க மக்கள் பிரதிநிதிகளையே எதிர்வரும் பொதுத் தேர்தலில் குறிப்பாக சிறுபான்மையினர் கருத்தில் கொள்ள வேண்டும். இரு பெரும் கட்சிகளிலும் சமனான சிறுபான்மை பிரதிநிதிகள் உருவாக்காத போது நமது உரிமைகளை வென்றெடுப்பதில் பாரிய சவால்களை எதிர்கொள்வதை தவிர்க்க இயலாது. சிந்தித்து வாக்களிப்போம்.

## பொதுவாக... (10 ஆம் பக்கத் தொடர்)

உதாரணத்திற்கு புத்தளம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அங்கு மு.கா தனியாகவும், அ.இ.ம.கா தனியாகவும் போட்டியிடுகின்ற போது வாக்குகள் பிரிவடைந்து ஒரு உறுப்பினரை தெரிவு செய்ய முடியாமல் போகலாம். அவ்வாறான இடங்களில் வியூகங்களை பொது உடன்பாட்டின் அடிப்படையில் அமைக்க வேண்டும். சில மாவட்டங்களில் ஒரு பொதுவான கூட்டணியினூடாகவும் அல்லது ஒரு பிரதான கட்சியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையினூடாக ஒரு கூட்டணியாகவும் போட்டியிடலாம். இத்தகைய பேச்சுவார்த்தைகள் ஏலவே அரசியல் தலைமைகளுக்கு மத்தியில் நடந்துகொண்டிருக்கிறது. அது விரிவாக புள்ளிவிபரங்களுடன் ஆராயப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவர வேண்டிய தேவை இருக்கின்றது.

அதேபோன்று தான் தற்போது ஆட்சியில் இருக்கின்ற பொதுஜன பெரமுன கட்சியினூடாகவும் அந்தந்த பிரதேசங்களில் வெற்றிவாய்ப்பு அதிகமாகவுள்ள முஸ்லிம் தலைவர்கள், அபிமானமுள்ள தலைவர்கள் அதனூடாக அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிக்கக்கூடியதற்கு அமைவாக தங்களை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டிய தேவையும் இருக்கின்றது. ஆகவே நாம் பொதுவாக எந்தவொரு கட்சியுடனும் தனித்துவமாக முழுமையாக பிரிந்து சென்று விட முடியாது. ஏனென்றால் நாம் தேசிய ரீதியாக சமூகம் என்ற வகையில் தேசியக் கட்சிகளுடன் செல்ல வேண்டிய தேவை இருக்கின்ற அதேநேரம் பொதுவாக ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் பிராந்திய ரீதியாக வலுப்பெறக்கூடிய விதத்தில் தனித்துவமாகவும் இலங்கை அரசியலுக்குள் நிலைத்திருக்க வேண்டும்.

## இலங்கை... (11 ஆம் பக்கத் தொடர்)

மறுபுறத்தில் எம்.எம்.டி.ஏ இன் கீழ் விவாகரத்து கிடைக்கிறது. சட்டத்தின் பிரிவு 28 (2) இன் கீழ் பரஸ்பர ஒப்புதல் (முபாரத்) மற்றும் திருமண முறிவு (குலா) ஆகியவற்றின் அடிப்படையில் விவாகரத்துப் பெற முடிகிறது. உண்மையில், எம்.ஆர்.ஒ.வால் ஆளப்படுபவர்களின் நலனுக்காக இதேபோன்ற காரணங்களை அங்கீகரிப்பதற்கானதொரு முயற்சி 1956 - 1959 ஆம் ஆண்டுகளில் திரு. ஏ.ஆர்.எச்.கனகரத்ன கியூ.சி. தலைமையிலான விவாக விவாகரத்து ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட போதும், இந்த விடயங்களில் அவர்களால் ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லை.

'ஒரு நாடு, ஒரு சட்டம்' கருத்தை முன்வைப்பவர்கள் முதலில் இரண்டு வகைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். (பல உள்ளன, ஆனால் நான் இரண்டை மட்டுமே தேர்ந்தெடுத்துள்ளேன்) அவர்கள் ஒரு சட்டத்தைத் தெரிவு செய்ய முன்னர் தாம் பிறந்த காலத்திலிருந்து தனியார் சட்டங்களால் நிர்வகிக்கப்பட்டவர்களை ஒரு முறை கேட்க வேண்டும். தற்போதுள்ள பொதுச் சட்டங்கள் திருப்திகரமாக இல்லாவிட்டால், முதலில் அவை மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும். இதனால் ஏனைய சட்டங்களால் நிர்வகிக்கப்படுபவர்கள் கூட ''ஒரு சட்டத்தால்'' ஈர்க்கப்படலாம்.

எனது அவதானத்தின் படி அதுவே முன்னோக்கிச் செல்லும் பாதை. எனது கருத்துப்படி, 'ஒரு நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்து தேசிய ஒற்றுமை மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான ஸ்திரத்தன்மையையும் சமூக நல்லிணக்கத்தையும் அடைவதற்கான அடிப்படையை வழங்குகிறது. சமூக மற்றும் சட்டத் சீர்திருத்தங்கள் மூலம் இந்தக் கருத்து முன்னோக்கி கொண்டு செல்லப்படலாம், ஒரு பொதுவான சட்ட நெறிமுறையை உருவாக்கும்போது, ஒவ்வொரு சட்டத்திலும் சிறந்ததை ஒருவர் தேர்ந்தெடுத்து அவற்றை ஒன்றாக இணைக்க முடியும்.

**முடிவுரை**

'இன மற்றும் மத வேறுபாடுகளால் கடுமையாகப் பிரிக்கப்பட்டு, பன்முகத் தன்மைக்கு சாதகமாக ஒதுக்கப்படாத ஒரு நாடு அதன் மக்களிடையே கடுமையான மோதல்களைத் தவிர்க்கக் கூடிய ஒரு சிறந்த வழியாக 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கருத்து இருக்கலாம் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும், 'ஒரு நாடு, ஒரே சட்டம்' கொள்கை தாக்கம் மிக்கதாக அமைய வேண்டுமானால், வசதியான அரசியலமைப்பு விதிகளை இயற்றுவதற்கான தயாரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம். அதேபோல சட்ட ஆராய்ச்சிகளும் வரைவுகளும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திறன்களும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

இந்த கட்டுரையில் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, வெற்றியை அடைவதற்கான 'ஒரு நாடு, ஒரு சட்டம்' கொள்கை சிறுபான்மை சமூகங்களை ஒடுக்குவதற்கான வழிமுறையாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது. மேலும் ஒரு சட்டத்தை ஒப்புக் கொள்ளுமாறு கேட்கப்படுபவர்களுக்கு எந்தவொரு கட்டாயமும் இல்லாமல் சுதந்திரமாக அவ்வாறு செய்வதற்கான தேர்வு வழங்கப்பட வேண்டும். சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை நோக்கி தேசத்தை ஊக்குவிக்கும் மக்களின் நல்வாழ்வும் ஒற்றுமையுமே இறுதி நோக்கமாக இருக்க வேண்டும். இலங்கை அதன் சட்டங்களில் பெரும் பன்முகத்தன்மையைக் கொண்டுள்ளது.

உண்மையில், பெரும்பாலான இலங்கையர்கள் தங்களது செழுமையான சட்டப் பாரம்பரியத்தைப் பற்றி பெருமைப்படுகிறார்கள். எனவே, அந்த பன்முகத்தன்மையைப் பாதுகாக்கவும், பல்வேறு சட்டங்களிலும் அதன் நடைமுறைகளிலும் சகிப்புத் தன்மையின் அளவை அதிகரிக்கவும் ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட வேண்டும். மாயா ஏஞ்சலோ கூறியது போல், ''பன்முகத்தன்மையில் அழகு இருக்கிறது, வலிமை இருக்கிறது என்பதை பெற்றோர்கள் ஆரம்பத்தில் இளைஞர்களுக்கு கற்பிக்க வேண்டிய நேரம் இது.''

பன்முகத் தன்மையை வளர்ப்பது ஒரு தலைமுறையைத் தாண்டிய கடின உழைப்பை வேண்டி நிற்கும் என்பதை வலியுறுத்த வேண்டியது அவசியம். தேசத்தில் நிலவும் அமைதியையும் நட்பையும் அழிக்க முட்டாள்தனமான ஒரு கணம் போதுமானது. எந்த நேரத்திலும் வெடிக்கக்கூடிய ஒரு விறுவிறுப்பான எரிமலையின் மேல் தான் வாழ்கிறோம் என்பதை மனிதக் குடும்பம் உணரத் தொடங்கியுள்ளது. இந்த பதற்றம் இலங்கையிலும், குறிப்பாக ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பின் பின்னர் உணரப்படுகிறது. சமூக ஊடகங்கள் வெறுப்புப் பேச்சை பரப்புவதற்கும் தீவிரவாத மனநிலையை வளர்ப்பதற்கும் ஒரு வலுவான, ஆபத்தான தளமாக அமைகின்றன என்பதை உணர வேண்டிய நேரம் இது.

எனவே வெறுப்புப் பேச்சு மற்றும் பயங்கரவாதத்தைக் கிளறுதல் மூலம் சமுதாயத்தை சீர்குலைப்பவர்களைக் கையாளக்கூடிய வகையில் பயனுள்ள சட்ட வழிமுறைகளை அமைப்பது முக்கியம். தெற்காசியாவில் மனித உரிமை மீறலில் ஈடுபடுவோரில் இலங்கை 52 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் இருக்கிறது. பங்களாதேஷ் (45 புள்ளிகள்), பூட்டான் (43 புள்ளிகள்), பாகிஸ்தான் (41 புள்ளிகள்), மாலத்தீவு (23 புள்ளிகள்), நேபாளம் (24 புள்ளிகள்) மற்றும் இந்தியா (24 புள்ளிகள்) அடுத்தடுத்த நிலைகளில் இருக்கின்றன.

இலங்கை சட்ட அமுலாக்க முகவர் நிறுவனங்கள் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தும் போது, பாகுபாடின்றி சட்டம் ஒழுங்கைப் பேணுவதில் உறுதியாக இருப்பது அவசியமாகிறது. நல்ல நிர்வாகம், திறமையான கொள்கை நடைமுறைகள் மற்றும் சுயாதீன நீதி மனப்பான்மை ஆகியவற்றின் மூலம்தான், அமைதியான, துடிப்பான மற்றும் ஜனநாயக தேசமாக இலங்கை வளர முடியும். இதில் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைகள் உள்ள மக்கள் பலவிதமான தனியார் சட்டங்களை அனுபவித்து ஒற்றுமையுடன் வாழ முடியும், அல்லது மாற்றீடாக அனைத்து மக்களுக்கும் ஒரே சட்டத்தை ஒரே நாட்டில் நடைமுறைப்படுத்த முடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

# விளையாட்டு

## 23 போட்டிகளில் ஒரேயொரு வெற்றி. பக்கீர் அலியின் பயிற்றுவிப்பாளர் சேவை நிறைவடைகிறது



14 வருடங்களாக இலங்கைக்கு கால்பந்தாட்டப் போட்டிகள் மூலம் எந்தப் பதக்கங்களும் கிடைத்திராத நிலையில் கால்பந்துப் பயிற்சியாளராக வெளிநாட்டவர் ஒருவரை நியமிப்பதற்கு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளம் தீர்மானித்திருக்கிறது. இதற்கென இணையத்தளம் மூலமாக விண்ணப்பம் கோரப்படவுள்ளது.

கடைசியாக காத்மண்டுவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 23 வயதின் கீழ் (ஆண்கள்) அணியொன்று கலந்து கொண்ட போதும் உதைபந்தாட்டம் மூலம் இலங்கைக்கு எந்தப் பதக்கமும் கிடைக்கவில்லை. கடந்த இரண்டு வருட காலங்களில் தேசிய உதைபந்தாட்ட அணி மற்றும் 23 வயதின் கீழான அணிகளின் பயிற்சிகளுக்காக 12 கோடி ரூபா அளவில் செலவு செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும் உலக உதைப் பந்தாட்ட தரப்படுத்தலில் இலங்கை 210 நாடுகளில் 205 ஆவது இடத்தில் இருக்கிறது.

தற்போதைய பயிற்சியாளர் ரூமி பக்கீர் அலியின் கடந்த இருவருட சேவைக் காலத்தில் கலந்து கொண்ட சர்வதேச மற்றும் சினேகபூர்வ போட்டிகள் 23 இல் இலங்கை அணி பங்களாதேஷுடனான போட்டியொன்றில் மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறது. இந்தப் போட்டிகள் அனைத்திலும் இலங்கைக்கு எதிராக 62 கோல்கள் போடப்பட்ட போதும் இலங்கையில் 5 கோல்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்திருக்கிறது.

அந்த வகையில் தற்போதைய பயிற்றுவிப்பாளர் பக்கீர் அலியின் சேவைக் காலத்தை மார்ச் மாதத்துடன் முடித்துக் கொள்வதற்கு உதைபந்தாட்டச் சம்மேளனம் தீர்மானித்திருக்கிறது. பிற்போடப்பட்ட பங்கபந்து வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகளே அவருடைய இறுதிப் போட்டிகளாக அமையவுள்ளது. இந்த வகையில் பதக்கம் பெறாத 14 வருடங்களில் பக்கீர் அலியின் இரண்டு வருடங்களும் உள்ளடக்கப் படுகின்றது.

இலங்கை இறுதியாக 2006 தெற்காசியப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றபோது அணியின் பயிற்சியாளராக கொரியாவைச் சேர்ந்த ஜங் ஜுங் பயிற்சியாளராகக் கடமையாற்றினார். இதற்கு முன்னர் 1995 இல் சார்க் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற போது அணியின் பயிற்சியாளராக பிரேசில் பயிற்சியாளர் மாகோஸ் பெரெய்ரா கடமையாற்றினார்.

இதேவேளை கடந்த இரு வருடங்களாக தேசிய உதைபந்தாட்ட அணியின் முகாமையாளராகக் கடமையாற்றிய சுனில் செனவீரவையும் தனது பதவியில் இருந்து ஒரு மாத காலத்துக்குள் விலகிக் கொள்ளுமாறு உதைபந்தாட்டச் சம்மேளனம் கோரியுள்ளது. காத்மண்டு தோல்விகள் தொடர்பில் முகாமையாளரின் அறிக்கையைச் சமர்ப்பித்த சுனில் செனவீர, தற்போதைய பயிற்சியாளர் உட்பட நிபுணத்துவ அதிகாரிகள் அனைவரதும் சேவைக் காலத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் இவர்களுக்குப் பதிலாக வெளிநாட்டு அதிகாரிகளை நியமிக்க வேண்டும் எனவும் பரிந்துரைத்திருந்தார். தற்போது சேவையிலுள்ள பயிற்றுவிப்பாளர் மற்றும் நிபுணத்துவ அதிகாரிகளின் தகைமை கேள்விக்குட்படுத்தப் பட வேண்டிய நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

உலக உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அங்கத்துவ நாடொன்றின் தேசிய உதைபந்தாட்ட அணியின் பிரதான பயிற்றுவிப்பாளர் ஏ-4 தொழில் ரீதியான உதைபந்தாட்ட பயிற்சியாளர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும். இலங்கையில் இந்தத் தகுதியுடையவர்கள் எவரும் இல்லை என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.





'மவுன்ட் ஹிரா' சர்வதேச பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா நிகழ்வு, அதன் பணிப்பாளர் ஸாஹித் மற்றும் அதிபர் திருமதி நாஷிதா நவ்ஃபல் ஆகியோரின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. பாணந்துறை, ஹேனமுல்லை உம்முல் மலீஹா கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், வளவாளர் ஸாபிர் ஹாஷிம் அதிதியாகக் கலந்துகொண்டு விசேட சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில், திறமைகளை வெளிக்காட்டிய மாணவ மாணவிகளை அவர் பாராட்டியதுடன், பரிசில்களையும் வழங்கி வைத்தார்.







இன்று இளைஞர்கள் தனாகவே முன்வந்து பல நல்ல விடயங்களில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். இது இந்த நாட்டிக்கு மற்றுமன்றி தாங்கள் சூழ்ந்து வாழும் சமூகத்திற்கு ஏற்பட போகின்ற நல்ல விடயமாகும். நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ அவர்களின் எண்ணக்கருவுக்கமைவாக இன்று சகல நகரங்களும் சுத்தப்படுத்தி அழகு படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்ட போது நாட்டில் உள்ள இளைஞர்கள் இன்று இதற்கு துணை புரிந்து வருகின்றனர்.






Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org